# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 01 | வள்ளுவர் ஆண்டு 2048 | வைகாசி 20, சனிக்கிழமை 03.06.2017 | கதிர் 209


### இன்று அடை மழை

கொழும்பு உட்பட நாட்டின் பல மாவட்டங்களில் இன்று அடை மழை பொழியும். ஒரே நாளில் சுமார் 4 அங்குலம் (100 மில்லிலீற்றர்) மழை பொழிய வாய்ப்பு இருப்பதாக வளிமண்டலத்திணைக்களம் நேற்று மாலையில் அறிவித்தது. கொட்டும் மழை பெய்தால் மீண்டும் வெள்ளம் பெருகும் என எச்சரிக்கப்பட்டள்ளது.

★ ஆட்சி முறைமை ★ ஜனாதிபதியின் அதிகாரம்

★ அதிகாரப் பரவலாக்கம் ★ தேர்தல் முறைமை

# உத்தேச புதிய அரசமைப்பில் எல்லாம் கலப்பு முறையில்!

## அனைத்துத் தரப்பினரையும் இணங்க வைக்கும் எத்தனம்

கொழும்பு, ஜூன் 03

**புதிய உத்தேச அரசமைப்புக்கு நாட்டின் அனைத்துத் தரப்பினரையும் இணங்க வைப்பதற்காக அரசமைப்பின் எல்லா அடிப்படை அம்சங்களிலும் உயர் கலப்பு (Hibrid) முறைக்கு இணங்குவதென அரச உயர்பீடம் தீர்மானித்திருப்பதாக மிக நம்பகரமாக அறிய வருகின்றது.**

நாட்டின் ஆட்சி முறைமை, நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை மாற்றுதல், தேர்தல் முறைமை, அதிகாரப் பரவலாக்கம் போன்ற அடிப்படை அம்சங்கள் அனைத்தும் அவை தொடர்பிலான எதிரும்புதிருமான இருதரப்பு நிலைப்பாடுகளையும் உள்ளடக்கிய ஓர் உயர் கலப்புப் பொறிமுறைக்கு உட்பட்டவையாக முன்னெடுக்கப்படும் எனத் தெரிகின்றது.

இத்தகைய கலப்பு முறைமைத் திட்டத்துக்கு இடமளிக்கத் தக்க வகையில் அரசமைப்பு வழிகாட்டல் குழு இறுதி செய்யும் இடைக்கால அறிக்கை அமையவிருக்கின்றது என்றும் அறிய வந்தது.

அதற்கேற்றவகையில் இடைக்கால அறிக்கையைத் தயார்செய்வதற்

பக்கம் 18 >>>

### திருச்சி சிறையில் 3 ஈழத்தமிழர்கள் உண்ணாவிரதம்

அகதி முகாமில் குடும்பத்துடன் வசித்து வந்த தங்கள் மீது பொய் வழக்குப் போடப்பட்டுள்ளது எனத் தெரிவித்து இலங்கைத் தமிழர்கள் மூவர் நேற்று ஆறாவது நாளாக திருச்சி மத்திய சிறை வளாகத்தில் உள்ள சிறப்பு முகாமில் உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை நடத்தி வருகின்றனர்.

கடந்த ஆண்டு ஜூன் மாதம் சட்ட விரோதமாக வெளிநாடு செல்ல முயன்ற குற்றச்சாட்டில்

பக்கம் 18 >>>

### மண் சரிவு அபாய எச்சரிக்கை நீடிப்பு!

ஏழு மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்டுள்ள மண் சரிவு அபாய எச்சரிக்கை மேலும் நீடிக்கப்பட்டுள்ளது.

இரத்தினபுரி, கேகாலை, காலி, களுத்துறை, மாத்தறை, அம்பாந்தோட்டை மற்றும் நுவரெலியா ஆகிய மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்ச

பக்கம் 18 >>>

## ஈழத் தமிழரின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கிறது பிரிட்டிஷ் தொழிற்கட்சி

### அந்நாட்டு பொதுத் தேர்தலை ஒட்டிய அறிக்கையில் தெரிவிப்பு



பிரித்தானியப் பொதுத் தேர்தலில் களமிறங்கியுள்ள தொழிற்கட்சி இலங்கைத் தமிழர்களின் சுயநிர்ணய உரிமையையும் சர்வஜன வாக்கெடுப்பு மூலம் தமது எதிர்காலத்தை தீர்மானிப்பதற்கு அவர்களுக்கு உள்ள உரிமை

பக்கம் 18 >>>

### அளப்பு அருணாசலம்



அப்ப... அவருக்கு இதயமும் ஹைபிரிட் கலப்பு எண்டு சொல்லுங்கோ....

## சு.க. தலைவராக மஹிந்தவை அறிவிக்கக் கோரி வழக்கு!

### விசாரிப்பது குறித்து ஜூலை 07 இல் முடிவு




கொழும்பு, ஜூன் 03

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் பதவியில் மீண்டும் அமர்த்தும் உத்தரவை விடுக்குமாறு கோரித்

பக்கம் 18 >>>

## கோட்டாபய விரைவில் கைது?



கொழும்பு, ஜூன் 03

2012 நவம்பர் 9 ஆம் திகதி வெலிக்கடை சிறைச்சாலையில் இடம்பெற்ற படுகொலைகள் மற்றும் 2013 ஓகஸ்ட்டில் ரத்துபஸ் வெலவில் சுத்தமான குடிதண்ணீர் கேட்டு ஆர்ப்பாட்டம் நடத்திய கிராமமக்களைக் கலைப்பதற்கு அவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்து சிலரைக் கொன்று பலரைக்

பக்கம் 18 >>>

## ஞானசாரருக்குப் பாதுகாப்பு அமைச்சர் விஜேதாஸவாம்!

### குற்றம் சுமத்துகிறார் அஸாத் சாலி





கொழும்பு, ஜூன் 03

இனமதவாத அவதூறுப் பிரசாரங்களை முன்னெடுத்து வரும் ஞானசார

பக்கம் 18 >>>

## ஒருவரின் உடலில் இரு இதயங்கள்!

### கோவை மருத்துவர்கள் சாதனை

ஒரே மனிதனின் உடலில் இரண்டு இதயங்களைச் செயற்பட வைப்பதற்கான அறுவை சிகிச்சையை தமிழ்நாடு கோயம்புத்தூர் மருத்துவர்கள் வெற்றிகரமாக செய்து முடித்துள்ளனர். இதற்கான அறுவை சிகிச்சை மொத்தம் மூன்றரை மணிநேரம் நடைபெற்றுள்ளது.

பக்கம் 18 >>>

## எதிரணிக்கு அரசு பயந்ததால் அவசரகால நிலை தவிர்ப்பு

கொழும்பு, ஜூன் 03

வெள்ளம் மற்றும் மண் சரிவால் முன்னெப்போதும் இல்லாத வகையில் நாட்டில் இயற்கைப் பேரிடர் ஏற்பட்டமையை அடுத்து, மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளைத் துரிதகதியில் முன்னெடுப்பதற்கு வசதியாக அவசரகால நிலைமையைப் பிரகடனப்படுத்துமாறு சில தரப்புகள் அரசுத் தலைமைக்கு ஆலோசனை கூறினவாம். சில வெளி

பக்கம் 18 >>>

## வெள்ள உயிரிழப்பு 300ஐத் தாண்டுமாம்!

கொழும்பு, ஜூன் 03

வெள்ளம் மற்றும் மண் சரிவு அனர்த்தங்களினால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 300 ஐத் தாண்டியிருக்கலாம் என அஞ்சப்படுகின்றது.

அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன

பக்கம் 18 >>>

## தமது கைதுக்கு எதிராக நஷ்டஈடு ரூ.20 கோடி கோருகிறார் நாமல்

### அது தொடர்பான வழக்கு விசாரணைக்கு ஏற்பு



கொழும்பு, ஜூன் 03

றகர் விளையாட்டின் அபிவிருத்திக்காக நிறுவனம் ஒன்று வழங்கிய எழுநூறு கோடி ரூபாவைத் தவறாகக் கையாண்டார் என்ற குற்றச்சாட்டின் பேரில் தம்மைக் கைது செய்து ஒரு வாரத்துக்கு மேல் விளக்க

பக்கம் 18 >>>

## தெல்லிப்பழையில் இன்று பாலகர்களின் விளையாட்டு விழா

தெல்லிப்பழை, ஜூன் 3

தெல்லிப்பழை 'லிற்றில் மாஸ்ரேஸ் மொண்டிசூரி ஆங்கில தமிழ் மொழி மூலமான பாலர் பாடசாலை விளையாட்டு விழா, இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு, கி.சதீஸ்குமார் தலைமையில் பாடசாலை மைதானத்தில் இடம்பெறும்.

தெல்லிப்பழை பிரதேச செயலர் எஸ். சிவஸ்ரீ பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினர்களாக கௌரவ விருந்தினர்களாகவும் பலர் கலந்து கொள்வர். (இ)

## பொலிஸ் திணைக்களத்தில் மிகப் பெரிய இடமாற்றம்

பொலிஸ் திணைக்களத்தின் உயர் பதவிகளில் திடீர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. பொலிஸ்துறையில் அண்மையில் இடம் பெற்ற மிகப் பெரிய இடமாற்றம் இது என்று தெரிவிக்கப் படுகிறது.

சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர்கள் மூவர், பிரதிப் பொலிஸ் மா அதிபர்கள் 9 பேர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பிரிவுக்குப் பொறுப்பாக கடமையாற்றி வந்த சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஐ.எச்.கே. டபிள்யூ. சில்வாவும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

இந்தப் பிரிவின் புதிய பொறுப்பாளராக பிரதிப்பொலிஸ் மா அதிபர் எஸ்.சீ மெதவத்த நியமிக்கப்பட்டுள்ளார். (எ)

# அனர்த்தத்தில் சர்வதேச ஒத்துழைப்பு வெளிநாட்டுக் கொள்கையின் வெற்றி!

## மாலைதீவு வெளிநாட்டமைச்சருடனான சந்திப்பில் ஜனாதிபதி தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 03

அனர்த்தத்துக்குள்ளான இலங்கை மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு சர்வதேச சமூகம் அர்ப்பணிப்புடன் முன்வந்தமை, தற்போதைய அரசின் நட்புறவான வெளிநாட்டுக் கொள்கையின் வெற்றியை வெளிப்படுத்துவதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.



நாட்டுக்கு வருகை தந்துள்ள மாலைதீவு வெளிநாட்டு அமைச்சர் கலாநிதி மொஹமட் அஸீம் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில், அவரை, நேற்று முற்பகல் சந்தித்த போதே ஜனாதிபதி மேற் கண்டவாறு தெரிவித்தார்.

பாதிக்கப்பட்ட இலங்கை மக்களுக்கு நிவாரணம் அளிப்பதற்காக மாலைதீவுகள் அரசு வழங்கிய உதவிகளுக்காக மாலைதீவு அரசுக்கும் மக்களுக்கும் ஜனாதிபதி நன்றி தெரிவித்தார்.

இலங்கைக்கும் மாலைதீவுக்கும் இடையில் நீண்ட காலமாக நிலவிவரும் உறவுகளை நினைவூட்டிய ஜனாதிபதி, இருநாடுகளுக்கும் இடையில் நிலவும் அனைத்து உறவுகளையும் பலப்படுத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் தாம் எடுப்பார் என தெரிவித்தார்.

இரு நாடுகளுக்கும் சுற்றுலா செல்லும் சிலர் குற்றம் மற்றும் கடத்தல்களில் ஈடுபடுகின்றமை தொடர்பாக ஆராய்ந்து பார்க்க அரசு நடவடிக்கை எடுக்கும். அவ்வாறான நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு மாலைதீவுகள் வெளிநாட்டலுவல்கள் அமைச்சரிடம் கோரிக்கை விடுத்தார்.

இதேவேளை, கருத்து தெரிவித்த மாலைதீவு வெளிநாட்டு அமைச்சர்:-

'பாதிக்கப்பட்ட இலங்கை மக்களுக்கு வழங்கக்கூடிய அனைத்து உதவிகளையும் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். திடீர் அனர்த்தத்தால் மரணமடைந்தோரின் குடும்பங்களுக்கு மாலைதீவு அரசினதும், மக்களினதும் சார்பில் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றேன்.'-என்றார். (எ)

## விடுதலைப் புலி முன்னாள் உறுப்பினரை சுட்டுக்கொன்றவருக்கு மரண தண்டனை!

கொழும்பு, ஜூன் 03

விடுதலைப் புலிகளின் முன்னாள் உறுப்பினர் ஒருவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டு அவரைக் கொலை செய்த நபர் ஒருவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

2005 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 6 ஆம் திகதி சிலாபம் உணவகம் ஒன்றில் பணிபுரிந்து கொண்டிருந்த விடுதலைப் புலிகளின் முன்னாள் உறுப்பினரான ஆறுமுகம் புலேந்திரன் (வயது 23) என்பவர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதில் அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். மற்றும் ஒருவர் இதன் போது காயமடைந்திருந்தார்.

இந்தத் துப்பாக்கிச் சூட்டை நடத்திய வாழைச்சேனை கரடிவெளி பிரதேசத்தைச் சேர்ந்த நபரைக் கைது செய்த பொலிஸார் கொலை, கொலை முயற்சி மற்றும் சட்டவிரோத ஆயுதம் வைத்திருந்தமை ஆகிய குற்றச்சாட்டுகளின் கீழ் அவருக்கு எதிராக வழக்குத் தொடர்ந்திருந்தனர்.

சிலாபம் மேல் நீதிமன்றத்தில் நடைபெற்ற நீண்ட விசாரணைகளின் பின்னர் அந்த வழக்குத் தொடர்பில் நேற்றுமுன்தினம் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

சந்தேக நபர் குற்றவாளி என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளமையால் அவருக்கு மரண தண்டனை விதித்துத் தீர்ப்பளிப்பதாக நீதிபதி அமல் ரணராஜா தனது தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளார். (எ)

### தாஜுதீன் கொலை வழக்கு:

## டி.ஐ.ஜி. அநுரவுக்கு நேற்றுப் பிணை!



கொழும்பு, ஜூன் 03

வசீம் தாஜுதீனின் கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டு ஓராண்டு காலமாக தடுத்து வைக்கப்பட்டிருந்த முன்னாள் சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் அநுரசேனாநாயக்க பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

தாஜுதீன் கொலை தொடர்பான வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தாஜுதீனின் கொலை தொடர்பான சாட்சிகளை மறைத்த குற்றச்சாட்டுக்காக முன்னாள் பிரதி பொலிஸ் மா அதிபர் அநுர சேனாநாயக்க கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டார்.

அவருக்கான பிணை தொடர்ந்து மறுக்கப்பட்டு வந்த நிலையில் சுமார் ஓராண்டின் பின்னர் நேற்று அவர் விடுதலை செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ)

## மகாவலி கங்கை நீரை வடக்குக்கு கொண்டு வருவது குறித்து ஆய்வு

கொழும்பு, ஜூன் 03

மகாவலி கங்கை நீரை வடக்கு மாகாணத்துக்கு கொண்டு செல்வது தொடர்பான சாத்திய ஆய்வை இலங்கை அரசு மேற்கொள்ள ஆரம்பித்துள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் இலங்கை அரசு இந்த சாத்திய ஆய்வை மேற்கொண்டு வருவதாக, மகாவலி அபிவிருத்தி மற்றும் விவசாய அமைச்சின் செயலர் உதய செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மொரகஹகந்த அணைக்கட்டு பணிகள் முடிவடைந்துள்ளன. களுகங்கை நீர்த்தேக்கத்தை அமைக்கும் பணிகள் இந்த ஆண்டு நிறைவடையும்.

இந்தத் திட்டங்களின ஊடாக நீரை வடக்கு, வட மத்திய, கிழக்கு மாகாணங்களுக்குக் கொண்டு செல்வதன் மூலம், இந்தப் பிரதேசங்களை அபிவிருத்தி செய்ய முடியும்.

அத்துடன், 85 ஆயிரம் ஏக்கரில் அபிவிருத்தி வலயம் ஒன்றையும் அரசு உருவாக்கவுள்ளது.

களு கங்கையுடன் மொரகஹகந்த நீர்த்தேக்கம், கால்வாய் மூலம் இணைக்கப்படும்.-என்றார். (எ)

## வெளிநாடு செல்வதற்கு கம்மன்பிலவுக்கு அனுமதி

பிவிதுறு ஹெல உறுமய கட்சியின் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன் பிலவுக்கு வெளிநாடு செல்ல அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதற்கமைய கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ஆர். குருசிங்க நேற்று இந்த அனுமதியை வழங்கியுள்ளார்.

எதிர்வரும், 12ஆம் திகதி முதல் 15ஆம் திகதி வரையான காலத்துக்குள் உதய கம்மன்பில வெளிநாடு செல்ல முடியும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன், 5 லட்சம் ரூபா சரீரப் பிணையில் கம்மன்பிலவின் கடவுச்சீட்டை விடுவிக்குமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ)

## உதவிப் பொருள்களுடன் இவ்வார இறுதியில் ஜப்பான், மாலைதீவு கப்பல்கள் கொழும்புக்கு!

வெள்ளம் மற்றும் மண்சரிவு அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரண உதவிப் பொருள்களுடன் ஜப்பான், மாலைதீவுகளின் நிவாரணக் கப்பல்கள் இவ்வார இறுதியில் கொழும்பை வந்தடைய உள்ளன.

20 லட்சம் அமெரிக்க டொலர்கள் நிவாரண நிதியாக இதுவரை கிடைத்துள்ளது. மேலும் இந்தியா, பாகிஸ்தான், சீனா ஆகிய நாடுகள் நிவாரணப் பொருள்களுடன் 7 போர்க் கப்பல்கள் கொழும்பு துறை முகத்தை வந்தடைந்த நிலையில் ஜப்பான், மாலைதீவுகளின் நிவாரணக் கப்பல்கள் இவ்வார இறுதியில் கொழும்பை வந்தடையும்.

வெள்ளம் மற்றும் மண் சரிவு அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகளை வழங்கும் வகையில் சர்வதேச நாடுகள் தமது நிவாரணங்களை வழங்கி வருகின்றன.

இந்தியா, சீனா, பாகிஸ்தான், ஆஸ்திரேலியா, அமெரிக்க உள்ளிட்ட நாடுகளின் நிவாரணங்கள் இலங்கைக்கு கிடைத்துள்ள நிலையில் 19 நாடுகள் இலங்கைக்கு உதவத் தயாராக உள்ளன என்று அரசு தெரிவித்துள்ளது. (எ)

# தெற்கு மக்கள் மீதான வடக்கு மக்களின் மனிதநேயம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது

## வடக்கு ஆளுநர் ரெஜினோல்ட் குரே கருத்து



(எஸ்.நிதர்ஷன்)

தமிழ்மக்கள் இன, மத, பேதம் அற்று மனிதத்தன்மைக்கு மதிப்பளிப்பவர்கள். தெற்கு மக்களுக்காக அவர்கள் தமது மனிதநேயத்தை வெளிப்படுத்தி உள்ளனர் என வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல் குரே தெரிவித்தார்.

தெற்கில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வடக்கு மாகாணத்தில் சேகரித்த உலருணவுப் பொருள்களைப் பெற்று அவற்றை தென்னிலங்கைக்கு அனுப்பிவைக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பாதிக்கப்பட்ட மக்களுக்காக வடக்கிலுள்ள மாவட்டச் செயலகங்கள், பிரதேச செயலகங்கள், வர்த்தக நிலையங்கள், பொது அமைப்புக்கள், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் போன்றோர் சேகரித்த பொருள்கள் நேற்று வடக்கு மாகாண ஆளுநரிடம் கையளிக்கப்பட் டன.

அந்தப் பொருள்கள் ஆளுநரின் ஏற்பாட்டில் லொறிகள் மூலம் தென்னிலங்கையில் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டன.

பொருள்களைஅனுப்பிவைக்கும் நிகழ்வில் கலந்துகொண்ட வடக்கு ஆளுநர், தெற்கில் இடம்பெற்ற அனர்த்தத்தால் பல லட்சம் மக்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றனர். நூற்றுக்கணக்கான மக்கள் உயிரிழந்துள்ளனர். பாதிப்புக்களை எதிர்நோக்கிய மக்களுக்கு நாம் வடக்கில் இருந்து உதவிப்பொருள்களை அனுப்பி வைத்துள்ளோம்.

இதனூடாக வடக்கு மக்களின் ஆதரவும் அன்பும் பண்பும் அவர்களின் கருணையும் தெற்கு மக்கள் மேல் அவர்கள் கொண்ட சிநேகமும் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. இதற்காக வடக்கு மக்களுக்கு நான் நன்றி கூறுகின்றேன். – என்றார். (ம)

# அடை மழை பெய்ய வாய்ப்பு; வானிலை நிலையம் தகவல்

## 50 கிலோமீற்றர் வேகத்தில் காற்று வீசும்

இலங்கையின் பல மாவட்டங்களில் எதிர்வரும் 24 மணித்தியாலங்களுக்குள் 100 மில்லி மீற்றர் வரையிலான அடை மழை பெய்யும் என வளிமண்டலவியல் திணைக்களம் நேற்று மாலை தெரிவித்தது.

இது தொடர்பாக வளிமண்டலவியல் திணைக்களத்தின் வானிலை நிபுணர் நதீகா ரணவீர மேலும் கருத்து தெரிவிக்கையில்:-

மேல், வடமேல், சப்ரகமுவ, தெற்கு மற்றும் மத்திய மாகாணங்களில் இடைக்கிடையே மழை பெய்யும். விசேடமாக கொழும்பு, களுத்துறை, கம்பஹா, இரத்தினபுரி, குரு நாகல் மற்றும் கேகாலை மாவட்டங்களில் 100 மில்லி மீற்றர் வரையிலான அடைமழையை எதிர்பார்க்க முடியும்.

கிழக்கு, ஊவா மற்றும் வடமத்திய மாகாணங்களிலும், அதேபோல் வவுனியாவிலும் சில பகுதிகளில் மாலை நேரத்தில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும். மழை பெய்யும் போது நாட்டின் ஊடாக 50 கிலோமீற்றர் வேகத்தில் கடும் காற்று வீசக்கூடும்.

மழையினால் ஏற்படும் அனர்த்தங்களில் இருந்து பாதுகாத்துக்கொள்ளத் தேவையான நடவடிக்கை மேற்கொள்ளுங்கள் எனப் பொதுமக்களிடம் கேட்டுக் கொள்கின்றோம்.– என அவர் மேலும் கூறினார். (ம)

# இடிதாங்கி, தங்க நகைள் கொள்ளை; பொலிஸ் அதிகாரிக்கு விளக்கமறியல்


கொழும்பு, ஜூன் 03

கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர் எனக் குற்றம்சாட்டப்பட்ட பொரளை போக்குவரத்துபொலிஸ்பிரிவின் பொறுப்பதிகாரியை எதிர்வரும் 7 ஆம் திகதிவரை விளக்கமறியலில்வைக்கநீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

இடிதாங்கி மற்றும் ஐந்தரை லட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகளை கொள்ளையடித்தார் என அவர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

மேல் மாகாண சபை உறுப்பினர் ரொயிஸ் பர்ணாண்டோவுக்கு சொந்தமான மேற்படி பொருள்களை அவரது பணியாளர்கள் இருவர் கொழும்புக்கு கொண்டு சென்ற போது இந்தக் கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மேற்படிப் பொருள்கள் கொண்டுசெல்லப்பட்ட வாகனங்களைப்பரிசோதிக்கும்தோரணையில்பொலிஸ்அதிகாரிகள் 8 பேர் இந்தக் கொள்ளையை மேற்கொண்டுள்ளனர் என விசாரணையில்இருந்துதெரியவந்துள்ளது. (ம)



வலி.மேற்கு சமுர்த்தி மகா சங்கத்தின் ஏற்பாட்டில் பனிப்புலம் சிறுவர் கழக கலைஞர்களினால் போதை ஒழிப்பு தெருவெளி நாடகம் நேற்று பொன்னாலை ஸ்ரீ கண்ணன் சனசமூக நிலைய முன்றலில் ஆற்றுகை செய்யப்பட்டது. (ம)

# வலி. தென் மேற்கில் இன்று இளைஞர் விளையாட்டு விழா

சண்டிலிப்பாய், ஜீன் 03

வலி. தென் மேற்கு பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தின் 29 ஆவது பிரதேச இளைஞர் விளையாட்டு விழா இன்று சனிக்கிழமை மாலை 3.00 மணிக்கு இளவாலை ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

மேற்படி இளைஞர் கழக சம்மேளனத்தின் தலைவர் க.உஷாந்தன் தலைமையில் இடம்பெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினராக தேசிய இளைஞர் சேவைகள் மன்ற மாவட்ட உதவிப்பணிப்பாளர் ஐ.தவேந்திரன், இளவாலை ஹென்றியரசர் கல்லூரி முதல்வர் வண.ஜே.ஏ.ஜேசுதாஸ் அடிகளார், யாழ்.மாவட்ட இளைஞர் கழக சம்மேளனத் தலைவர் ஆர்.காமராஜ் ஆகியோர் கலந்து கொள்வர்.

கௌரவ விருந்தினராக கிருபா சாரத்தியப் பயிற்சிப் பாடசாலை முகாமைத்துவப் பணிப்பாளர் ஏ.கிருபாகரன் கலந்து கொள்வார்.

உதைபந்தாட்ட இறுதியாட்டமும் பரிசளிப்பு நிகழ்வும் இதன்போது இடம்பெறவுள்ளன. உதைபந்தாட்ட இறுதியாட்டத்தில் மானிப்பாய் வடக்கு இளைஞர் கழகமும் சில்லாலை இளைஞர் கழகமும் மோதவுள்ளன. (ம)

## உத்தேச.....

(18 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யைத் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ள முக்கியஸ்தர்கள் இருவரை முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சில தினங்களுக்கு முன்னராக அழைத்துப் பேசியுள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அடுத்த தடவையும் ஜனாதிபதியாகத் தொடர்வதை உறுதிப்படுத்தினால் மட்டுமே புதிய உத்தேச அரசமைப்பை நிறைவேற்றுகின்றமையை வெற்றிகரமாக நகர்த்தி ஒப்பேற்ற முடியும் என்ற சூழல் நிலவுகின்றமையை சந்திரிகா சுட்டிக் காட்டினார்.

ஏதேனும் குறிப்பிடத்தக்க நிறைவேற்று அதிகாரம் கொண்டவராக அடுத்த தடவையும் மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாகப் பதவியில் தொடருவார் என்ற அறிவிப்பை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவே விடுத்தால் மட்டுமே, புதிய அரசமைப்பு உருவாக்கத்தில் தற்போதுள்ள முட்டுக்கட்டை நிலை நீங்கி விடயங்கள் முன் நகரும் என சந்திரிகா பட்டவர்த்தனமாகச் சுட்டிக் காட்டினாராம்.

அத்தகவல் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. அவரும் சில மட்டுப்பாடுகளுடன் அதனை அறிவிப்பதற்கு இணங்கி வருவார் எனத் தெரிகின்றது.

நிறைவேற்றுஅதிகாரஜனாதிபதி விடயத்தில் உத்தேச இணக்கம் பின்வருமாறு அமையும் எனத் தெரிகின்றது :-

தற்போது மாகாணங்களுக்கு அதிகாரங்கள் அதிகளவில் பகிரப்படுவதால் மாகாணங்கள் அவற்றைப் பயன்படுத்தி பிரிந்து செல்ல முற்பட்டால் அத்தகைய மாகாண சபைகளை, அத்தகைய காரணத்துக்காகக் கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதியிடமே இருக்கும். மாகாணங்களைக் கலைக்கும் விடயத்தில் ஆளுநர்களின் கலந்தாலோசனையுடன் ஜனாதிபதியே முடிவுகளை எடுப்பார். அதில் பிரதமர் தலையிட முடியாது.

ஜனாதிபதி சம்பிரதாய பூர்வமாக நாட்டில் தலைவராக விளங்குவார்.

அரசாங்கத்தின் தலைவராக நாடாளுமன்றத்துக்குப் பதில் கூறக்கூடியவராக பிரதமர் விளங்குவார்.

–இத்தகைய யோசனைக்கு ஜே.வி.பியும் பச்சைக் கொடி காட்டியிருக்கின்றது. ஆனால் அத்தகைய ஜனாதிபதி மக்களால் தெரிவு செய்யப்படுபவராக இருக்கக்கூடாது. அதற்கான தேசியத் தேர்தல் நடத்தப்படக் கூடாது. ஜனாதிபதி நாடாளுமன்றத்தினால் தெரிவு செய்யப்படுவராக இருக்க வேண்டும் என ஜே.வி.பி. வற்புறுத்துவதாக தெரிகின்றது.

அதனையே பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் விரும்புகின்றாராம்.

அடுத்த தடவையும் நாடாளுமன்றத்தினால் தெரிவு செய்யப்படும் ஜனாதிபதியாக மைத்திரிபால சிறிசேனவே தொடருவார் என்ற பகிரங்க அறிவிப்பை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவே வெளியிடுவார் எனின், மைத்திரிபாலவின் அடுத்ததடவைக்கான பதவி சர்ச்சை ஏதுமின்றி உறுதிப்படுத்தப்படும் எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

–இவ்வாறு சில மட்டுப்படுத்தப்பட்ட விடயங்களில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட – நாட்டின் (HEAD OF THE STATE) சம்பிரதாயபூர்வ தலைவராக – ஜனாதிபதியும் –

நாடாளுமன்றுக்கு பதில் கூறக்கூடிய அதிகாரம் கொண்ட பிரதமரை அரசாங்கத்தின் (HEAD OF THE GOVERNMENT) தலைவராகவும் கொண்ட கலப்பு முறைமை புதிய அரசமைப்பில் இடம்பெறும் எனக் கூறப்பட்டது.

### அதிகாரப் பரவலாக்கம்

அதிகாரப் பரவலாக்கல் முறையும் திட்டவட்டமான பகிர்வைக் கொண்டிருந்தாலும் அங்கும் கலப்பு பொறிமுறை இருக்கும் என்று கூறப்பட்டது.

மாகாணங்களுக்கும், மத்திய அரசுக்குமான அதிகாரங்கள் தெளிவாகவும் திட்டவட்டமாகவும் வகுக்கப்பட்டிருக்கும்.

இரண்டுக்கும் பொதுவான துறைகள் என எவையும் பெரும்பாலும் இருக்காது.

எனினும் இரண்டு தரப்பும் சேர்ந்து செயற்பட வேண்டிய விடயங்கள், ஒழுங்குகள் குறித்து தெளிவான கலப்பு முறைமை பரிந்துரைக்கப்பட்டிருக்கும்.

### தேர்தல் முறைமை

உத்தேசபுதிய அரசமைப்பில் கலப்புத் தேர்தல் பொறிமுறையே இடம்பெறும் என்பது எப்போதோ தீர்மானிக்கப்பட்டதாகும்.

தற்போது நடைமுறையில் உள்ள விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறைமையும் –

தொகுதிவாரி தேர்தல் முறைமையும் –

கலந்ததான புதிய தேர்தல் சீர்திருத்த முறைமையை புதிய அரசமைப்பு கொண்டிருக்கும். (உ)

# தெற்கு மக்களுக்கு கிழக்கில் இருந்து ஒரு கோடி ரூபா திரட்டத் தீர்மானம்

## கிழக்கு மாகாண சபையில் நேற்று விசேட அமர்வு

இயற்கை அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட தென்பகுதி மக்களுக்கு கிழக்கு மாகாணத்தில் இருந்து ஒரு கோடி ரூபாவுக்கும் அதிக நிதியைத் திரட்டி வழங்குவதற்கான தீர்மானம் ஒன்று கிழக்கு மாகாண சபையில் நிறைவேற்றப் பட்டுள்ளது.

கிழக்கு மாகாண சபையின் விசேட அமர்வு நேற்று நடைபெற்ற போது முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட் கொண்டுவந்த பிரேரணை தீர்மானமாக நிறைவேற்றப்பட்டது.

பிரேரணையை முன்வைத்து உரையாற்றிய முதலமைச்சர், எமது நாட்டை உலுக்கிய வெள்ளம் மற்றும் மண்சரிவு அனர்த்தம் என்பன நாட்டின் அண்மித்த வரலாற்றில் ஏற்பட்ட பாரியதொரு பேரழிவாகவே கருத முடியும் எனத் தெரிவித்தார்.

அனர்த்தத்தால் ஏற்பட்ட உயிரிழப்புக்களும் சேதங்களும் நாட்டின் ஒவ்வொரு மூலை முடுக்கிலும் உள்ள மக்களையும் ஆழ்ந்த துயரத்தில் ஆழ்த்தின. 6 இலட்சத்துக்கும் மேற்பட்டோர் இந்த அனர்த்தங்களில் பாதிக்கப்பட்டுள்ளநிலையில் இந்த தேசத்தின் சக சகோதரர் களாக நாமும் அவர்களுக்கு உதவிக்கரம் நீட்ட வேண்டிய தேவை யுள்ளது.

கிழக்கு மாகாண மக்கள் சுனாமி மற்றும் வெள்ளம் போன்ற அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டிருந்த போது எமக்கு நாட்டின் சக மக்கள் உதவிக்கரம் நீட்டியிருந்தார்கள். இப்போது தேசிய அனர்த்த நிலைமைகளின் போது நாம் உதவ முன்வந்துள்ளோம்.

வெள்ளம் மற்றும் மண்சரிவால் பாதிக்கப்பட்டோருக்கு கிழக்குமாகாண சபையினராகிய நாம் ஒரு கோடி ரூபாவுக்கும் அதிக நிதியை திரட்டுவதற்கு தீர்மானித்துள்ளோம். – என்று கூறினார். (ம)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax): 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## தெற்கின் கம்மன்பில்லாக்கள்

**தென்னிலங்கை வெள்ளத்துக்குள் அமுழ்ந்திக் கிடக்கின்றது என்றால், மறுபுறத்தில் இலங்கையின் வடபகுதி கடும்** வறட்சியின் பிடியில் சிக்கிக் கிடக்கின்றது.

இந்தச் சூழலில், தென்னிலங்கையில் வெள்ளம், மண்சரிவு போன்ற அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட பொதுமக்களைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும், அக்கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் ஏறெடுத்துக் கூட பார்க்கவில்லை என்று கவலையும் விசனமும் வெளியிட்டிருக்கின்றார் கூட்டு எதிரணியின் முக்கிய பிரமுகர்களுள் ஒருவரும் 'பிவித்ரு ஹெல உறுமய' வின் தலைவருமான உதய கம்மன்பில.

அனர்த்தத்தில் சிக்குண்டுள்ள நாட்டு மக்களை இனரீதியாகப் பார்க்காமல், மனித நேயத்துடன் பார்க்க வேண்டும், இனம், மதம், மொழி கடந்து நோக்க வேண்டும் என்ற சிந்தனையில் இந்தக் கருத்தை உதய கம்மன்பில முன்வைத்திருப்பாராயின் அது நல்ல விடயமே; வரவேற்கத்தக்க அம்சமே.

அண்மையில் கொழும்பில் சாலாவ பகுதியில் இராணுவத்தினரின் ஆயுதக் கிடங்கு ஒன்று திடீரென வெடித்துச் சிதறி பேரிடர் ஒன்று நேர்ந்தது. அந்த ஆயுதக் கிடங்கு இருந்த பிரதேசத்தில் பொதுமக்களின் பல வீடுகள், வர்த்தக நிலையங்கள் பேரழிவுக்கு உள்ளாகின.

அதேபோன்று, கொழும்பு புறநகர்ப் பகுதியில் மீதொட்டுமுல்ல பகுதியில் கொட்டப்பட்ட குப்பைகளின் அடியில் உருவான மீதேன் வாயுவால் அந்தக் குப்பைமேடே சிதறிச் சரிந்து பேரனர்த்தத்தை ஏற்படுத்தியது. பல வீடுகள், குடியிருப்புகள் குப்பைமேடுகளின் சிதைவுக்குள் சிக்கி அடங்கிப் போயின.

இந்த இரண்டு சம்பவங்களுமே தற்போதைய பேரிடருக்கு முன்னர் அண்மைக் காலத்தில் இடம்பெற்ற விடயங்களாகும்.

"சாலாவப் பகுதிச் சம்பவத்தில் பாதிக்கப்பட்டோரில் 95 வீதமானோருக்கும், மீதொட்டுமுல்ல பகுதியில் பாதிக்கப்பட்டோரில் 90 வீதமானோருக்கும் உரிய இழப்பீடு, நிவாரணங்களை அரசு விரைந்து வழங்கி முடித்துவிட்டது. அதேபோன்று இப்போது தென்னிலங்கை மாவட்டங்களில் பேய் மழை, பெருவெள்ளம், மண்சரிவு போன்றவற்றால் பாதிக்கப்பட்டோருக்கும் அரசு விரைந்து இழப்பீடு, காப்பீடு, நிவாரணங்களை வழங்கி வைக்கும். அதற்கான துரித நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன." - என்றெல்லாம் அமைச்சர் அநுர பிரியதர்ஷன யாப்பா, அரசின் சார்பில் அறிவித்திருக்கின்றார்.

பேரிடர்களால் பாதிக்கப்படும் மக்களுக்கு அரசு விரைந்து இழப்பீடு, நிவாரணங்கள் வழங்குகின்றமையைப் பார்க்கும் போது மெய்சிலிர்க்கின்றது.

ஆனால், அந்த மெய்சிலிர்ப்பு நமக்கு ஒரு கணம்தான். இந்த இழப்பீடு, உதவிகள் வழங்குவதில் இவ்வளவு துரிதம், வேகம் எல்லாம் தெற்குக்கு வேதனை வந்தால் மட்டும்தான் என்ற உண்மை - யதார்த்தம் - புரியும் போது மெய்சிலிர்ப்புச் சிந்தனை கேவல எண்ணமாகி விடுகின்றது; மனம் துவண்டு போகின்றது.

வடக்கு, கிழக்கு மக்கள் - குறிப்பாகத் தமிழ் மக்கள் - நீண்டகால யுத்தம் என்ற பேரிடரை எதிர்கொண்டு பேரிழப்புகளையும் பேரழிவுகளையும் சுமந்து நிற்கின்றார்கள்.

இப்போது மழை வெள்ளத்துக்கு அஞ்சி வீடு, வாசல்களை ஒரு கணத்துளி நேரத்தில் கைவிட்டு, உயிர் பிழைக்க ஓடித் தப்பி வந்து, நலன்புரி நிலையங்களில் தங்கியிருந்து அவலப்படும் தமது தென்னிலங்கைச் சகோதரர்களைப் போன்றே, யுத்தத்தின் போது வடக்கிலும், கிழக்கிலும் நம் மக்கள் தமது வாழிடங்களை விட்டு ஓடித் தப்ப வேண்டியவர்களானார்கள்.

திடீரென இடம்பெற்ற படை நடவடிக்கை என்ற பேரிடருக்கு அஞ்சி, வீடு, வாசல்களைக் கைவிட்டு, உறவுகளைப் பறிகொடுத்து, சொத்துபத்து இழந்து, நடுவீதிக்கு வந்த பல்லாயிரம் தமிழ் மக்களின் அவலம் இன்னும் தீர்க்கப்படவில்லை. அவர்களின் பாரம்பரிய வீடு ,வாசல்களை, திடீரென வெள்ளம் போல வந்து கைப்பற்றிய முப் படைகளும் அந்த இடங்களில் இருந்து இன்னும் வெளியேறவில்லை.

தெற்கில் பெய்த பேய் மழையால் வீடுகளைச் சூழ்ந்த வெள்ளம், இன்னும் சில நாள்களில் கடும் வெயிலடிக்க வடிந்து, காய்ந்து, வறண்டு சரியாகிவிடும்.

ஆனால், வடக்கிலும், கிழக்கிலும் தமிழர்களின் பூர்வீகப் பூமியை - வாழிடங்களை - படை நடவடிக்கை என்ற பேய் மழை மூலம் ஆக்கிரமித்த முப்படை என்ற வெள்ளம் இப்போதைக்கு வடிந்து, வெளியேறி, காய்ந்து, விலகிப் போவதற்கான அறிகுறிகள் எதுவுமே சரியாகத் தென்படவேயில்லை.

யுத்தப் பேரிடரால் பாதிக்கப்பட்ட இந்தத் தமிழ் மக்களுக்கு நீதி, நியாயம் செய்யப்பட வேண்டும், உரிய நிவாரணம் வழங்கப்பட வேண்டும், அவர்களின் இல்லங்களுக்கு அவர்கள் திரும்ப வேண்டும் என்பவை போன்றவற்றைச் செய்ய வேண்டியவர்கள், அவற்றைச் செய்யாமல், அவற்றுக்கு மாறான நடவடிக்கைகளைத் தூண்டி நிற்கின்றனர்.

அத்தகைய கம்மன்பில்லாகள், தெற்கில் மக்கள் பேரிடரால் பாதிக்கப்பட்டமை குறித்து தமிழ்க் கூட்டமைப்பினர் கரிசனை காட்டவில்லை என்று குற்றம் சுமத்துவதற்கு எந்தத் தகுதியும் அற்றவர்கள் என்பது தான் உண்மை; யதார்த்தமும் அதுதான்.

# நல்லிணக்கம்,அபிவிருத்திப் பணிகளுக்கு எந்த பேதமுமின்றி ஒத்துழையுங்கள்!

### அமைச்சு அதிகாரிகளுடனான சந்திப்பில் மங்கள

கொழும்பு, ஜூன் 03

ஜனநாயகம், நல் லிணக்கம் மற்றும் அபிவிருத்தி ஆகிய மூன்று விடயங்களின் கீழ் அரசு பயணிக்கின்றது. இன, மத, கட்சி, நிற பேதங்கள் இன்றி இந்தத் வேலைத் திட்டத்துக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு அரச மற்றும் தனியார் துறை ஊடகங்களிடம் அமைச்சர் மங்கள சமரவீர வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சு மற்றும் அரச தகவல் திணைக்கள அதிகாரிகளின் நேற்றைய சந்திப்பிலேயே அமைச்சர் இவ்வாறு வேண்டுகோள் விடுத்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தெற்காசிய பிராந்தியத்தில் செயற்பாட்டு ரீதியான ஊடக தொழிற்றுறை இருக்கும் நாடாக இலங்கை மாறியுள்ளது.

நிறைவேற்று அதிகாரத்தை நாடாளுமன்றத் துக்கு வழங்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. சகல இன மக்களின் கருத்துக்களுக்கு செவி கொடுத்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

இனங்களுக்கு இடையிலான பிளவுகள் மூலம் நாடொன்றால் முன்நோக்கிச் செல்ல முடியாது. 1948ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 4ஆம் திகதி சுதந்திரம் பெறும் போது ஆசிய பிராந்தியத்தில் இலங்கை, ஜப்பானுக்கு அடுத்த பொருளாதார பலம்மிக்க நாடாக விளங்கியது.

கட்சி, இன, மத ரீதியாக சண்டையிட்டு கொண்டதன் காரணமாக எடுக்கப்பட்ட தீர்மானங்கள் தவறிப்போயின. நகத்தால் கிள்ளி எறியப்பட வேண்டிய பிரச்சினை 30 ஆண்டு போராக மாறியது.

இலங்கை முன்னேற்றமான பொருளாதார அபிவிருத்தியை அடைய வேண்டும். காலம் கடந்து போன கொள்கைகளை கைவிட்டு நவீன உலகத்துடன் முன்நோக்கிச் செல்ல வேண்டும்.



ஜெனீவாவில் அண்மையில் நடைபெற்ற கூட்டத்தொடரில் இலங்கை தொடர்பான யோசனையின் போது இலங்கைக்கான உலகின் முன்னணி நாடுகள் குரல் கொடுத்தன.

இது இலங்கை பெற்ற சர்வதேச வெற்றி. உலக நாடுகள் இலங்கைக்கு உதவத் தயாராக இருக்கும் இந்த சந்தர்ப்பத்தின் பலத்தை நாம் பெற்று கொள்ள வேண்டும். - என்றார். (எ)

# வெளிநாடுகளில் பாதிக்கப்பட்ட பணியாளர்களுக்கு நஷ்டஈடு

### வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் தெரிவிப்பு



இலங்கையிலிருந்து வெளிநாடுகளுக்கு வேலை வாய்ப்புக்காகச் சென்று பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்ட ஈடு வழங்கப்படும் என்று வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் தலதா அத்துகோரள தெரிவித்துள்ளார்.

அமைச்சின் ஆலோசனைக்கு அமைவாக, 2016ஆம் ஆண்டில் சேமநல நிதியின் மூலம் 2 கோடி 15 லட்சம் ரூபாவை ஒதுக்கி அவர்களுக்கு நஷ்டஈடு வழங்குவதற்கு நட வடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இதன்படி, முதற் கட்டமாக பாதிக்கப்பட்ட 32 பேருக்கு வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தின் ஊழியர் சேமலாப நிதியில் இருந்து 65 லட்சம் ரூபாவுக்கு மேற்பட்ட நட்டஈடு நேற்று முன்தினம் வழங்கப்பட்டது.

இந்தநிகழ்வில் உரையாற்றும் போது அமைச்சர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வெளிநாட்டு வேலை வாய்ப்பின் போது பாதிக்கப்பட்ட பணியாளர்களுக்கு இந்த வருடத்தில் ஒரு கோடி ரூபாவுக்கு மேற்பட்ட நஷ்ட ஈடு வழங்கப்படும். வெளிநாடுகளில் பணிபுரியும் இலங்கையர்கள் தங்களது பாதுகாப்புத் தொடர்பில் கூடுதலான கவனம் செலுத்தப்பட வேண்டும். - என்றார். (எ)

# ஆசியாவின் மிகப் பெரிய குகைக்கு இயற்கை சீற்றத்தால் பாதிப்பு!

ஆசியாவின் மிகப் பழைமையான மற்றும் ஆதிகாலத்தில் மக்கள் வாழ்ந்த வரலாற்று சிறப்புமிக்க பாஹியன்கல குகையின் பல இடங்கள் வெடித்து ஆபத்தான நிலையில் உள்ளன என்று ஆனந்த சாகர தேரர் தெரிவித்துள்ளார்.

அண்மையில் களுத்துறை மாவட்டத்தில் ஏற் பட்ட சீரற்ற காலநிலையைத் தொடர்ந்து கடந்த இரண்டு நாள்களுக்கு முன்னர் இந்தக் குகை பிளவடைந்துள்ளதைக் காண முடிந்துள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் தொல்பொருளியல் பிரதானிகளிடம் அறிவித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.



சுமார் 58 ஆயிரம் வருடங்கள் பழைமையானதாகக் கருதப்படுகின்ற மனித எச்சங்கள் இந்த இடத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள நிலையில், வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த இடமாகவும், ஆசியாவின் மிகப் பெரிய குகையாகவும் இந்த குகை கருதப்படுகின்றது.

இந்த இடத்துக்குப் பாதிப்பு ஏற்பட்டால் அது நாகரிகத்தின் முக்கிய சாட்சிகள் அழிவதற்கு காரணமாகிவிடும் என்று குறிப்பிடப்படுகின்றது.

அவதானமாக இருப்போம்! மரணம் தவிர்ப்போம்!

விலங்கின் விசர் நோய்த் தடுப்பு ஊசி போடாத நாய்களால் எமது செல்லப்பிராணி கடியுண்டால், செல்லப்பிராணிக்கு விலங்கின் விசர்தடுப்பு மருந்து போடப்பட்டிருப்பினும், மீண்டும் தடுப்பூசி போடுக்கொள்ளதல் வேண்டும்



தடுப்பூசி போட்ட, தடுப்பு மருந்து அட்டையைக் கவனமாகப் பாதுகாப்போம்.

தகவல்:- சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை. யாழ்.மாநகரசபை.

### நாளை

04.05.2017
ஞாயிற்றுக்கிழமை

நட்சத்திரம் : அத்தம் மா. 6.38 வரை
திதி : தசமி மு.ப. 11.38 வரை

சுபநேரம் : 8.52 – 10.22 வரை
இராகுகாலம் : 4.22 – 5.52 வரை

காலைக்கதிர் Kalaikkathir
சனிக்கிழமை 03.06.2017


# வற்றிவருகின்றது நந்திக்கடல் மீனவர் வாழ்வாதாரம் பாதிப்பு!

## வட்டுவாகலில் இறந்து மிதக்கின்றன பெருந்தொகை மீன்கள்





முல்லைத்தீவு, ஜூன 03

தற்போது அதிகரித்து வரும் வெப்பம் காரணமாக முல்லைத் தீவு நந்திக்கடலில் நீர் மட்டம் குறைவடைந்துள்ளது. இதன் காரணமாக வட்டுவாகல் பகுதியில் ஆயிரக்கணக்கான மீன்கள் இறந்து மிதக்கின்றன. எனவே சிறு கடல்தொழிலாளரின் வாழ் வாதாரம் கேள்விக்குறியாகியுள்ளதாக அந்தப்பகுதி கடற்றொழிலாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு நந்திக்கடலில் இறந்து மிதக்கும் மீன்களை அகற்றுவதற்கு அந்தப்பகுதி மீனவர்கள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இது தொடர்பாக மீனவர்கள் கருத்து வெளியிடுகையில், 'மக்களை வாழவைக்கும் இந்த நந்திக்கடலில் தற்பொழுது நீர்மட்டம் மிகக் குறைவடைந்துள்ளது.

தொடரும் வெப்பநிலை அதிகரிப்பால் மீன்கள் இறந்துள்ளன. இதனால் எமது சிறு கடல்தொழில் பாதிப்படைந்துள்ளது.

நந்திக்கடலில் தேங்கியுள்ள சேற்று மண்ணை அகற்றுவதன் மூலம் மழைகாலத்தில் அதிகமாக மழைநீரை தேக்கிவைக்க முடியும்.

இது தொடர்பாக அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கின்றோம்.' என்றனர்.

இதேவேளை பொது மக்கள் அதிக விலை கொடுத்து ஆழ் கடல் மீன் களைக் கொள்வனவு செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களின் வாழ்வாதாரம் கேள்விக்குறியாகி உள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ81)

## ஆலய உற்சவங்கள்

நல்லூர்,ஜூன் 03

யாழ்ப்பாணம் நல்லூர் அருள்மிகு ஸ்ரீதேவி பூதேவி சமேத மஹா விஷ்ணு ஆலய அலங்கார உற்சவம் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

பன்னிரண்டு தினங்கள் நடைபெறும் உற்சவத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 5.30 மணிக்கு இரத சேவையும், மறு நாள் திங்கட் கிழமை காலை 9 மணிக்கு திரு மஞ்சன தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (ச)

★★★

நல்லூர்,ஜூன் 03

யாழ்ப்பாணம் மீசாலை கிழக்கு சித்திரவேலாயுத ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் நாளை மறுதினம் திங்கட் கிழமை ஆரம்பமாகி பத்துத் தினங்கள் தொடர்ந்து இடம் பெறும்.

எதிர்வரும் 13 ஆந்திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு இரதோற்சவமும், மறுநாள் புதன் கிழமை முற் பகல் 11 மணிக்குத் தீர்த்தோற் சவமும், மாலை 6 மணிக்கு சண்முக அர்ச்சனையும் இடம் பெறும்.

சங்காபிஷேகம் முதல் 8 நாள்களும் முற்பகல் 10.30 மணிக்கும் இறுதி இரு நாள்களும் காலை 7 மணிக்கும் இடம் பெறும். (ச)

## இரண்டு பிள்ளைகளின் தந்தை வவுனியாவில் சடலமாக மீட்பு!

வவுனியா, செட்டிகுளத்தை சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தை வெட்டுக்காயங்களுடன் சடலமாக நேற்றுக் காலை மீட்கப்பட்டுள்ளார்.

வவுனியா, செட்டிகுளம் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட சின்னக்குளத்தில் வசித்த 40 வயதுடைய முத்துலிங்கம் கனகராஜா என்ற இரண்டு பிள்ளைகளின்தந்தையேசெட்டிகுளம் சண்முகபுரம் கிராமத்தில் வீதியோரத்தில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் பிற்பகல் 5 மணிக்கு வவுனியா நகர்பகுதிக்கு செல்வதாகக் கூறி அவர் பஸ்ஸில் சென்றுள்ளார். இரவு 9 மணியளவில் தனது மனைவிக்குத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு தனது கடையின் முன்பாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த தனது ஓட்டோவை எடுத்து விடும்படியும் தான் வீட்டுக்கு வந்துகொண்டிருப் பதாகவும் கூறி தொலைபேசி அழைப்பைத் துண்டித்துள்ளார்.

நீண்டநேரமாகியும் அவர் வீட்டுக்கு வராதகாரணத்தால் இரவு 10 மணியளவில்அவரின் தொலைபேசிக்கு அழைப்பை மேற்கொண்டபோது தொலைபேசி இயங்கவில்லை என்று உறவினர்கள் தெரி வித் தனர்.

அதனைத் தொடர்ந்து நேற்றுக் காலை செட்டிகுளம் - பூவரசங்குளம் வீதியில் உள்ள சண் முகபுரம் கிராமத்துக்குச் சென்ற வர்கள் வீதியோரத்தில் சடலம் கிடப்பதைக் கண்டு செட்டிகுளம் பொலிஸாருக்கு தகவல் வழங்கியிருந்தனர். இந்தநிலையில் சம்பவ இடத்துக்குச் சென்ற செட்டிகுளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (எ-100)

# அபிவிருத்தித் திட்டங்களை காட்சிப்படுத்தக் கோரிக்கை!

## மோசடிகள் இடம்பெறுகின்றன என்று கிளிநொச்சி மக்கள் விசனம்

கிளிநொச்சி, ஜூன் 03

கிளிநொச்சி மாவட்டத்தில் மேற்கொள்ளப்படுகின்ற அபிவிருத்தி வேலைத்திட் டங்களுக்குஉரியநிதிஒதுக்கீடுமற்றும் ஒப்பந்த காலங்கள் என்பவை அறிவிப்புப்பலகை மூலம் காட்சிப்படுத்தப்பட வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சியில் அபிவிருத்தி வேலைத் திட்டங்களை முன்னெடுக்கின்ற ஒப்பந்தக் காரர்கள் மேற்படி விவரங்களை காட்சிப்படுத்தாது கட்டுமான வேலைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அந்தவகையில் குறிப்பாக, கிளிநொச்சி நகரில் அமைக்கப்பட்டு வருகின்ற பஸ் நிலையத்தின் கட்டுமானப் பணிகள் தொடர்பான விவரங்கள் காட்சிப்படுத்தப்படவில்லை.

இது தொடர்பில் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்திலும் சுட்டிக்காட்டப் பட்டிருந்தது. இந்த விடயம் தொடர்பில் கருத்துத் தெரிவித்த மாவட்ட அரச அதிபர், அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் அறிவித்தல் பலகை மூலம் காட்சிப்படுத்துவது தொடர்பான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருக்கின்றன.

உடனடியாக அவற்றைக் காட்சிப்படுத்துமாறும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு வலியுறுத்தப்பட்டுள்ளது என்றார்.

அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான அறிவித்தல் பலகை காட்சிப்படுத்தப்படாமையால் இதில் மோசடிகள் இடம் பெறுகின்றன என்று பொது மக்கள் விசனம் வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ)

## சி.க.கூ.ச.சமாச சுற்றுச்சூழல் தின நிகழ்வுகள் இன்று

யாழ்.மாவட்ட சி.க.கூ. ச.சமாசத்தின் ஏற்பாட்டில் சுற்றுச் சூழல் வாரத்தையொட்டி நிகழ்வுகள் இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு சமாசத் தலைவர் செ.இலகுநாதன் தலைமையில் இடம்பெறும்.

இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொ.மோகனும் சிறப்பு விருந்தினராக கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜெ.ஜெயந்தனும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.


★★★

யாழ். கே.கே.எஸ் வீதியிலுள்ள சமாசத்தின் அலுவலகம் சங்கங்களின் அலுவலகங்களைத் துப்புரவு செய்தல், அங்கத்தவர்களுக்கு விழிப்புணர்வு,மரம் நடுகை, திண்மக் கழிவுகள் அகற்றுதல் போன்ற பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்கள் ஏற்பாடாகியுள்ளது என சமாசத் தலைவர் தெரிவித்துள்ளார். (இ)

## வவுனியா ரயில் நிலைய வீதி புனரமைப்புப் பணி மந்த கதியில்

வவுனியா ரயில் நிலைய வீதி புனரமைப்பு மந்த கதியில் நடைபெறுவதால் வர்த்தக நடவடிக்கைகள் பாதிப்படைந்துள்ளன என்று அந்தப்பகுதி வர்த்தகர்கள் குற்றஞ் சாட்டியுள்ளனர்.

வவுனியா நகரத்துக்கும் குருமன்காட்டுக்கும் இடையிலான ரயில் நிலைய வீதி பல வருடங்களுக்குப் பின்னர் கடந்த வருடம் முதல் திருத்த வேலைகள் நடைபெற்று வருகின்றன. இத்திருத்த வேலைகளின் போது வீதியின் இரு மருங்கிலும்வெட்டப்பட்ட கால்வாய் பூரணப்படுத்தப் படாது குண்டும் குழியுமாக காணப்படுகின்றது. வெட்டப்படும் கால்வாய்கள் வாரத்துக்குள் மூடப்பட்டு பாவனைக்கு விடப்படும் என்று தெரிவிக்கப்பட்ட



வர்த்தகர்கள் பாதிப்பு

போதும் சில இடங்களில் இரண்டு மாதங்களுக்கு மேலாக வெட் டப்பட்ட வடி கான்கள், கால்வாய்கள் பூரணப்படுத் தப்படாதநிலையில்காணப்படுகின்றன என்று வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால் வீதியோரத்தில் அமைந்துள்ள எமது வர்த்தக நிலையங்களுக்கு வாடிக்கையாளர்கள் வர முடியவில்லை. இதுவரை பூரணப்படுத்தப் படாத வடிகால்களால் 5 வரையான விபத்துக்கள் ஏற்பட்டுள்ளன. இது தொடர்பில் வீதி அபிவிருத்தி அதிகாரசபையிடம் பல முறை தெரியப் படுத்தியும் உரிய நடவடிக்கை எடுக்கப் படவில்லை என்று அவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

இவ்விடயம் தொடர்பில் வவுனியா வீதி அபிவிருத்தி அதிகாரசபையைத் தொடர்பு கொள்ள முயன்ற போதும் முடியவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (எ-100)

## மகா கும்பாபிஷேகம்

புங்குடுதீவு, ஜூன் 03

புங்குடுதீவு கிழக்கு மாவுத்திடல்பதி ஸ்ரீபெரிய காத்தவராயன் ஆலய பஞ்ச குண்டபக்ஷ மகா கும்பாபிஷேகம் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.15 மணி முதல் 12.15 மணி வரையும் உள்ள சுப வேளையில் இடம்பெறும்.

★★★

நீர்வேலி, ஜூன் 03

நீர்வேலி வடமேற்கு மாசிவன் பதி ஸ்ரீமீனாட்சி அம்பாள் ஆலய புனராவர்த்தன அஷ்டபந்தன பஞ்ச குண்ட பக்ஷ பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகப் பெருவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணி முதல் 12.14 மணிவரை உள்ள சுப முகூர்த்தத்தில் நடைபெறும். (ச)




மாணவியர் மீதான வன்புணர்வுக்கு எதிராக

# தம்பிலுவில் மாணவர்கள் கண்டன ஆர்ப்பாட்டம்!

திருக்கோவில்,ஜூன் 03

மூதூர் பெரியவெளி பாடசாலை சிறுமிகள் மீதான பாலியல் துஷ்பிரயோகத்துக்கு எதிராக அம்பாறை திருக்கோவில் வலயக் கல்வி அலுவலகத்துக்குட்பட்ட தம்பிலுவில் தேசிய பாடசாலை மாணவர்கள் நேற்று வெள்ளிக்கிழமை கண்டன ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

பாடசாலையின் மாணவர் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தலைமையில் இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் சுமார் 200 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டனர்.

மேற்படி ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட மாணவர்கள் திருக்கோவில் பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரியும், பெரும் குற்றப் பொறுப்பதிகாரியுமான எஸ்.எம்.சதாத்திடம் சிறுவர்கள் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு கோரிய மகஜர் ஒன்றைக் கையளித்தனர். (ச)

# சிறுவர்கள், பெண்கள் மீதான துஷ்பிரயோகச் சம்பவங்கள் இப்போது நல்லாட்சியிலும்!

## குற்றஞ்சாட்டுகிறார் வியாழேந்திரன் எம்.பி.



மட்டக்களப்பு,ஜூன் 03

நல்லாட்சி அரசின் காலத்திலும் சிறுவர்கள் மற்றும் பெண்களுக்கு எதிரான துஷ் பிரயோகச் சம்பவங்கள் தொடர்ந்த வண்ணமே உள்ளன.

-இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வியாழேந்திரன் தெரிவித்தார்.

மூதூர் பெரியவெளிக் கிராமத்தில் மூன்று பாடசாலைச் சிறுமிகள் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து, கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மூதூர், பெரியவெளியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர்எனக்கூறப்படும் குற்றவாளிகளைச் சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும். குற்றவாளிகளுக்கு அதிக பட்சத் தண்டனை வழங்குவதன் மூலமே எதிர்காலத்தில் இத்தகைய துஷ்பிரயோகச் சம்பவங்கள் இடம்பெறாமல் தடுக்க முடியும். எமது நாட்டின் சட்டங்களை மாற்றி அமைக்க வேண்டும். அப்போதுதான் தவறு செய்பவர்களுக்குப் பயம் ஏற்படும்.

வீட்டில் ஆரம்பித்து சமூகத்தில் உள்ள ஒவ்வொரு பிரஜையும் விழிப்புடன் இருக்க வேண்டும். இல்லாவிட்டால் எமது இளம்சந்ததிகளை நாசகாரரிடம் இருந்து பாதுகாக்க முடியாமல் போய்விடும்.

அப்பாவி சிறுமிகள் மீது மேற்கொள்ளப்படும் இவ்வாறான சம்பவங்களுக்கு எதிராக ஜனநாயக ரீதியில் போராட்டங்கள் நடத்தப்படுகிறன. ஆனால், இவ்வாறான ஜனநாயகப் போராட்டங்களைச் சிலர் கொச்சைப்படுத்துகின்றனர். -என்றார். (ச)

### மட்டக்களப்பில் கண்டன ஒன்றுகூடல்!

மூதூர் சிறுமிகள் மூவர் மீதான துஷ்பிரயோகத்துக்கு எதிராக மட்டக்களப்பு இளைஞர்களால் காந்தி பூங்காவில் இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கண்டன ஒன்றுகூடல் ஒன்று முன்னெடுக்கப்பட உள்ளது.

இதன்போது சிறுவர் மற்றும் பெண்கள் மீது துஷ்பிரயோகங்களை மேற்கொள்வோருக்கு கடுமையானதண்டனை வழங்கப்பட வேண்டும் மற்றும் இலங்கைச் சட்டத்தில் மிக இறுக்கமான மாற்றங்கள் கொண்டு வரப்பட வேண்டும் என்பன தொடர்பில் வலியுறுத்தப்பட உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

### சட்டவிரோத மணல் அகழ்வு: எண்மர் கைது!

மட்டக்களப்பு,ஜூன்03

மட்டக்களப்பு களுமுந்தன்வெளி ஆற்றில் சட்டவிரோதமாக மணல் அகழ்வில் ஈடுபட்ட எட்டுப் பேரை நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை கரடியனாறு பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இதன்போது மணல் அகழ்வுக்குப் பயன்படுத்திய உபகரணங்கள் உட்பட 8 டிராக்டர்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

ஆற்றங்கரையில் மணல் அகழ்வதற்கான அனுமதிப்பத்திரங்கள் இவர்களிடம் காணப்படுகின்ற போதிலும், இவர்கள் மீது விதிமுறைகளை மீறி ஆற்றுக்குள் மணல் அகழ்ந்தனர் எனக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் சட்டவிரோத மணல் அகழ்வைத் தடுக்க பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்ற போதிலும், சட்டவிரோத மணல் அகழ்வுச் செயற்பாடுகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

# திருமலை மாணவர்கள் தொடர் பகிஷ்கரிப்பு!

திருகோணமலை, ஜூன் 03


மூதூர் பெரிய வெளிக் கிராமத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் சிறுமிகள் மூவர் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்ட சம்பவத்துக்கு கண்டனம் தெரிவித்து, திருகோணமலை மாவட்டத்தில் உள்ள அனைத்துத் தமிழ் பாடசாலைகளிலும் நேற்றும் மாணவர்கள் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

திருகோணமலை கல்வி வலயம், மூதூர் வலயம் மற்றும் குச்சவெளி கோட்டம், தம்பலகாமம் கோட்டம், ஈச்சிலம்பற்று கோட்டம் என மாவட்டத்தில் உள்ள அனைத்து வலயங்களிலும் உள்ள தமிழ் பாடசாலைகள் இயங்கவில்லை.

இதேவேளை, கிண்ணியா வலயக் கல்வி அலுவலகப் பிரிவுக்குட்பட்ட ஆலங்கேணி விநாயகர் மகா வித்தியாலயம், ஈச்சந்தீவு விபுலாநந்தா வித்தியாலயம் , சுங்கான்குழி கலைமகள் வித்தியாலயம், உப்பாறு றோமன் கத்தோலிக்க கலவன் வித்தியாலயம், நகரத்தில் உள்ள தேசிய பாடசாலைகளான ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி, ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி, புனித சூசையப்பர் கல்லூரி, புனித மரியாள் கல்லூரி உட்பட பல பாடசாலைகள் இயங்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ச)

# காரைதீவில் மழை; மகிழ்ச்சியில் மக்கள் !





அம்பாறை, ஜூன் 03

அம்பாறை மாவட்டத்திலுள்ள, காரைதீவு பகுதியில் நீண்ட வறட்சியின் பின்பு மழை பெய்தமையால் அந்தப் பகுதிவாழ் மக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் இரவு முழுவதும் மழை பெய்துள்ளது எனக் கூறப்படுகிறது.

இந்த மழை காரணமாக தொடர்ச்சியாக நிலவி வந்த வெப்பம் தணிந்து, சூழல் குளிர்ச்சியடைந்துள்ளது என மக்கள் மகிழ்ச்சி வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)



காரைதீவில் 95 ஆவது நாளாகவும் நோன்புடன் போராட்டத்தில் இணைந்துள்ள அம்பாறை மாவட்ட இஸ்லாமியப் பட்டதாரிகளைப் படத்தில் காணலாம்.

அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு

# ஆலையடிவேம்பு பிரதேச செயலகத்தால் நிவாரணப் பொருள்கள் ஒப்படைப்பு!

ஆலையடிவேம்பு, ஜூன் 03

நாட்டில் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆலையடிவேம்பு பிரதேச செயலகத்தால் சேகரிக்கப்பட்ட நிவாரணப் பொருள்கள், மாவட்ட செயலகத்தில் கடந்த புதன்கிழமை ஒப்படைக்கப்பட்டன.

இங்கு சுமார் 8 லட்சம் ரூபாய் பெறுமதியான பொருள்களே சேகரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் வி.ஜெகதீசனின் பணிப்புரைக்கமைவாக, பிரதி பிரதேச செயலாளர் ரி.கஜேந்திரன் தலைமையிலான அலுவலக உத்தியோகத்தர்கள் இந்தப்பணியை முன்னெடுத்தனர்.



இந்த மனிதாபிமானப் பணிக்குப் பிரதேச பொது மக்களும், தனவந்தர்களும் தாமாகவே முன்வந்து உதவி, சுனாமி அனர்த்தத்தின் போது தென்பகுதி மக்கள் உணர்வோடு கிழக்குக் கரையோரப் பகுதி மக்களுக்கு உதவியமையை நினைவூட்டினர். (ச)

# வெறுப்புணர்வைத் தூண்டுவோரைத் தண்டிக்க வேண்டும்; இலங்கைக்கு மேற்குலக இராஜதந்திரிகள் அழுத்தம்!

கொழும்பு, ஜூன் 03

முஸ்லிம்களுக்கு எதிரான வெறுப்புணர்வைத் தூண்டும் குற்றங்களைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்று அரசுக்கு மேற்குலக இராஜதந்திரிகள் அழுத்தம் கொடுத்துள்ளனர்.

கடந்த மாதத்தில் முஸ்லிம்களுக்குச் சொந்தமான வணிக நிறுவனங்கள், பள்ளிவாசல்கள், மையவாடி என்பனவற்றில் மீது நடத்தப்பட்ட தாக்குதல்கள் முஸ்லிம்களுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட வெறுப்புணர்வு செயற்பாடுகளே. இவை தொடர்பாக இலங்கை அரசு விசாரணைகளை நடத்த வேண்டும் என்று மேற்குலக நாடுகளின் தூதுவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

பாதிக்கப்பட்ட முஸ்லிம்களுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் மேற்குலக நாடுகளின் இலங்கைக்கான தூதுவர்கள் நேற்று முன்தினம் கொழும்பில் உள்ள தேவதஹக



பள்ளிவாசலுக்குச் சென்று முஸ்லிம் அரசியல் மற்றும் மதப் பிரமுகர்களுடன் கலந்துரையாடியிருந்தனர்.

இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றியத் தூதுவர் துங் லாய் மார்கே மற்றும் ஆஸ்திரேலியா, கனடா, நெதர்லாந்து, நோர்வே, தென்னாபிரிக்கா, சுவிற்ஸர்லாந்து ஆகிய நாடுகளின் தூதுவர்கள் இந்தச் சந்திப்பில் பங்கேற்றனர்.

இதன் போது கருத்து வெளியிட்ட ஐரோப்பிய ஒன்றியத் தூதுவர் துங் லாய் மார்கே-

குற்றவாளிகளை அரசு விரைவாக சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

வெறுப்புணர்வைத் தூண்டும் குற்றங்களில் ஈடுபடுவோர் தண்டனையில் இருந்து தப்பிக்காத நிலையை இலங்கை அரசும், பொலிஸாரும் உறுதி செய்ய வேண்டியது முக்கியம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

முஸ்லிம்களுக்கு எதிரான வெறுப்புணர்வைத் தூண்டிவரும் முக்கியமான பௌத்த அடிப்படைவாத அமைப்பான பொது பலசேனாவின் பொதுச் செயலர் கலகொடஅத்தே ஞானசார தேரர் இன்னமும், இலங்கைப் பொலிஸாரால் கைது செய்யப்படாத நிலையிலேயே மேற்குலக தூதுவர்கள் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

(க)

## சீனா-இலங்கை பாதுகாப்பு உறவு; பலப்படுத்துவது தொடர்பில் பேச்சு!



கொழும்பு, ஜூன் 03

சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான பாதுகாப்பு உறவுகளைப் பலப்படுத்துவது தொடர்பில் இலங்கைப் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சருடன் சீனாவின் உயர்மட்ட கடற்படை அதிகாரிகள் பேச்சு நடத்தியுள்ளனர்.

பாதுகாப்பு அமைச்சில் நேற்று முன்தினம் இந்தப் பேச்சுக்கள் இடம்பெற்றுள்ளன.

சீனகடற்படையின் கிழக்குப் பிராந்திய கட்டளைப் பீடத்தின், பிரதி கட்டளை தளபதியான, றியர் அட்மிரல் சென் ஹாவோ தலைமையிலான சீன அதிகாரிகளே இந்தப் பேச்சுக்களில் பங்கேற்றனர்.

இரண்டு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு பாதுகாப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்திக் கொள்வது குறித்து இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்த சீன கடற்படையின் உயர்மட்ட அதிகாரிகள் இலங்கைக் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்னவையும் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளனர்.

இந்தச் சந்திப்பு இலங்கைக் கடற்படைத் தலைமையகத்தில் கடந்த புதன்கிழமை இடம்பெற்றுள்ளது.

இருதரப்பு முக்கியத்துவம் வாய்ந்த விடயங்கள் குறித்து இந்தச் சந்திப்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

சீனத் தூதரக பாதுகாப்பு ஆலோசகர் கேணல் சூ ஜியான் வெய்யும் இந்தச் சந்திப்பில் பங்கேற்றிருந்தார்.

## மலேஷிய விமானத்தில் இலங்கையரின் குண்டுப் புரளி தீவிரவாத செயல் அல்ல!




கொழும்பு, ஜூன் 03

மெல்பேர்னில் இருந்து புறப்பட்ட மலேஷியன் எயர்லைன்ஸ் விமானத்தில் இலங்கையர் ஒருவர் ஏற்படுத்திய குண்டுப் புரளி, தீவிரவாத செயல்களுடன் தொடர்புடையது அல்ல என்று ஆஸ்திரேலிய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த புதன் கிழமை இரவு 11.11 மணியளவில் மலேஷியன் எயர்லைன்ஸ் விமானம் மெல்பேர்ன் விமான நிலையத்தில் இருந்து கோலாலம்பூர் நோக்கிப் புறப்பட்ட சற்று நேரத்தில், அதில் பயணம் செய்த இலங்கையர் ஒருவர் தன்னிடம் குண்டு இருக்கிறது என்றும் அதை விமானத்தை வெடிக்க வைக்கப் போகிறோம் என்றும் சத்தமிட்டுள்ளார்.

அத்துடன் அவர் விமானியின் அறைக்குள்ளேயும் நுழைய முயன்றார்.

இதையடுத்து, புறப்பட்ட ஒரு மணிநேரத்திலே அந்த விமானம், மீண்டும் மெல்பேர்ன் விமான நிலையத்தில் அவசரமாகத் தரையிறக்கப்பட்டது.

உடனடியாக விமானத்துக்குள் நுழைந்த ஆஸ்திரேலிய கொமாண்டோக்கள், மிரட்டல் விடுத்த இலங்கையரைக் கைது செய்தனர்.

25 வயதுடைய மனோத் மாக்ஸ் என்ற பெயருடைய இலங்கையரே அவ்வாறு கைது செய்யப் பட்டவராவார்.

அவரிடம் நடத்தப்பட்ட விசாரணைகளில், அவர் மனநிலை பாதிக்கப்பட்டிருப்பதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன என்றும், இந்தச் சம்பவத்துக்கும் தீவிரவாத செயல்களுக்கும் தொடர்பில்லை என்றும் ஆஸ்திரேலிய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மனநல மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே அவர் விமானப் பயணச்சீட்டைப் பெற்றுள்ளார் என்றும் தெரியவந்துள்ளது.

## அமெரிக்க இராணுவக் குழு இலங்கையில்!

கொழும்பு, ஜூன் 03

அமெரிக்க இராணுவ பயிற்சி அதிகாரிகள் குழுவொன்று இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ளது. அமெரிக்க இராணுவ 'றிசேர்வ்' படை அதிகாரிகள் பயிற்சிப் படையணியைச் சேர்ந்த 33 அதிகாரிகள் இரண்டு வாரகால விஜயமாக இலங்கைக்கு வந்துள்ளனர்.


இவர்கள் இலங்கையில் தங்கியிருக்கும் போது, தியத்தலாவ பயிற்சி முகாமில், எதிர் வரும் ஜூன் மாதம் 7ஆம் திகதி வரை ஆயுதங்களைக் கையாள்வது, களமுனை நடை முறைகள், உடற்பயிற்சி, உள்ளிட்ட பயிற்சிகளை இலங்கை இராணுவத்துக்கு வழங்கவுள்ளது.

## இலங்கைக்கு 10 மீட்புப் படகுகளை அனுப்பியது ஆஸ்திரேலிய அரசு!

கொழும்பு, ஜூன் 03

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இலங்கைக்கு ஆஸ்திரேலிய அரசு முதற்கட்டமாக 10 இறப்பர் படகுகள் மற்றும் இயந்திரங்கள் கொண்ட உதவிப்பொருள்களை அனுப்பி வைத்துள்ளது.

சிறிலங்கன் விமான சேவையின் விமானம் மூலம், இந்த அவசர உதவிப் பொருள்கள் நேற்றுமுன்தினம் காலை



எடுத்து வரப்பட்டுள்ளன.

கொழும்புத் துறைமுகத்துக்கு அருகில் உள்ள ரங்கல கடற்படைத் தளத்தில் வைத்து இலங்கைக்கான ஆஸி. தூதுவர், பிரைஸ் ஹட்சிசன், இந்தப் படகுகளை வெளிவிவகார அமைச்சர் ரவி கருணாநாயக்கவிடம் முறைப்படி கையளித்துள்ளார்.

மீட்புப்பணிகளுக்காகப் பயன்படுத்தப்படும், 10 இறப்பர் படகுகள் மற்றும் வெளியிணைப்பு இயந்திரங்கள் இதன்போது கையளிக்கப்பட்டுள்ளன. உடனடியாகவே இந்தப் படகுகள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

# மஹிந்த அரசின் தூரநோக்குச் செயற்பாடே தென்மாகாண பெரிய அழிவுக்குக் காரணம்

## சாடுகிறார் இராஜாங்க அமைச்சர் டிலான்



கொழும்பு, ஜூன் 03

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அரசின் தூர நோக்கு செயற்பாடுகளே தென் மாகாணத்தில் பெரியளவ் அழிவுகள் ஏற்படக் காரணம் என்று ராஜாங்க அமைச்சர் டிலான் பெரேரா சாடியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தெற்கு அதிவேக நெடுஞ்சாலை அமைக்கப்பட்ட போது அப்போதைய அரசு இயற்கை பாதிப்புக்கள் மற் றும் சுற்றாடல் காரணிகள் தொடர்பில் கவனம் செலுத்தவில்லை. எனினும், நானும் அந்த அமைச்சரவையில் அங்கம் வகித்த ஒருவரே.

அப்போதைய அரசு சுற்றாடல் காரணிகளைக் கருத்திற் கொண்டு தெற்கு அதிவேக நெடுஞ்சாலையை நிர்மாணித்திருந்தால் இத்தனை அழிவுகள் உயிர்ச் சேதங்கள் ஏற்பட்டிருக்கா.

அதிவேக நெடுஞ்சாலைகள் மிகவும் அவசியமானவை என்ற போதிலும், சுற்றாடல் காரணிகள் கருத்திற் கொள்ளப்படாது மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டங்கள் ஆபத்துக்களை உண்டாக்குவன. -என்றார். (எ)

# முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறை அனர்த்தத்தின் பின்பும் தணியவில்லை

## முன்னாள் அமைச்சர் அஸ்வர் வேதனை



கொழும்பு, ஜூன் 03

நாட்டில் அண்மையில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தத்தால் கடும்பாதிப்புஏற்பட்டாலும்கூட இன்று நாட்டின் பல இடங்களிலும் முஸ்லிம்களுக்கு எதிரான வன்செயல்களை நாங்கள் காணக் கூடியதாக இருக்கின்றன என்று முன்னாள் அமைச்சரும் முஸ்லிம் முற்போக்கு முன்னணியின் செயலதிபருமான ஏ. எச்.எம். அஸ்வர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இதற்கு நிரந்தரத் தீர்வு காணப்பட வேண்டும். ஜனாதிபதி இதனை நேரடியாக முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள்அனைவரையும்அழைத்துப் பேசி ஒரு தீர்வுக்கு வர வேண்டும். அதுவன்றி ஒவ்வொருவரிடத்திலும் பேசுவதன் மூலமாக இதற்கு ஒரு நாளும் தீர்வு காண முடியாது என்பதை ஜனாதிபதி நன்கு புரிந்துகொள்ளவேண்டும்.

இலங்கை சமாதானப் பேரவையின் செயலாளர் ஜிஹான் பெரேரா ஊடகங்களில் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூட முஸ் லிம்களுக்கு எதிராக அவிழ்த்து விடப்பட்டுள்ள வன்செயல்களை முடிவுக்குக்கொண்டுவர வேண்டியது இந்த அரசின் தலையாய கடமை என்பதைச் சுட்டிக் காட்டியுள்ளார்.

கடந்த மாதத்துக்குள் முஸ்லிம்களுக்கு எதிரான 21 தாக்குதல் சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன என்று அவர் சுட்டிக் காட்டியுள்ளார். அந்த ஊடகச் செய்தி சர்வதேச ரீதியிலும் சென்றுள்ளது.

இன்றும் கூட பல முஸ்லிம் கிராமங்களில் பெண்கள் தறாவீஹ் தொழ பள்ளிவாசலுக்குச் செல்வதற்கு அச்சம் கொண்டுள்ளனர் என்று எமக்கு பல பாகங்களிலிருந்தும் அறிவித்தல்கள் கிடைத்துள்ளன. இந்த நிலை முன்பிருந்ததாக அவர்களே குற்றஞ்சாட்டினார்கள்.

எனவே, இந்தப் புனிதமான மாதத்தில் தறாவீஹ் போன்ற வணக்க வழிபாடுகளை எந்தப் பயமும் இல்லாமல் செய்வதற்கு உரிய நல்ல சூழ்நிலையை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன செய்து தர வேண்டும் என முஸ்லிம்முற்போக்குமுன்னணி செயலாளர்என்றவகையில்நான் கேட்டுக் கொள்ள விரும்புகின்றோம். -என்றார். (எ)

# தினசரி ராசி பலன் 03.06.2017

2017 ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் வைகாசித் திங்கள் 20 ஆம் நாள் சனிக்கிழமை நவமித்திதி காலை 6.51 மணி வரை. பின்னர் தசமி. நட்சத்திரம்: உத்தரம் பகல் 1.26 மணி வரை. பின்னர் அத்தம். மரணயோகம் முழுவதும். ராகுகாலம் காலை 8.59 மணி முதல் 10.34 மணி வரை. சுபநேரம். பிற்பகல் 2.53 மணி முதல் 4.23 மணி வரை. திவசம் செய்ய வேண்டிய திதி. வைகாசிமாத வளர்பிறை தசமி. பிறந்த நட்சத்திர வழிபாடு: உத்தரம்.

## 'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.

**மேஷம்:** ஆக்கபூர்வமானபலன்கள்காணப்படுகின்றன. வருமானம் வளமாக இருக்கும். வியாபாரம் ஆக்கபூர்வ முன்னேற்றம் அடையும். உத்தியோகத்தில் பதவி உயர்வும், ஊதிய உயர்வு என்பனவும் கிடைக்கும்.

**ரிஷபம்:** அனுகூலமான நாள். பணப்புழக்கம் சரளமாக இருக்கும். குடும்ப உறவு, ஒற்றுமை வளர்ச்சியடையும். வெளிநாட்டுப் பயணம் அனுகூலமாகும்.

**மிதுனம்:** சஞ்சலமான நாள். மனக்குழப்பம், யோசனை அதிகரிக்கும். தொழிலில் கஷ்டம் உண்டாகும். உத்தியோகத்தர்கள் உயர் அதிகாரிகளின் கெடுபிடிகளுக்கு ஆளாவார்கள்.

**கடகம்:** சமபலன்கள் காணப்படுகின்றன. செலவினங்கள் அதிகரிக்கும். பயணங்களைத் தவிர்ப்பது நன்று. கொடுக்கல், வாங்கலில் கவனம் தேவை.

**சிம்மம்:** உயர்வான பலன்கள் காணப்படுகின்றன. வருமானம் உயர்வடையும். குடும்பத்தில் மகிழ்ச்சி ததும்பும். வியாபாரம் நன்கு செழித்தோங்கும்.

**கன்னி:** மகிழ்ச்சியான நாள். பண பலம் அதிகரிக்கும். உறவினர்களின் சுபகாரியங்களில் கலந்து மகிழ்வார்கள். நீண்ட காலம் காத்திருந்த உறவுகளைக் கண்டு மகிழ்வார்கள்.

**துலாம்:** சலனம் மிகுந்த நாள். மனச்சஞ்சலம் அதிகரிக்கும். வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் குறையும். உறவினர்களால் தொல்லைகள் உண்டாகும்.

**விருச்சிகம்:** இனிமையான நாள். தனலாபம் பெருகும். குடும்ப வாழ்வு இனிமையாக இருக்கும். ஆடை, ஆபரணங்கள் சேரும்.

**தனுசு:** விருத்தியான நாள். பொருளாதாரம் ஏற்றமடையும். குடும்ப உறவு மேம்படும். வியாபாரம் நன்கு விருத்தியடையும். மாணவர்களின் கல்வியில் விரக்தி உண்டாகும்.

**மகரம்:** இன்பமான நாள். குடும்ப வாழ்வில் சந்தோஷம் அதிகரிக்கும். இதுவரை பிரிந்திருந்தவர்கள் மீண்டும் ஒன்றிணைவார்கள். திருமணவாய்ப்புக்கள்கனிந்துவரும்.

**கும்பம்:** குழப்பமான நாள். எதையும் சரியான முடிவு எடுக்க முடியாமல் குழம்புவார்கள். குடும்பத்தில் சிறுசிறு பூசல்கள் தோன்றும்.

**மீனம்:** சமபலன்கள் காணப்படுகின்றன. வரவும், செலவும் சமமாக இருக்கும். யாருக்கும் பிணை போதல் கூடாது. கொடுக்கல், வாங்கல்களைத் தவிர்க்கவும்

சந்திராட்டம நாள்: அச்சுவினி, பரணி, கார்த்திகை 1 ஆம் கால் ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தோர் நற்கருமங்களைத் தவிர்க்கவேண்டும்.

# தொற்றுநோய்கள் பரவும் அபாயம் செஞ்சிலுவைச் சங்கம் எச்சரிக்கை

கொழும்பு, ஜூன் 03

இலங்கையில் தொற்று நோய்கள் ஏற்படக்கூடிய அபாய நிலைமை ஏற்பட்டுள்ளதாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் தெரிவித்துள்ளது.

அண்மையில் நாட்டின் பல பகுதியில் ஏற்பட்ட வெள்ள நிலைமையால் இவ்வாறான அபாயம் ஏற்பட்டுள்ளது.

மழை வெள்ளம் மற்றும் மண்சரிவு காரணமாக பெருமளவான உயிர்கள் காவு கொள்ளப்பட்டிருந்த நிலையில், வெள்ளம் காரணமாக தொற்று நோய்கள் அதிகளவில் பரவக் கூடிய அச்சுறுத்தல் உருவாகியுள்ளது என்று சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

வெள்ளம், மண்சரிவால் பாதிக்கப்பட்ட ஆயிரக் கணக்கான மக்கள் இன்னமும் தமது சொந்த இடங்களுக்குத் திரும்ப முடியாத நிலைமை காணப்படுகின்றது என்றும் அது சுட்டிக் காட்டி யுள்ளது.

நீர் தேங்கி நிற்பதால் நுளம்புகள் உற்பத்தியாகி நோய் பரவக்கூடும். டெங்கு போன்ற நோய்கள் தீவிரமாகப் பரவலாம் என்றும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (எ)



கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாசாலையில் கடந்த வெள்ளிக்கிழமை அதிபர் கு.திலீபன் தலைமையில் பதினேழு சாரணர்களுடன் சாரண ஆசிரியர் கு.பிரசன்னாவினால் புதிதாக சாரணியச்சின்னம் சூட்டித் தொடக்கி வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் உதவி மாவட்டச் சாரண ஆணையாளர் இ.தவகோபால், கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாசாலை ஓய்வுநிலை அதிபர் செல்வி க.கமலநாயகி, இங்கிலாந்து பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள் க.சுசீந்திரன் தம்பதிகள் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். (இ)

# வர்ண உடையுடன் பாடசாலைக்கு பாதிக்கப்பட்ட மாணவர் செல்லலாம்

வெள்ளம் மற்றும் மண் சரிவால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளிலுள்ள பாடசாலை மாணவர்கள் வர்ண உடை அணிந்து பாடசாலை செல்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்று கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

சீரற்ற காலநிலையில் ஏற்பட்ட வெள்ளம், மண் சரிவால் பாடசாலை மாணவர்களும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். 40 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் உயிரிழந்துள்ளனர்.

எனவே, பாதிக்கப்பட்ட மாணவர்களுக்காக பலவழிகளிலும் உதவிகளை வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. இதன்படி, கொப்பி, புத்தகங்கள் வழங்கப்படும். அத்துடன், பாடசாலைச் சீருடையும் வழங்கப்படும்.

சீருடை வழங்கப்படும் வரை பாதிக்கப்பட்ட பகுதிகளிலுள்ள மாணவர்கள் வர்ண உடையுடன் பாடசாலைக்கு செல்ல முடியும். அதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. பரீட்சை சான்றிதழ்கள் உட்பட கல்வியுடன் தொடர்புடைய சான்றிதழ்கள் அழிவடைந்திருந்தால் அவற்றை மீளப்பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.-என்றார். (எ)



# இலங்கையின் இரட்டை வேடம்

## சீனா ஆதிக்கம்; திரிசங்கு நிலையில் இந்தியா!

இலங்கைக்கு உற்ற நண்பனாகவும், உண்மையான கூட்டாளியாகவும் இந்தியா என்றென்றும் விளங்கும். இலங்கையில் உள்ள நமது சகோதரர்களும் சகோதரிகளும் வளமான வாழ்வு பெறவும், முன்னேறிச் செல்லவும் தேவையான பொருளாதார மற்றும் சமுதாய வளர்ச்சிக்கான திட்டங்களுக்கு இந்தியா உறுதியாக உதவும் என இந்தியத் தலைமை அமைச்சர் மோடி மே 12 அன்று கொழும்பில் கூடியிருந்த பெருங் கூட்டத்தில் வாக்குறுதி வழங்கினார்.

மூன்று நாள்கள் கழித்து மே 15 ஆம் நாள் சீனாவின் தலைநகரான பீஜிங்கில் நடைபெற்ற சர்வதேச பொருளாதார வழித்தட மாநாட்டில் பங்குபெற இந்தியா மறுத்து விட்டது. தனது இறையாண்மையை சீனா மதிக்கவில்லை என இந்திய அரசு குற்றஞ்சாட்டியது. ஆனால், இந்தியா பங்கு பெற மறுத்த மாநாட்டில் இலங்கை மிகுந்த மகிழ்ச்சியுடன் பங்கேற்றுள்ளது.

ஆசியா, ஐரோப்பா, ஆபிரிக்கா ஆகிய கண்டங்களில் உள்ள பல நாடுகளுக்கிடையே புதிய நெடுஞ் சாலைகள், தொடர்வண்டிப் பாதைகள், எரிவாயு குழாய்கள்-எண்ணெய்க் குழாய்கள் பதிப்பு, மின்பாதை, தகவல் தொடர்பு இணைப்பு, கப்பல் போக்குவரத்துத் தடங்கள், துறைமுகங்கள், தொழிற்பேட்டைகள் ஆகியவற்றின் மேம்பாட்டுக்காக சுமார் ரூபா 9 லட்சம் கோடி செலவிடும் திட்டம் ஒன்றினை சீனா வகுத்துள்ளது.

### இந்தியா புறக்கணிப்பு

இத்திட்டம் குறித்து ஆராய்வதற்காகவே இம்மாநாடு கூட்டப்பட்டுள்ளது. கடந்த நான்காண்டு காலத்திற்கு மேலாக இத்திட்டம் குறித்து இந்நாடுகளுடன் சீனா ஆலோசனையை நடத்தியுள்ளது.

இந்தப் பொருளாதார வழித்தடத் திட்டத்தின் ஒரு பகுதியான சீனா-பாகிஸ்தான் பொருளாதார மண்டலத்தில் பாகிஸ்தான் ஆக்கிரமித்துள்ள காஷ்மீர் பகுதியும் இடம் பெற்றுள்ளதால் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து இந்தியா இந்த மாநாட்டைப் புறக்கணித்துள்ளது.

ஆனால், இந்தியாவின் நட்பு நாடாகவும், நம்பிக்கைக்குரிய கூட்டாளியாகவும் மோடியால் கருதப்பட்ட இலங்கையின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்த மாநாட்டில் கலந்து கொண்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

சில நாள்களுக்கு முன்னால் எந்த நாட்டை பிரதமர் மோடி பாராட்டிப் புகழ்ந்தாரோ, எந்த நாட்டின் பல்வேறு பொருளாதாரத் திட்டங்களுக்கு அள்ளித்தருவதாக வாக்குறுதி தந்தாரோ அந்த நாடு இந்தியாவின் இறையாண்மையை மதிக்காத சீனா கூட்டிய மாநாட்டில் பங்கேற்றுள்ளது



என்பது நம்பிக்கைத் துரோகமாகும்.

இதை இந்திய அரசு உணராமல் போனது ஏனோ? 1962ஆம் ஆண்டில் இந்திய எல்லைப்பகுதியில் சீனர் ஆக்கிரமித்தபோது சீனாவை கண்டிக்க இலங்கை முன்வரவில்லை என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

### இலங்கையின் இரட்டை வேடம்

ஆக்கிரமிப்பாளனான சீனாவையும் ஆக்கிரமிப்புக்குள்ளான இந்தியாவையும் சமதட்டில் வைத்து இரு நாடுகளுக்கிடையே சமரசம் செய்வதற்கு இலங்கை முயன்றது.

1971 ஆம் ஆண்டு வங்கதேசப் பிரச்சினையில் இந்தியா--பாகிஸ்தான் போர் மூண்டபோது இந்திய வான வெளியின் மேல் பாகிஸ்தான் விமானங்கள் பறக்கக்கூடாது என இந்தியா தடை விதித்த போது, பாகிஸ்தான் போர் விமானங்கள் இலங்கை வழியாக வங்கதேசம் சென்று குண்டு மழை பொழிய அனுமதித்தது இலங்கை.

'சார்க்' என்ற பெயரில் தென்னாசிய நாடுகளின் கூட்டமைப்பு ஒன்றை இந்தியா அமைத்துள்ளது. இதில் அங்கம் வகிக்கும் பாகிஸ்தான், இலங்கை, வங்கதேசம், மாலைதீவு, நேபாளம் ஆகிய நாடுகள் சீனா கூட்டிய மாநாட்டில் கலந்துகொண்டிருக்கின்றன.

ஒரே ஒரு நாடான பூட்டான் மட்டும் இதில் கலந்துகொள்ளவில்லை. இந்து நாடான நேபாளம்கூட இந்துத்துவப் பிரதமர் மோடிக்குத் துணையாக நிற்கவில்லை. இந்தியாவின் அண்டை நாடுகள் அனைத்தும் இந்தியாவிற்கு எதிராகச் செயற்படும் சீனாவுடன் கரம்கோத்து நிற்கின்றன.

பிரிட்டன், ரஷ்யா, மத்திய ஆசிய நாடுகள் ஆகியவையும் சீனாவின் இந்தத் திட்டத்தை வரவேற்றுள்ளன. இம்மாநாட்டில் அமெரிக்கா பார்வையாளராகக் கலந்து கொண்டுள்ளது. 130 நாடுகள் பங்கேற்றிருக்கும் இத்திட்டம் நிறைவேற்றப்பட்டு முடியும்போது இந்நாடுகளின் அரசியலையும், பொருளாதாரத்தையும் கட்டுப்படுத்தும் அளவுக்கு சீனா வலிமைபெற்றுத் திகழும்.

### சீனாவில் பிடிக்குள் இந்தியா...?

அதுமட்டுமல்ல, மியன்மார், வங்கதேசம், இலங்கை, பாகிஸ்தான் ஆகிய நாடுகளில் தனது கடற்படைத் தளங்களை அமைத்து சீன டிராகன் இந்தியாவைச் சுற்றி வளைத்துள்ளது. இதன் விளைவாக இந்துமா கடலின் ஆதிக்கம், சீனாவின் பிடிக்குள் மெல்ல மெல்லச் சென்றுகொண்டிருக்கிறது.

தென்னாசியாவில் மட்டும் அல்ல, உலக அரங்கிலும் இந்தியா தனிமைப் படுத்தப்பட்டுத் தவிக்கிறது. தென்னாசியாவின் மிகப்பெரிய நாடான இந்தியா, தனது அண்மையில் உள்ள சிறிய நாடுகளைக்கூட, தனது பக்கம் வைத்துக்கொள்ளத் தவறிவிட்டது. இந்தியாவின் இராஜதந்திரம் அண்டை நாடுகளில்கூட செல்லுபடியாகவில்லை.

வாய்ப்புக் கிடைக்கும்போதெல்லாம் இந்த நாடுகள் இந்தியாவுக்கு எதிரான சீனாவுடன் கைகோக்கத் தவறவில்லை. சீனாவுடன் சேர்ந்து நிற்பதன் மூலம்தான் இந்தியாவின் தன்முனைப்புத் தனத்திலிருந்து தங்களைக் காப்பாற்றிக்கொள்ள முடியும் என இந்நாடுகள் கருதுகின்றன.

உலகில் உள்ள கடல் வழிப் பாதைகளில் முக்கியமானது இந்துமா கடல் பாதையாகும். கிழக்கு நாடுகளிலிருந்து மேற்கு நாடுகளுக்குச் செல்லும் சரக்குக் கப்பல்களும், மேற்கு நாடுகளிலிருந்தும் அராபிய, ஆபிரிக்க நாடுகளிலிருந்தும் கிழக்கு நாடுகளுக்குச் செல்லும் சரக்குக் கப்பல்களும் எண்ணெய் கப்பல்களும் இந்தப் பாதை வழியே செல்லுகின்றன.

ஆங்கிலேயர் ஆட்சியில் இந்தியா, இலங்கை, பர்மா, மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகள் கட்டுண்டுக் கிடந்தபோது இந்துமாக்கடல் பிரிட்டனின் கட்டுப்பாட்டில் இருந்தது.

### இந்திரா காந்தியின் தலையீடு செல்வாக்கு

இந்தியா விடுதலை பெற்ற பிறகு இந்திய அரசின் கட்டுப்பாட்டின் கீழ் வந்தது. 1983 ஆம் ஆண்டில் இலங்கையில் தமிழர்களுக்கு எதிரான இனக் கலவரம் திட்டமிட்டு நடத்தப்பட்ட போது இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி அதில் தலையிட்டார்.

இலங்கையில் நடைபெறுவது திட்டமிட்ட இனப்படுகொலை எனக் கண்டிக்க அவர் தவறவில்லை. மூத்த இராஜதந்திரியான ஜி. பார்த்தசாரதியை அனுப்பி இலங்கை அரசுக்கும் தமிழர் தலைவர்களுக்கும் இடையே பேச்சு வார்த்தை நடத்தச் செய்தார்.

அதன் விளைவாக தமிழர்களுக்கு ஓரளவு அதிகாரமளிக்கும் திட்டம் வகுக்கப்பட்டது. ஆனால் இத்திட்டத்தை நிறைவேற்ற விரும்பாத இலங்கை அதிபர் ஜெயவர்த்தனா, திருகோணமலையில் அமெரிக்க கடற்படைத் தளத்தைக் கொண்டுவரும் முயற்சியில் இரகசியமாக ஈடுபட்டார்.

அமெரிக்கத் தளம் அமையுமானால் இந்தியாவை மிரட்ட முடியும் என அவர் கருதினார். ஆனால், பிரதமர் இந்திரா அதை அனுமதிக்கவில்லை. இந்துமாக் கடல் பகுதியில் எந்த வல்லரசின் இராணுவத் தளமும் அமைவது என்பது இந்தியாவின் பாதுகாப்பிற்கு எதிரானது என எச்சரித்தார்.

அதன் விளைவாக அமெரிக்க கடற்தளம் அமைக்கப்படும் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. ஆனால், இப்போது இலங்கையின் தெற்கு முனையில் அம்பந்தோட்டை என்னும் இடத்தில் சீன கடற்படைத் தளம் அமைக்கப்பட்டு விட்டது.

### இலங்கையில் காலூன்றி விட்டது சீனா!

பொருளாதார உதவி, இராணுவ உதவி என்ற பெயரில் சீனா இலங்கையில் ஆழமாக கால் ஊன்றி நிற்கிறது. இந்து மாக்கடலில் சீனா தனது ஆதிக்கத்தை நிலைநிறுத்துவதற்கான முயற்சியில் கிட்டத்தட்ட வெற்றி பெற்றுவிட்டது.

கடந்த கால காங்கிரஸ் அரசும் இப்போதைய பா.ஜ.க. அரசும் இலங்கையின் சூழ்ச்சியைப் புரிந்து கொள்ளாமல் அதை திருப்தி செய்வதன் மூலம் தங்கள் பக்கம் திருப்பலாம் என செய்கிற முயற்சி ஒருபோதும் வெற்றி பெறப் போவதில்லை.

இலங்கையைத் திருப்தி செய்வதற்காக ஈழத்தமிழர்களை பலிகொடுக்க காங்கிரஸ் அரசும் பா.ஜ.க. அரசும் தவறவில்லை. இதன் விளைவாக இந்தியாவின் தென்வாயிலில் சீனாவின் அபாயம் கதவைத் தட்டுகிறது.

1962 ஆம் ஆண்டு சீனப் படையெடுப்பிற்குப் பிறகு அன்றையப் பிரதமர் நேரு ''வடமாநிலங்களில் இராணுவ முக்கியத்துவம் வாய்ந்த தொழிற்சாலைகள் மற்றும் அமைப்புகளை நிறுவுவதில்லை'' என முடிவு செய்தார்.

அதன் விளைவாக தென் மாநிலங்களில் தற்போது 700இற்கும் மேற்பட்ட இராணுவ முக்கியத்துவம் வாய்ந்த தொழிற்சாலைகள் நிறுவப்பட்டிருக்கின்றன.

இலங்கையில் சீனா காலூன்றியதன் மூலம் மேலே கண்ட தொழிற்சாலைகள் அனைத்தும் அபாயத்திற்குள்ளாகியுள்ளன.

இந்திய அரசின் தொலைநோக்குச் சிந்தனையற்ற இராஜதந்திரத்தின் விளைவாக ஈழத்தமிழர்கள் மட்டுமல்லாமல் ஒட்டுமொத்த இந்திய மக்களே பேரழிவை எதிர்நோக்கியுள்ளனர்.

எல்லாவகையிலும் இந்தியாவை எதிர்பார்த்திருக்கும் அண்டை நாடுகள் ஏதுவும் உண்மையான நட்புறவுடன் இல்லை என்றாலும் பரவாயில்லை.

ஆனால், இந்தியாவின் பகை நாடான சீனாவுடன் கரம்கோத்து நிற்க அந்நாடுகள் கொஞ்சமும் தயங்கவில்லை.


அன்று ஆசிய-ஆபிரிக்க நாடுகளுக்குத் தலைமை தாங்கிய இந்தியா இன்று தனிமைப்படுத்தப்பட்டுள்ள நிலைக்கு ஆளாகித் தவிக்கிறது.

நன்றி: இணையம்




### காலவரிசைப் பட்டியைக் கூர்ந்து ஆராயும்பொழுது

காலவரிசைப் பட்டியைக் கூர்ந்து ஆராயும்பொழுது, நிகழ்வுகள் இன்னும் கண்டனத்திற்கு ஆளாகக் கூடியதாக இருந்தன. 2010 நவம்பர் 28 அன்று விக்கிலீக்ஸ், டிசெம்பர் 1966க்கும் 2010க்கும் இடையில் அமெரிக்க வெளியுறவுத்துறைக்கு தூதரகங்கள், தூதுவர்துணைஅலுவலகங்கள், திட்டப் பணிக்குழுக்களால் அனுப்பப்பட்ட



Marianne Ny

வகைப்படுத்தப்பட்ட 2 இலட்சத்து 50 ஆயிரம் தகவல்களை வெளியிடத் தொடங்கியது. அரசும் கோபத்துடனும் அச்சுறுத்தலுடனும் அதற்குப் பதில் கொடுத்தது. எனவே விக்கிலீக்ஸ் நிதி ரீதியான மற்றும் பிறவகையான திட்ட மிட்ட தாக்குதல்களுக்கு ஆளானது.

இரண்டு நாள்கள் கழித்து, நவம்பர் 30 அன்று, ஸ்வீடிஷ் அரசு வழக்குரைஞர் Marianne Ny இன் வேண்டுகோளின் பேரில், சர்வதேச பொலிஸ் அமைப்பு (இண்டர்போல்) ஸ்வீடிஷ் ஆரம்பநிலை விசாரணை (அதற்கான குற்றச்சாட்டுக்கள் அல்லது குற்றம் சாட்டல் இருக்கவில்லை) தொடர்பானதில் அசாஞ்சை கைது செய்ய 188 நாடுகளுக்கு சிவப்பு அறிக்கை வழங்கியது. இண்டர்போல் அதன் வேண்டுகோளை பகிரங்கமாக அறிவித்தது. அசாஞ்ச் லண்டனில் டிசெம்பர் 7 அன்று பொலிஸால் சிறைப்பிடிக்கப் பட்டார்.

கொஞ்சநஞ்சம் நேர்மையுடன் இருக்கும் எவரும் அல்லது அரசியல் கூர்மதி உடைய எவரும் இவற்றிற்கு இடையிலான தொடர்பை கண்டு கொள்ள முடியும். அமெரிக்க அரசியல் நிறுவனத்தில் கணக்குத் தீர்ப்பதற்கு விருப்பமுள்ள வழிமுறைகளுள் ஒன்றாக பல்வேறு அமெரிக்க அரசு முகாமைகள் பாலியல் ஊழல்களை ஒழுங்கு செய்தன அல்லது சாதகமாக எடுத்துக் கொண்டன. அமெரிக்க பாதுகாப்புச் செயலர், றொபேர்ட் கேட்ஸ் புன்னகையுடன், லண்டனில் அசாஞ்ச் கைது 'எனக்கு நல்ல செய்தியாக ஒலிக்கின்றது' என்று கூறியதாக செய்தி அறிக்கைகள் டிசெம்பர் 2010ல் குறிப்பிட்டன.

### அசாஞ்ச் மீதான தாக்குதலை தூண்டிவிடும் முக்கியமானவர்கள்

ஆங்கிலேய மிதவாதக் கட்சிகளின் ஊதுகுழலான கார்டியனின் Marina Hyde போன்ற இயல்பாகவே, எரிச்சலுற்ற, சுயதிருப்தி கொண்ட முட்டாள்கள், வழக்குக்கு இன்னும் போதிய காரணமிருக்கிறது என்று தொடர்ந்து வலியுறுத்தினர். "நான் நினைக்கிறேன், நாம் அனைவரும் இங்கு உண்மையான முக்கிய படிப்பினையைப் பெற்றோம், நீங்கள் உண்மையில் நீண்டகாலம் காத்து இருந்தாலும் மற்றும் அவற்றை எதிர்கொள்ள முற்றிலும் மறுத்தால், மோசமான நிகழ்வுகள் மறைந்து போய் விடும்'' என அந்தப் பெண்மணி எழுதினார்.

ஹைட் ஒருபோதும் மிகவும் தீவிரத்துடன் முன்னெடுக்காத, போருக்கும் ஏகாதிபத்தியத்துக்கும் தங்கள் எதிர்ப்பை, குப்பையில் போட்டுவிட்ட முன்னாள் இடது மற்றும் பெண்ணியவாதிகளுக்காக பேசுகிறார். செல்வம் மிக்க முன்னாள் தீவிரப்போக்குத் தட்டு தோலுரிக்கப்பட்டு, ''மறுபுறம்'' போவதற்கு வழிவகுக்கப்பட்ட இன்னுமொரு இயங்குமுறையாக அசாஞ்ச் வழக்கு இருக்கிறது. இந்த நிகழ்ச்சிப் போக்கும், 1990களின் தொடக்கத்திற்கு பின்னர் இருந்து போய்க்கொண்டிருக்கிறது.

சுவீடனில் அசாஞ்ச் மீதான தாக்குதலைத் தூண்டிவிடும் முக்கியமானவர்களுள் ஒருவர் வழக்கறிஞரும் அரசியல்வாதியுமான Claes Borgstrom, 2000ஆம் ஆண்டிலிருந்து 2007ஆம் ஆண்டு வரையில் இருந்த, ஆப்கானிஸ்தானில் அமெரிக்க படையெடுப்புக்கு ஆதரவாக இருந்த, சமூக


றொபேர்ட் கேட்ஸ்


Claes Borgstrom,

ஜனநாயக அரசாங்கத்தின் ஓர் உறுப்பினர் ஆவார். அசாஞ்ச் மீது குற்றம் சாட்டியோருக்கு வழக்கறிஞரான Borgstrom, பாலியல் சமத்துவத்திற்கான சமூக ஜனநாயகக் கட்சியின் பேச்சாளராகவும் சேவை செய்தார். முழு ஆண்பாலினரையும் தலிபானுடன் ஒப்பிட்டு பெண்களுக்கு எதிரான வன்முறைக்கு அனைத்து ஆண்களுமே கூட்டாகப் பொறுப்பேற்க வேண்டும் என வாதிட்டவர் இவர். Borgstrom இப்பொழுது சுவீடனில் இடது கட்சியின் உறுப்பினராக இருக்கிறார்.

நேஷனின் Katha Pollitt ம்அசாஞ்சுக்கு எதிரான பிரசாரத்தில் சேர்ந்து, ''கற்பழிப்பு என்று வரும்பொழுது, இடதுகள் இன்னும் அதை எடுக்காமல் இருக்கின்றனர்'' என்று வாதித்தார்.

''விக்கிலீக்ஸை பாதுகா, கற்பழிப்புக் குற்றச்சாட்டுக்களை அற்ப கருத்தாக்காதே'' (ஓகஸ்ட் 2012) என்றதில், Socialist Worker "அசாஞ்ச் மற்றும் அவரது ஆதரவாளர்கள் சிலர் கற்பழிப்புக் குற்றச்சாட்டுக்களை முக்கியமானதாக எடுத்துக்கொள்ள மறுக்கிறார்கள்.'' அவரது சொந்த வழக்கறிஞர்களே பெண்களை ஒரு ''தேன்பொறி'' என அழைத்து ஒரு சதித் தத்துவத்திற்கு அங்கீகாரம் வழங்கியுள்ளார்கள்... கற்பழிப்புக் குற்றச்சாட்டு ஒரு போதும் அற்பத்தனமாக்கப்படக் கூடாது அல்லது ஒதுக்கித் தள்ளிவிடக் கூடாது'' என்று கூறியது.

செப்ரெம்பர் 2013 அன்று International Viewpoint, ''சுவீடனில் பாலியல் தாக்குதல் குற்றச்சாட்டுக்கள் மீதாக கேள்வி கேட்பதை அசாஞ்ச் எதிர்கொள்ள வேண்டும் என்பதற்கான அழைப்பு ஒரு நியாயமானதே'' என்று வாதித்தது.

கடந்த பல வருடங்களாக, சர்வதேச போலி-இடதுகள் அப்பட்டமாக அசாஞ்ச் பெயரைக் குறிப்பிடுகின்றனர். அவர்களது பிற்போக்கு பாலின அரசியல் ஆதவாளர்களை திருப்திப்படுத்துவதற்கு, அவர்கள் சந்தோஷமாக அவரை ஓநாய்களிடம் தூக்கி எறிகின்றனர்.

இந்த ''இடது'' மற்றும் மிதவாத சக்திகள் ஒரு புறநிலையான சமூகப் பங்கை ஆற்றுகின்றனர். நவகாலனித்துவ தலையீடு, ஆக்கிரமித்தல் மற்றும் யுத்தம் ஆகியவற்றின் யதார்த்தங்கள், எல்லாவற்றையும்விட மோசமானவை. பெண்டகன் மற்றும் சிஐஏ-இன் குண்டர்கள் இடைத்தரகர்கள் அல்லது விளக்கம் கூறுபவர் என எவரும் இல்லாமல் தங்கள் நடவடிக்கைகளை நியாயப்படுத்தும்படி தங்களின் சொந்த அமைப்புகளுடன் மட்டும் அமெரிக்க மக்களை வெளிப்படையாக எதிர் கொள்ளும்படி நேர்ந்தால், அவர்களின் உண்மைத்தோற்றங்களை உடனடியாகவே கண்டுகொள்ள முடியும்.

நியூயோர்க் டைம்ஸ் மற்றும் வொஷிங்டன் போஸ்ட் போன்ற மிதவாத ஊடகங்களின் சேவைகளும் மற்றும் முன்பு ஒரு நேரத்தில் இந்த அமைப்பு முறையின் எதிராளிகளாக இருந்த, இப்பொழுது வசதியாக இருக்கும் ''இடதுகள்'' ஆகியோரின் சேவை அவர்களுக்கு தேவையாக உள்ளது. ''ஜனநாயகம்,'' மனித உரிமைகள்'' அல்லது ''பெண்கள் உரிமைகள்'' என்றபோலிவார்த்தைகளின் மூலம், ஏகாதிபத்திய அடிமைப்படுத்தல்களை அல்லது விக்கிலீக்ஸ் போன்றவற்றின் மீதுள்ள அரசியல் கொடுமைப் படுத்தல் போன்ற, கொடூரமான முறைகளைப் புனிதப்படுத்துவதற்கு தேவைப்படுகிறார்கள்.


(தொடரும்)







# தமிழ்த் தேசிய எழுச்சி



ஈழத் தமிழினத்தின் தேச விடுதலை பற்றி சிந்தனைப் புரட்சியை முன்னெடுத்தவர்களுள் விடுதலைப் புலிகளின் தத்துவ ஆசிரியரான அன்ரன் பாலசிங்கம் மிக முக்கியமானவர். அரசியல் ஞானம் மிக்க தத்துவ ஆசிரியர்.

ஈழத் தமிழினத்தின் உயரிய வரலாற்றுப் பதிவு ஏடான 'போரும் சமாதானமும்' என்ற நூலை அவர் படைத்திருக்கின்றார். இலங்கைத் தீவில் தமிழ்த் தேசிய எழுச்சி பற்றி அந்நூலில் அவர் குறிப்பிடும் நுட்பமான – நுண்ணியமான – விடயங்களை இக்கட்டுரைத் தொடரில் நாம் அறிந்து கொள்ளலாம்.



165

## புலிகளின் போரியல் வளர்ச்சியும் நோர்வேயின் சமாதான முயற்சியும்

### கடலில் நிகழ்ந்த பாரதூரமான சம்பவம்

இந்தக் கடற்சம்பவம் தொடர்பாக அரசுக்குக் கடும் ஆட்சேபம் தெரிவிப்பதென முடிவாகிற்று. பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவுக்கு தமிழ்ச் செல்வன் எழுதிய கண்டனக் குறிப்பில், கடற்சம்பவத்தை பாரதூரமான ஒரு போர்நிறுத்த மீறலாகச் சாடினார். அந்தக் கடிதக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டவை வருமாறு:-

''இந்தச் சம்பவத்தை ஒரு பாரதூரமான போர்நிறுத்த மீறலாகவே நாம் கருதுகிறோம். எமது கப்பல் எவ்வித சட்டவிரோத நடவடிக்கையிலும் ஈடுபடவில்லை. அத்துடன், சிறிலங்காக் கடற்படையின் அதிகாரத்துக்கு அப்பாற்பட்ட சர்வதேசக்கடற்பிராந்தியத்தில் இந்தச் சம்பவம் நிகழ்ந்திருக்கிறது. எவ்வித ஆத்திரமூட்டும் தூண்டுதலுமின்றி எமது வர்த்தகக் கப்பல் இடைமறித்துத் தாக்கப்பட்டது. இந்தச் சம்பவம் தொடங்கியதிலிருந்தே நாம் கண்காணிப்புக் குழுவைத் தொடர்பு கொண்டு எமது ஆட்சேபத்தைத் தெரிவித்தோம். சிறிலங்காக் கடற்படையின் அதிகாரத்துக்கு அப்பாற்பட்ட சர்வதேசக் கடற்பரப்பில் எமது கப்பல் சென்று கொண்டிருப்பதைக் கவனத்தில் எடுத்த ஜெனரல் ரெலெவ்சன், தனது செல்வாக்கைப் பிரயோகித்து மோதல் நிகழாது பார்த்துக்கொள்வதாக உறுதியளித்திருந்தார்.

சிறிலங்கா கடற்படைத் தாக்குதல் நிகழ்த்தியதன் விளைவாக எமது கப்பல் தீப்பற்றி எரிந்து மூழ்கியது. கப்பலின் கப்டன் உட்பட எமது போராளிகள் பதினொரு பேர் இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தனர். இந்தப் பாரதூரமான சம்பவம் சமாதான முயற்சிக்குப் பாதகமான விளைவுகளை ஏற்படுத்துமென நாம் சுட்டிக்காட்ட விரும்புகிறோம். போர்நிறுத்தஉடன்பாடுநடைமுறையில் இருந்தபோதும் சிறிலங்காக் கடற்படை சமீப காலமாக விடுதலைப் புலிகளுக்கு எதிராகப் பல்வேறு ஆத்திரமூட்டும் செயல்களில் ஈடுபட்டு வருகிறது என்பதையும் நாம் உங்களுக்குத் தெரியப்படுத்த விரும்புகிறோம். இந்த விடயத்தில் எமது ஆழ்ந்த அதிருப்தியை உங்களது அரசுக்குத் தெரியப்படுத்தவும்.''

2003 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 12 ஆம் நாள். அன்றைய தினம் பல முக்கியஸ்தர்கள் கிளிநொச்சிக்கு வருகைதர இருந்தனர். கனேடிய கூட்டாட்சி மன்றத்தைச் சேர்ந்த பொப் ரேய், பேராசிரியர் டேவிட் கமரோன், செல்வி பிரியா சூட் ஆகியோர் அன்று காலை என்னைச் சந்தித்தனர். எமது இயக்கத்தின் அரசியல் விவகாரக் குழுவை அவர்களுக்கு அறிமுகம்செய்துவைத்தேன். கிளிநொச்சியிலுள்ள சமாதானச் செயலகத்தில், அரச ஆட்சியமைப்புகள் பற்றி அன்று முழு நாளும் கனேடிய நிபுணர்கள் எமது அரசியல் போராளிகளுக்குக் கருத்தரங்கு நடத்துவதற்கு ஏற்பாடாகியிருந்தது. இந்தக் கருத்தரங்கு ஒருபுறம் நடந்து கொண்டிருக்க, மனித உரிமைகள் சம்பந்தமான சர்வதேச நிபுணரான ஐயன் மார்டினை அரசியல் தலைமையகத்தில் நான் சந்தித்துப் பேசினேன். இந்தச் சந்திப்பின் போது, தமிழீழக் காவல்துறைப் பொறுப்பாளர் நடேசனையும், நீதி நிர்வாகத்துறைப் பொறுப்பாளர் பரராஜசிங்கத்தையும் நான் மார்டினுக்கு அறிமுகம் செய்து வைத்தேன். அவர்கள் பின்பு மார்டினைத் தமது தலைமையகங்களுக்கு அழைத்துச் சென்று தமது துறைகளின் செயற்பாடுகள் பற்றி விவரமாக விளக்கங்களை அளித்தனர்.




அன்றையதினம் பிற்பகல், கண்காணிப்புக் குழுத் தலைவர் ஜெனரல் ரெலெவ்சன், கடற்சம்பவம் தொடர்பாக எமது இயக்கத்தின் நிலைப்பாட்டை அறிந்து கொள்வதற்காகக் கிளிநொச்சி வந்திருந்தார். நானும், தமிழ்ச்செல்வனும் அடேலுமாக அவரைச் சந்தித்து, கடலில் நிகழ்ந்த சம்பவத்தை விவரமாகக் கூறினோம். சர்வதேச கடலில், வர்த்தகப் பயணத்தில் சென்றுகொண்டிருந்த எமது வாணிப கப்பலைத் தடுத்துநிறுத்தித் தாக்கி அழிக்க சிறிலங்காக் கடற்படைக்கு எவ்வித அதிகாரமும் இல்லை என நான் வாதித்தேன். எமது கப்பல் ஆயுதங்களை ஏற்றிச் சென்றதாகவும், சிறி லங்காக் கலன்களை நோக்கிச் சுட்டதாகவும் அரச தரப்பில் தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களை அபாண்டமான பொய்கள் என நாம் நிராகரித்தோம்.

விடுதலைப் புலிகளுக்கு எதிராகக் கடற்படை எவ்வித படை நடவடிக்கைகளிலும் ஈடுபடக் கூடாதெனப் போர் நிறுத்த ஒப்பந்த விதிகள் வலியுறுத்துகின்றமையைச் சுட்டிக் காட்டிய நான், இந்த முக்கிய கடப்பாட்டைக் கடற்படையினர் கடைப்பிடிப்பது அவசியம் என எடுத்துரைத்தேன். சிறிலங்காக் கடற்படை சர்வதேசக் கடற் சட்டங்களை மேற்கோள்காட்டித்தனது நடவடிக்கையை நியாயப்படுத்த முனைவதாகக் கூறிய ஜெனரல் ரெலெவ்சன், கடற் சம்பவத்தைத் தமது குழுவினர் நேரடியாகக் கண்காணிக்க முடியாது போனதால், இச் சம்பவம் குறித்துத் தீர்ப்பளிக்க இயலாது என்றார். எனினும், எதிர்காலத்தில் இது போன்ற சம்பவங்கள் நிகழாத வண்ணம், சில பாதுகாப்பு ஒழுங்கு முறைகளை வகுப்பதற்கு தாம் முயற்சி எடுப்பதாக உறுதியளித்தார்.

மறுநாள் மார்ச் 13 காலை நோர்வே அனுசணையாளர் குழுவொன்று கிளிநொச்சிக்கு வருகைதந்தது. விடர் ஹெல்கிசன், ஜோன் வெஸ்ட்பேர்க், ஹான்ஸ் பிரட்ஸ்கார் (புதிய நோர்வே தூதுவர்) லீசா கோல்டன், தோமஸ் ஆகியோர் கடற் சம்பவம் குறித்து எமது நிலைப்பாட்டை அறிந்து செல்ல வந்திருந்தனர். கிளிநொச்சி சமாதானச் செயலகத்தில் நிகழ்ந்த இந்தச் சந்திப்பில் என்னுடன் தமிழ்ச்செல்வனும் அடேலும் கலந்து கொண்டனர்.

சர்வதேசக் கடலில் நிகழ்ந்த இச் சம்பவத்தை விவரமாக விளக்கிக் கூறிய நான், கடற்படையினரின் ஆத்திரமூட்டும் அடாவடித்தனங்களால் சமாதான முயற்சிக்கு ஆபத்து எழலாம் என்றேன். கண்காணிப்புக் குழுவினர் இந்தச் சம்பவத்தை விசாரணை செய்து வருகின்றனர் எனக் கூறிய ஹெல்கிசன், மேற்கொண்டு இது போன்ற சம்பவங்கள் நிகழாதவாறு, பாதுகாப்பு நடைமுறைகளை வகுப்பதற்கு முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர் எனக் கூறினார். ஜப்பானில் நடக்கவுள்ள அடுத்த கட்டச் சுற்றுப் பேச்சுக்களின் போது, சமாதான முயற்சியின் முன்னேற் றம் குறித்து, தான் ஒரு முழுமையான மறுபரிசீலனை செய்யவிரும்புகிறார் எனக் ஹெல்கிசன் கூறினார். சமாதான முன்னெடுப்பில், அரசியல், மனிதாபிமான, பாதுகாப்பு அம்சங்கள் ஒரே நேரத்தில் ஒன்றாக முன்நகர்த்தப்பட வேண்டும். - என்றார் அவர்.

### ஆறாவது கட்ட சுற்றுப் பேச்சு

விடுதலைப்புலிகளுக்கும் அரசுக்கும் மத்தியிலான ஆறாவது கட்டச் சுற்றுப் பேச்சு, 2003 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 18 - 21 ஆம் நாள்களில், ஜப்பானில், அழகிய மலைப் பிரதேசமான ஹக்கோன் என்னுமிடத்திலுள்ள பிரின்ஸ் விடுதியில் நடைபெற்றது.

முதல் நாள் பேச்சுக்களில் கடற் சம்பவத்துக்கு முதன்மை அளிக்கப்பட்டது. விவாதத்தை தொடக்கி வைத்துப் பேசிய நான், எமது இயக்கத்தின் கடுமையான ஆட்சேபத்தை அதிகார பூர்வமான முறையில் அரசுக்குத் தெரிவித்தேன். போர் நிறுத்த ஒப்பந்தத்தின் ஒரு பாரதூரமான மீறலாக இந்தச் சம்பவத்தைச் சித்திரித்துக் காட்டி, இந்த ஆத்திரமூட்டும் நடவடிக்கைக்கு எமது இயக்கம் பதிலடி கொடுத்திருந்தால் அது ஒரு யுத்தமாக வெடித்து, சமாதானத்தின் கதவுகளை இறுக மூடியிருக்குமெனச் சுட்டிக்காட்டினேன். சர்வதேசக் கடற் சட்டம் என்ற திரைக்குப்பின்னால் ஒளிந்து நின்று அடாவடித்தனம் புரிவதைக் கைவிட்டு, போர் நிறுத்த உடன்பாடு விதிகளைச் செம்மையாக ஒழுகுமாறு கடற்படையினரைப் பணிக்கும் படி நான் அரச பிரதிநிதிகளிடம் வேண்டுகோள் விடுத்தேன். எமது வணிகக் கப்பல் மீது தாக்குதலை மேற்கொள்வதற்கு முன்னர், கண்காணிப்புக் குழுவுக்கு எதுவுமே அறிவிக்காதது கடற்படையினர் இழைத்த மாபெரும் தவறு எனவும் நான் கண்டித்தேன். எமது கப்பல் ஆயுதக் கடத்தலில் ஈடுபட்டிருப்பதாக அரச தரப்பால் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டு அபத்தமானதும் ஆதாரமற்றதும் என நிராகரித்தேன்.

(தொடரும்...)










# ஜேர்மனியில் நடைபெற்ற

## யாழ்.நூலக எரிப்பு நினைவு தின நிகழ்வு

தமிழர்களின் அறிவுக்களஞ்சியமான யாழ். பொது நூலகம் பேரினவாதிகளால் எரியூட்டப்பட்டு 36 ஆண்டுகள். தமிழ்த் தேசத்தின் இருப்பை இல்லாதொழிக்கும் இலங்கை அரசின் கட்டமைப்பு சார் இன அழிப்பின் ஓர் அங்கமான பண்பாட்டுப் படுகொலையாக அரங்கேற்றப்பட்டதே யாழ்.நூலக எரிப்பாகும்.

மேற்படி நூலக எரிப்பின் 36ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு ஜேர்மனியில் பேர்ளின் நகரில் ஹிட்லர் ஆட்சியில் யூத மக்களின் நூல்கள் எரிக்கப்பட்ட நினைவிடத்தின் முன்றிலில் நேற்று முன்தினம் இரவு 9 மணிமுதல் நள்ளிரவு 11 மணிவரை நடைபெற்றது.

எங்கு நூல்கள் எரிக்கப்படுகின்றனவோ அங்கு மனிதர்களும் எரிக்கப்படுவார்கள் எனும் வாசகம் பதாகையில் பொறிக்கப்பட்டு, 36 ஆண்டுகளை நினைவுபடுத்தும் முகமாக 36 தமிழ் நூல்கள் குறியீடாக காட்சிக்கு வைக்கப்பட்டு அவைகளுக்கு முன்னராக 36 சுடர்கள் ஏற்றப்பட்டு , நினைவேந்தல் இடம் காட்சியளித்தது பல்லின மக்களை ஈர்க்கும் வண்ணம் அமைந்தது.

பிரசித்திபெற்ற நினைவிடத்தில் வித்தியாசமான முறையில் இந்தக் காட்சிப்படுத்தல் நடைபெற்றதால் பல்லின மக்கள் அதிகம் ஆர்வத்தோடு அவதானித்தனர். அதுமட்டுமன்றி மேலதிகமான விளக்கங்களைப் பெற்றுக்கொள்ள உரையாடல்களிலும் ஈடுபட்டனர். அத்தோடு ஆர்வம் கொண்டவர்களுக்கு ஆங்கிலத்திலும் ஜேர்மன் மொழியிலும் துண்டுப்பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டன.

# ஆர்மேனிய இன அழிப்பு

## ஈழத் தமிழருக்கு கற்றுத் தந்த படிப்பினைகள்!





101 ஆண்டுகள் ஆகியுள்ள போதிலும் ஆர்மேனிய இன அழிப்பை மறுத்து வரும் துருக்கியில் படுகொலை செய்யப்பட்ட ஆர்மேனியர்களின் எண்ணிக்கையை வலுவாகக் குறைத்துக் காட்டுவதுடன் அந்த மரணங்களுக்கு வேறு கற் பிதங்களையும் கூறிவருகிறது. இதற்கு எதிராக ஆர்மேனியா மக்கள் உலகளாவிய ரீதியில் போராடி வருகின்றனர்.

சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியதாலோ அல்லது ஐ.நா. மனித உரிமைகள் பேரவை தீர்மானம் நிறைவேற்றியதாலோ ஆர்மேனிய இன அழிப்பை மேற்குறித்த நாடுகளோ சபைகளோ ஏற்று அங்கீகரிக்கவில்லை.

மாறாக, ஆர்மே னிய மக்களின், குறிப்பாக புலம் பெயர்ந்து வாழும் ஆர்மேனியமக்களின்இடைவிடாத, சோர்ந்து போகாத பரம்பரை பரம்பரையான, விலைபோகாத போராட்டமே இன்றும் ஆர்மேனிய இன அழிப்பை சர்வதேச அரங்கில் பேசுபொருளாக வைத்திருப்பதோடு, கனடா, ஜேர்மனி, பிரான்ஸ், இத்தாலி மற்றும் ரஷ்யா உட்பட 20 நாடுகளையும் உலகின் முக்கியமான அமைப்புகளையும் ஏற்று அங்கீகரிக்க வைத்திருக்கிறது.

ஆர்மேனிய இன அழிப்பை மறுத்து வரும் துருக்கி நாடு முன்வைக்கும் பொய்யான கருத்துக்களை முறியடிக்கும் முகமாக முனைவர் டனர் சென்ற வாரம் ஜேர்மனியில் பேர்ளினில் வெளியிட்ட நூல் அறிமுக நிகழ்வில் ஈழத்தமிழர்கள் சார்பாக அனைத்துலக ஈழத்தமிழர் மக்கள் அவை பிரதிநிதியும் கலந்துகொண்டு ஆர்மேனியர்கள் தரும் படிப்பினைகளைக் கவனத்தில் எடுத்துக்கொண்டதோடு தமிழின அழிப்பு தொடர்பாக பிரேமன் மக்கள் தீர்ப்பாயத்தின் ஆவணத்தையும் முனைவர் டனர் அவர்களுக்குக் கையளித்தமை குறிப்பிடத்தக்கது.

> *சர்வதேச குற்றவியல் நீதி மன்றம் தீர்ப்பு வழங்கியதாலோ அல்லது ஐ.நா. மனித உரிமைகள் பேரவை தீர்மானம் நிறைவேற்றியதாலோ ஆர்மேனிய இன அழிப்பை மேற் குறித்த நாடுகளோ சபைகளோ ஏற்று அங்கீகரிக்கவில்லை.*







# அன்னைபூபதி நினைவாக சுவிஸில் நடத்தப்பட்ட விளையாட்டு போட்டிகள்



தேசத்தின் விடுதலைக்காக உண்ணா நோன்பிருந்து தன் உயிர் தந்த தியாகதீபம் அன்னை பூபதி அம்மாவின் 29 ஆம் ஆண்டு நினைவை முன்னிட்டு நடத்தப்பட்ட 21 ஆவது விளையாட்டுப் போட்டிகள் கடந்த 28 ஆம் திகதி லவுசான் மாநிலத்தில் சிறப்பாக நடைபெற்றன.

சுவிஸ் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் விளையாட்டுத்துறையினரால் நடத்தப்பட்ட போட்டிகள் பொதுச்சுடரேற்றலுடன், தமிழீழத் தேசியக் கொடி ஏற்றி வைக்கப்பட்டதைத் தொடர்ந்து ஈகச்சுடரேற்றல், அகவணக்கம், மலர் வணக்கத்துடன் ஆரம்பமாகின.

எதிர்கால சந்ததியினரிடம் தமிழ்த் தேசிய உணர்வை, ஒற்றுமையை பேணிப் பாதுகாக்கவும், தாயகம் நோக்கிய தேடலை உண்டுபண்ணும் நோக்கிலும் ஒழுங்கமைக்கப்பட்ட இந்த விளையாட்டுப் போட்டியில் உதைபந்தாட்டம், துடுப்பாட்டம், கரபந்தாட்டம், மெய்வன்மையாளர் போட்டிகள், பார்வையாளர் போட்டிகள் போன்ற அனைத்து விதமான போட்டிகளும் ஆரம்பிக்கப்பட்டு விறுவிறுப்பாக நடைபெற்றன.

அத்துடன், பல விளையாட்டுக் கழகங்களைச் சேர்ந்த நூற்றுக் கணக்கான போட்டியாளர்கள் பங்குபற்றியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

வெற்றி பெற்ற வீரர்களுக்கும், கழகங்களைச் சேர்ந்த வீரர்களுக்கான பதக்கங்களும், வெற்றிக் கிண்ணங்களும் வழங்கி மதிப்பளிக்கப்பட்டதைத் தொடர்ந்து தமிழீழத் தேசியக்கொடி இறக்கப்பட்டு தமிழர்களின் தாரக மந்திரத்துடன் போட்டிகள் நிறைவடைந்தன.

(எ)

## புகைத்தலுக்கு எதிரான விழிப்புணர்வுபேரணி புதுக்குடியிருப்பில்!

### செவ்வாயன்று நடத்த ஏற்பாடு

கொழும்பு, ஜூன் 03

சர்வதேச புகைத்தல் பொருள்கள் எதிர்ப்புத் தினத்தை முன்னிட்டு மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில்புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் எதிர்வரும் 6 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை விழிப்புணர்வுப் பேரணி நடைபெறும்.

புதுக்குடியிருப்பு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் இருந்து புதுக்குடியிருப்பு நகர் வரை செல்லும் இந்தப் பேரணியில் பிரதேசசெயலக மற்றும் பிரதேச சபை உத்தியோகத்தர்கள், வர்த்தகர்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொள்வர்.

சுகாதார வைத்திய அதிகாரி எஸ்.கெங்காதீஸ்வரன் தலைமையில் நடைபெறும் இந்தப் பேரணியில் புகைத்தலால் ஏற்படும் பாதிப்புக்கள் தொடர்பில் விழிப்புணர்வுத் துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கவும் ஏற்பாடாகியுள்ளது.(இ-ச)

# வடக்கின் கல்வி பின்னடைவுக்குக் காரணம் மீள்குடியேற்றம் முழுமை பெறாதமையே!

## கல்வி அமைச்சர் குருகுலராஜா விசனம்



வவுனியா, ஜூன் 03

வடக்கு மாகாணம் கல்வியில் பின்தங்கியிருப்பதற்குக் மீள்குடியேற்றம்முழுமைபெறாமையே காரணம் என்று வட மாகாண கல்வி அமைச்சர் தம்பிரசா குருகுலராசா விசனம் வெளியிட்டுள்ளார்.

வவுனியாவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இரு வேறு திறப்பு விழா நிகழ்வுகளில் பங்கேற்று உரையாற்றும் போதே அவர் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

வவுனியா - நெடுங்கேணி பகுதியில் புதிதாக அமைக்கப்பட்ட வவுனியா வடக்கு பிரதேச சபையின் நிர்வாகக் கட்டடம் மற்றும் கலாசார மண்டபம் ஆகியன நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டுள்ளன.



நீண்ட காலமாக வவுனியா வடக்கு பிரதேச சபையின் நிர்வாகக் கட்டடம் தற்காலிக கட்டடத்தில் இயங்கி வந்திருந்த நிலையில் வட மாகாண உள்ளூராட்சி அமைச்சால் நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டு அமைக்கப்பட்ட இந்தக் கட்டடத்தைவடமாகாண கல்வி அமைச்சர் குருகுலராஜாதிறந்துவைத்தார்.

அதனைத் தொடர்ந்து வவுனியா வடக்கு பிரதேசத்தின் நீண்ட கால தேவையாகக்காணப்பட்ட கலாசார மண்டபத்தை வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் திறந்து வைத்தார்.

தொடர்ந்து அங்கு கருத்து வெளியிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் - மாகாண சபையின் கீழான அபிவிருத்தியில் ஏற்படும் தாமதத்துக்கு மத்திய அரசே காரணம் என்று தெரிவித்தார்.

பிரதேச சபை செயலாளர் க.சத்தியசீலன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், வட மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா, வட மாகாண சபை உறுப்பினர்களான ஜி.ரி. லிங்கநாதன், ஆர். இந்திரராசா, எம்.தியாகராசா, செ.மயூரன் உட்பட பலர் கலந்துகொண்டிருந்தனர். (எ-100)

## பெரிய அபிவிருத்திகள் நிறுத்தப்பட வேண்டும்!

### இவ்வாறு கூறுகிறார் அத்துரலிய ரத்ன தேரர்



கொழும்பு, ஜூன் 03

பெரிய அபிவிருத்தித் திட்டங்கள் நிறுத்தப்பட வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நாட்டைஉண்மையாக அபிவிருத்தி செய்ய வேண்டுமாயின் சுற்றாலுக்குத் தீங்கு ஏற்படாத வகையில் அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

சிறிய அபிவிருத்தித் திட்டங்களே மிகவும் வெற்றியளிக்கும். பெரிய அபிவிருத்தித் திட்டங்களின் ஊடாக கட்டடங்கள் நிர்மாணிக்கப்படும்போது மறு புறத்தில் அழிவுகள் இடம் பெற்று வருகின்றன.- என்றார். (எ)

# நிவாரணப் பொருள்களைக் கையளித்தார் மாலைதீவு ஜனாதிபதியின் சிறப்புத் தூதர்

கொழும்பு, ஜூன் 03

இலங்கையில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிதியுதவியுடன், மாலைதீவு ஜனாதிபதியின் சிறப்புத் தூதுவராக அந்நாட்டு வெளிவிவகார அமைச்சர் கலாநிதி மொஹமட் அஸிம் கொழும்பை வந்தடைந்துள்ளார்.

நேற்று முன்தினம் கொழும்பைவந்தடைந்த அவர், வெளிவிவகார அமைச்சர் ரவிகருணாநாயக்கவைச் சந்தித்தார்.

அத்தோடு அனர்த்த பாதிப்புக்கு மாலைதீவு அரசு மற்றும் அந்நாட்டு மக்களின் அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம் எனக்குறிப்பிட்டுள்ளார்.

மேலும், இவ்வாறான இக்கட்டான சூழ்நிலையில் மாலைதீவு அரசு என்றும் இலங்கையுடன் துணைநிற்கும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தச் சந்திப்பின் போது மாலைதீவு அரசின் சார்பாக, அனர்த்த நிவாரண நிதியையும், வெளிவிவகார அமைச்சரிடம் மாலைதீவு சிறப்புத் தூதுவர் கையளித்தார்.



# போதைப்பொருளுடன் மூவர் ஹற்றனில் அதிரடிக் கைது!



ஹற்றன் குடாகம பிரதேசத்தில் விற்பனைக்காக ஹெரோயின் போதைப் பொருளைத் தம்வசம் வைத்திருந்த மூவரை மதுவரித் திணைக்கள அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

ஹற்றன் பிரதேசத்தைச் சேர்ந்த இருவரும்குடாகமபிரதேசத்தைச் சேர்ந்த ஒருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து சோதனையிட்ட போது பொதி செய்யப்பட்ட 9 பைக்கெற்றுகளில் இரண்டாயிரத்து 200 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட மூவரில் இருவர் ஹற்றன் மாவட்ட நீதிமன்றத்திலும். மேலும் ஒருவர் ஹற்றன் நீதிவான் நீதிமன்றிலும் முன்னிலைப்படுத்தப்படவுள்ளனர் என அதிகாரிகள் தெரிவித்தனர்.(எ)

## மதங்களுக்கு எதிரான வன்முறைகள் அதிகரிப்பு

கொழும்பு, ஜூன் 03

நாட்டில் மதங்களுக்கு எதிரான வெறுக்கத்தக்க பிரசாரங்கள் மற்றும் வன்முறைகள் அதிகரித்து வருகின்றன என்று இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதனால், தேசிய நல்லிணக்கத்துக்குப் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக, அந்தச் சங்கத்தின் தலைவர் யூ.ஆர்.டி சில்வா குறிப்பிட்டுள்ளார்.

மேலும், இதுபோன்ற இனவாத மற்றும் வர்க்க பேதங்களைத் தோற்றுவிக்க முற்படும் நபர்களுக்கு எதிராகக் கடுமையான சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்றுபொலிஸ் மா அதிபரிடம் கோருவதாக அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (எ)

## அனர்த்தத்தால் அ.அட்டைகளை இழந்தோருக்கு விசேட நடவடிக்கை

கொழும்பு, ஜூன் 03

நாட்டில் நிலவிய சீரற்ற காலநிலை காரணமாக தேசிய அடையாள அட்டைகளை இழந்த பொதுமக்களுக்குத் தேசிய அடையாள அட்டைகளை மீளப்பெற்றுக் கொடுப்பது தொடர்பில் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று ஆட்பதிவு திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் திணைக்களம் மேலும் தெரிவித்தவை வருமாறு:

காணாமற்போன அடையாள அட்டை தொடர்பான விவரங்கள் தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்யுமாறு ஆட்பதிவு திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

அடையாள அட்டை காணாமற்போனமை தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்த பின்னர், கிராம சேவகர் மற்றும் பிரதேச செயலாளரின் ஆலோசனைப்படி புதிய அடையாள அட்டைக்காக விண்ணப்பிக்க முடியும்.

மேலும், மாவட்ட செயலகம் மற்றும் கிராம சேவகர் அலுவலகத்தில் அடையாள அட்டைக்காக விண்ணப்பிக்கும், விண்ணப்பப்படிவங்களை பெற்றுக் கொள்ளலாம்.- என்றது. (எ)

# தினகரன் வருகையால் அ.தி.மு.கவில் பரபரப்பு!

## கட்சி நடவடிக்கையில் ஈடுபடுவார் என எதிர்பார்ப்பு

சென்னை,ஜூன் 03

இரட்டை இலைச் சின்னத்தைப் பெறுவதற்கு லஞ்சம் கொடுக்க முயன்ற வழக்கில் கைதான தினகரனுக்கு டில்லி நீதிமன்றத்தால் பிணை வழங்கப்பட்டுள்ளமையால், அ.தி.மு.க. எடப்பாடி அணியில் குழப்பம் ஏற்பட்டுள்ளது. தினகரன் மீண்டும் கட்சி நடவடிக்கையில் ஈடுபடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனால், அ.தி.மு.க. வட்டாரத்தில் மீண்டும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

பன்னீர் அணி விதித்த நிபந்தனையை ஏற்ற முதல்வர் பழனிச்சாமி மற்றும் அமைச்சர்கள், தினகரன் குடும்பத்தை கட்சியை விட்டு விலக்குகிறோம் என அறிவித்தனர். தினகரனும் ஒதுங்கிக் கொள்கிறேன் என அறிவித்தார். இந்நிலையில், லஞ்ச வழக்கில் தினகரன் கைது செய்யப்பட்டு, திகார் சிறையில் அடைக்கப்பட்டார்.

அவரது ஆதரவு சட்டசபை உறுப்பினர்கள் மட்டுமே அவரைச் சிறையில் சந்தித்தனர். மற்றவர்கள் கண்டு கொள்ளவில்லை. அவர் கைதுசெய்யப்பட்டமையைக் கண்டித்து, முதலமைச்சரோ அமைச்சர்களோ அறிக்கை வெளியிடவில்லை. சசிகலா அணி செய்தித் தொடர்பாளர் சம்பத் மற்றும் கர்நாடக அ.தி.மு.க. செயலர் புகழேந்தி போன்றோர் மட்டுமே கண்டனக் கூட்டங்கள் நடத்தினர். முதலமைச்சர், அமைச்சர்கள் ஆகியோர் அந்தக் கூட்டங்களுக்குச் செல்லவில்லை.

இந்தச் சூழ்நிலையில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை தினகரனுக்கு பிணை அனுமதி கிடைத்தது. அவர் இன்னும் கட்சி பொறுப்பில் இருந்து விலகவில்லை.எனவே, தினகரன் மீண்டும் கட்சி நடவடிக்கையை முன்னெடுப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் எடப்பாடி அணியினர் குழப்பத்தில் உள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# இந்தியாவில் சிகிச்சை வழங்க பாக். குழந்தைக்கு அனுமதி!





உடல் நலக் குறைவால் பாதிக்கப்பட்டுள்ள பாகிஸ்தானைச் சேர்ந்த குழந்தை ஒன்றுக்கு இந்திய..வில் சிகிச்சை வழங்க இந்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது.

இது தொடர்பான அறிவிப்பை இந்திய வெளியுறவு அமைச்சர் சுஷ்மா ஸ்வராஜ் நேற்று வெள்ளிக்கிழமை தனது 'ட்விட்டர்' பதிவின் மூலம் வெளியிட்டுள்ளார்.

பாகிஸ்தான் லாகூரைச் சேர்ந்த கென் சித் என்பவரது குழந்தை உடல் நலக் குறைவால் பாதிக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில், அந்தக் குழந்தைக்கு பாகிஸ்தானில் சிகிச்சை வழங்கப் போதிய வசதிகள் இல்லை என பாகிஸ்தான் சுகாதார அமைச்சகம் அறிவித்தது. இதனையடுத்து, நாடி கென் சித் தனது குழந்தையின் சிகிச்சையை இந்தியாவில் மேற்கொள்வதற்கு இந்திய அரசு அனுமதி வழங்க வேண்டும் என 'ட்விட்' செய்திருந்தார்.

இதற்குப் பதில் வழங்கும் வகையில் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ்,'எந்த ஒரு குழந்தையும் பாதிக்கப்படக்கூடாது , உடனடியாக பாகிஸ்தானில் உள்ள இந்திய தூதரகத்துக்குச் சென்று மருத்துவ விசா பெற்றுக் கொள்ளுங்கள்' எனப் பதில் 'ட்விட்' செய்துள்ளார். (ச)

# கவிக்கோ அப்துல் ரகுமான் காலமானார்!



கவிஞர் கவிக்கோ அப்துல் ரகுமான் உடல் நலக்குறைவு காரணமாக நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை தனது 80 ஆவது வயதில் காலமானார்.

சென்னையில் உள்ள அவரது வீட்டில்வைத்து அதிகாலை 2 மணியளவில் மூச்சுத்திணறல் காரணமாக அவரது உயிர் பிரிந்தது.

மதுரையில் 1937ஆம் ஆண்டு பிறந்த கவிக்கோ அப்துல் ரகுமான் பள்ளி, கல்லூரி படிப்புகளை மதுரையிலேயே மேற்கொண்டார். இவரது தந்தையும், தாத்தாவும் சிறந்த உருதுக் கவிஞர்கள். இவர் தமிழில் கவிதைக் குறியீடுகள் தொடர்பில் ஆராய்ந்து சென்னைப் பல்கலைக் கழகத்தில் முனைவர் பட்டம் பெற்றார். பின்னர் வாணியம்பாடி இஸ்லாமிய கல்லூரியில் தமிழ்த் துறைத் தலைவராக 20 ஆண்டுகள் பணியாற்றினார். தமிழ் நாடு வக்பு வாரிய தலைவராகவும் பணியாற்றினார்.

புதுக்கவிதைத் துறையில் அப்துல் ரகுமான் குறிப்பிடத்தக்கவர் ஆவார். இவரது முதல் கவிதைத் தொகுப்பு 'பால் வீதி' 1974 ஆம் ஆண்டு வெளிவந்தது. தொடர்ந்தும் பல இதழ்களில் கட்டுரைகள், கவிதைகள் எழுதினார். இவரின் 'ஆலாபனை' என்ற கவிதைத் தொகுப்புக்காக 'சாகித்ய அக்கடமி' விருது கிடைத்தது.

'கவியரசர் பாரிவிழா விருது', 'தமிழன்னை விருது', 'பாரதிதாசன் விருது', 'கலைமாமணி', 'கம்பர் விருது', 'உமறுப்புலவர் விருது' உள்ளிட்ட பல விருதுகளையும் இவர் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# சசிகலாவை சந்திப்பாராம் தினகரன்!



தேர்தல் ஆணையகத்துக்கு லஞ்சம் வழங்க முற்பட்டார் என்ற குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட டி.டி.வி. தினகரனுக்கு நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நிபந்தனைகளுடன் பிணை வழங்கப்பட்டது. இந்த நிலையில், அவர் சொத்து குவிப்பு வழக்கில் தண்டனை அனுபவித்து வரும் சசிகலாவை எதிர்வரும் நாள்களில் சந்திக்க உள்ளார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்தச் சந்திப்பின் போது அவர் தொடர்ந்தும் அ.தி.மு.க. அம்மா அணியுடன் இணைந்து செயற்படுகின்றமை தொடர்பில் சசிகலாவிடம் கோரிக்கை விடுப்பார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும், இரட்டை இலைச் சின்னத்தை மீட்பது தொடர்பில் சசிகலாவிடம் தினகரன் ஆலோசனைகளைக் கேட்டு அதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பார் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

லஞ்ச வழக்கில் தினகரனைக் கைதுசெய்வதற்கு பொலிஸார் நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்த நிலையில், தினகரன் சசிகலாவை சந்திக்க பெங்களூர் சிறைக்குச் சென்றிருந்தார். இதன்போது, அவரைச் சந்திப்பதற்கு சசிகலா மறுப்பு தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

# வட இந்தியாவில் நில அதிர்வு: மக்கள் பீதி; பாதிப்பு இல்லை!

புது டில்லி, ஜூன் 03

இந்தியத் தலைநகர் புது டில்லி உட்பட வட இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலும் நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை 4.25 மணியிளவில் மிதமான நில அதிர்வு உணரப்பட்டது. இந்த நில அதிர்வு 5.0 என்ற ரிச்டர் அளவில் பதிவாகியுள்ளது என வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

பூமிக்கு 10 கிலோ மீற்றர் ஆழத்தில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கத்தால் உத்தரபிரதேசம், தலைநகர் டில்லி உள்ளிட்ட இடங்களில் மிதமான நிலநடுக்க அதிர்வுகள் ஏற்பட்டன.

இதனால் பல கட்டடங்களில் அதிர்வு உணரப்பட்டமையால் மக்கள் பீதியடைந்து வீதிகளை நோக்கி ஓடினர்.

நிலநடுக்கத்தை உணர்ந்த மக்கள், சமூக ஊடகங்களில் தகவல்களைப் பகிர்ந்தனர்.

நில அதிர்வியல்துறையைச் சேர்ந்த விஞ்ஞானி வேட் பிரகாஷ் தாகூர் ஊடகங்களுக்குத் தெரிவிக்கையில்- நில நடுக்கம் 4.25 மணியளவில் உணரப்பட்டது. பூகம்பத்தின் அளவு 5 மடங்காக உள்ளது . இது மிதமானதுதான்- எனத் தெரிவித்துள்ளார். (ச)

# கூடாங்குளத்தில் அணு ஆலைகள் அமைக்க ரஷ்யா கடனுதவி!

கூடாங்குளத்தில் மேலும் இரண்டு அணு ஆலைகளை அமைப்பதற்கு இந்தியாவுக்கு ரஷ்யா கடனுதவி வழங்க முன்வந்துள்ளது. அந்த வகையில் அதற்கான ஒப்பந்தம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை கைச்சாத்திடப்பட்டது.

இந்த இரண்டு புதிய அணு உலைகளுக்கும் ரஷ்யா 4.2 பில்லியன் அமெரிக்க டொலர்களைக் கடனாக வழங்க முன்வந்துள்ளது.இதேவேளை, இந்தியாவின் மின்தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் வகையில் அடுத்த 20 வருடங்களுக்குள் மேலும் பத்து அணு மின் ஆலைகளை அமைப்பதற்கு ரஷ்யா உதவும் என ஜனாதிபதி விளாடிமிர் புடின் தெரிவித்துள்ளார்.

ரஷ்யாவின் செயின்ட் பீற்றர்ஸ் பர்க்கில் இடம்பெற்ற பொருளாதார மாநாட்டில் கலந்துகொள்ள இந்திய பிரதமர் மோடி ரஷ்யா சென்றுள்ள நிலையில், இந்த ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளன. (ச)

# சென்னை சில்க்ஸ் கட்டடத்தை இடிக்கும் பணிகள் ஆரம்பம்!



சென்னை தி.நகரில் தீ விபத்துக்குள்ளான 'சென்னை சில்க்ஸ்' கட்டடத்தை ராட்சத வாகனங்களைப் பயன்படுத்தி இடிக்கும் பணிகள் நேற்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகின.

சென்னையின் வர்த்தக மையமான தியாகராய நகரில் 'சென்னை சில்க்ஸ்' கட்டடத்தில் ஏற்பட்ட தீ விபத்தால் 7 மாடிகளுக்கும் தீ பரவியது. சென்னை சில்க்ஸ் கட்டடம் முழுவதுமாக எரிந்தது. கடையில் இருந்த எளிதில் தீப்பற்றக் கூடிய துணிகள் மற்றும் பரிசுப் பொருள்கள் அனைத்தும் முற்றிலும் எரிந்து சாம்பராகின. இதனால் கோடிக்கணக்கான ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளது. சுமார் 400 கோடிக்கு மேல் சேதம் இருக்கும் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

இரண்டாவது நாளாக நேற்றுமுன்தினம் வியாழக்கிழமையும் மீண்டும் தீப்பிடித்து எரிந்தது. அதிகாலை 3 மணியளவில் கட்டடத்தின் ஒரு பகுதி சரிந்து விழுந்தது. இந்நிலையில், தீ விபத்துக்குள்ளான சென்னை சில்க்ஸ் கட்டடத்தை இடிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. 2 ராட்சத 'ஜா கட்டர்' வாகனங்களை கொண்டு இடிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனத் தெரிவிக்கப்படுகிறது. இன்னும் 3 நாள்களில் கட்டடம் முழுமையாக இடிக்கப்படும் என்றும், பொதுமக்கள் எவரும் இந்த பகுதிக்கு வரவேண்டாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# உலக அழிவுக்கு வித்திடுகிறார் ட்ரம்ப்!



## பருவநிலை மாற்ற ஒப்பந்தத்தில் இருந்து அமெரிக்கா வெளியேறுகிறது!

வொஷிங்டன், ஜூன் 03

புவி வெப்பமயமாதலை தடுக்க உலக நாடுகளின் ஒத்துழைப்புடன் கடந்த ஆண்டு போடப்பட்ட பாரிஸ் பருவநிலை மாற்ற ஒப்பந்தத்தில் இருந்து அமெரிக்கா வெளியேறுகிறது என்று அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

பல ஆண்டுகள் நடைபெற்ற சிக்கலான பேச்சுவார்த்தைகளுக்கு பின்னர் கடந்த ஆண்டு கையெழுத்தானது பாரிஸ் பருவநிலை மாற்ற ஒப்பந்தம்.

இந்த ஒப்பந்தத்திற்கான முக்கிய நோக்கமே புவி வெப்ப மயமாதலை 2 டிகிரி செல்சியஸுக்கு மேலாகாமல் கட்டுப்படுத்துவதுதான்.

புவி வெப்பமடைதலுக்குக் காரணமான கார்பன் டைஓக்சைட் உள்ளிட்ட பசுமை இல்ல விளைவு வாயுக்கள் வெளியேற்றத்தை பெருமளவில் கட்டுக்குள் கொண்டுவரவே இந்த ஒப்பந்தம் கையெழுத்தானது.

இந்த ஒப்பந்தத்தில் இணைந்திருக்கும் நாடுகள் தங்களுடைய கார்பன்டைஓக்சைட் வெளியேற்றத்தை கடுமையாக குறைக்க வேண்டும் என்பதே இந்த ஒப்பந்தத்தின் சிறப்பம்சம்.

ஆனால், புகைபடிவ எரிபொருள்களின் பயன்பாட்டை குறைப்பது பொருளாதாரத்தில் நேரடியாக பாதிப்பை ஏற்படுத்தும் என்பதால் இந்த ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துவது ஒரு சவாலான காரியமாகவே பார்க்கப்பட்டு வந்தது.

இந்தியா, சீனா, ரஷ்யா, அமெரிக்கா, பிரான்ஸ் உள்ளிட்ட 195 நாடுகள் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டிருந்தன.

இந்த நிலையில், பாரிஸ் பருவநிலை ஒப்பந்தத்தில் இருந்து அமெரிக்கா வெளியேறுகிறது என்றும் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

இந்த முடிவிற்கு அமெரிக்காவின் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள், பொருளாதார நிபுணர்கள் எனப்பலரும் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர்.

இன்று உலக நாடுகள் அனைத்திற்கும் பொதுவான, முக்கியமான பிரச்சினை என்று பார்த்தால் அது உலகம் வெப்பமயமாதல் தான்.

சர்வதேச அளவில் பசுமை இல்ல விளைவு வாயுக்களை வெளியிடுவதில் சீனாவுக்கு அடுத்து அமெரிக்கா இரண்டாவது இடத்தில் உள்ளது.

இந்த ஒப்பந்தத்தை பின்பற்றுவதால் தொழிற்சாலைகள், எண்ணெய் நிறுவனங்கள் உள்ளிட்டவைகள் பொருளாதார ரீதியாக பின்னடைவை சந்திக்கும் என்பதால் ட்ரம்ப் இந்த முடிவை எடுத்துள்ளார்.

ஆனால், ட்ரம்பின் இந்த முடிவு உலகை அழிவுக்கு அழைத்துச் செல்லும் ஒரு ஆரம்பப்புள்ளி என்பதை அவர் உணர மறுத்துள்ளார் என்று உலகச் சுற்றுச் சூழல் ஆர்வலர்கள் குற்றஞ் சாட்டுகின்றனர். (க)

## டுபாயில் பொலிஸ் பணியில் வீதிகளில் 'ரோபோ'!



டுபாய், ஜூன் 03

டுபாயில் பொலிஸ் பணியில் ஈடுபட்டுள்ள ரோபோ வீதிகளில் ரோந்து செல்கிறது. தற்போது சோதனை முறையில் இந்த ரோபோ பொலிஸ் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

'ரோபோ' எனப்படும் எந்திர மனிதனின் செயற்பாடு அனைத்து துறைகளிலும் பரவிவருகிறது. முன்பு மருத்துவம், மற்றும் ஹோட்டல் சேவைகளில் ஈடுபடுத்தப்பட்டது.

உலகில் முதன் முறையில் டுபாயில் ரோபோ பொலிஸ் பணியில் ஈடுபட்டுள்ளது.

அந்த ரோபோ டுபாய் பொலிஸ் சீருடை அணிந்துள்ளது. அது பொலிஸ் அதிகாரிகளுடன் கைகுலுக்குகிறது. இராணுவ வீரர்கள் போன்று கம்பீரமாக சல்யூட் அடிக்கிறது.

வீதிகளில் பொலிஸார் போன்று ரோந்து பணியும் செய்கிறது. தற்போது சோதனை முறையிலேயே இந்த ரோபோ பொலிஸ் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது. அதன் செயற்பாடுகள் திருப்தி அடைந்தால் பொலிஸ் பணியில் 25 சதவீதம் ரோபோக்களைப் பயன்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. அந்த ரோபோக்கள் துப்பாக்கி உள்ளிட்ட ஆயுதங்கள் எதுவும் இன்றி வருகிற 2030 ஆம் ஆண்டில் பயன்படுத்தப்படும் என டுபாய் பொலிஸ் இயக்குநர் பிரிகேடியர் காலித் நாசர் அல் ரஷூகி தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

இத்தகைய ரோபோக்கள் நாள் முழுவதும் பணிபுரியும். அது விடுமுறை எடுக்காது. உடல் நலக் குறைவு காரணமாகவோ, பிரசவ கால விடுமுறையோ கேட்காது. 24 மணி நேரமும் வேலை பார்க்கும் என்றும் அவர்கூறியுள்ளார். (க)

## மணிலாவில் மர்மநபர் வெறியாட்டம்; துப்பாக்கி சூட்டில் 36 பேர் பலி!

### கேளிக்கை விடுதியில் பயங்கரம்





மணிலா, ஜூன் 03

பிலிப்பைன்ஸ் தலைநகரான மணிலாவில் மர்ம நபர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 36 பேர் பலியாகியுள்ளனர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

தலைநகர் மணிலாவில் உள்ள சொகுசு கேளிக்கை விடுதி ஒன்றில் நேற்று முன்தினம் நள்ளிரவு நேரத்தில் மர்ம நபர் ஒருவர் புகுந்து துப்பாக்கியால் சரமாரியாகச் சுட்டுள்ளார்.

இந்தக் காட்சியை கண்டு வாடிக்கையாளர்கள் அனைவரும் அலறியடித்து ஓடியுள்ளனர். ஆனால், அனைவரையும் சிறைபிடித்த மர்ம நபர் அவர்களை ஓர் அறையில் வைத்து பூட்டி தீவைத்துள்ளார். மேலும், கேளிக்கை விடுதியில் இருந்த ஹோட்டலிலும் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளார்.

இந்தச் சம்பத்திற்கு பின்னர் ஓர் அறைக்கு சென்ற நபர் படுக்கையில் படுத்து ஒரு போர்வையை எடுத்து போர்த்தியுள்ளார். பின்னர், தனக்கு தானே தீவைத்துக் கொண்டு தற்கொலை செய்துகொண்டுள்ளார்.


இந்தத் தாக்குதலுக்கு பின்னர் கேளிக்கை விடுதிக்குள் புகுந்த பொலிஸார் 36 சடலங்களை மீட்டுள்ளனர்.

இவர்களில் பலர் தீப்புகையை சுவாசித்து பலியாகியுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது ஒரு தீவிரவாதத் தாக்குதல் எனக் கூறப்பட்டாலும் அதற்கான ஆதாரங்கள் இதுவரையும் கிடைக்கவில்லை.

மேலும், துப்பாக்கிச் சூடு நடத்திய நபர் மனநலம் குன்றியவரா என்ற கோணத்திலும் தற்போது பொலிஸார் விசாரணையைத் தொடங்கியுள்ளனர். (க)

## சவூதி அரேபியாவில் குண்டுவெடிப்பு!



ரியாத், ஜூன் 03

சவூதி அரேபியாவின் ஷியைட்டுகள் எனப்படும் சிறுபான்மையினர் வசிக்கும் பகுதியான கட்டீப்பில் நேற்று முன்தினம் குண்டுவெடிப்புச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பயங்கர சத்தத்துடன் மிகப் பெரிய அளவில் குண்டு வெடித்துள்ளது என்று சம்பவ இடத்திற்கு அருகிலிருந்தவர்கள் தெரிவித்துள்ளனர்.

குண்டுவெடிப்பைத் தொடர்ந்து, அந்தப் பகுதியில் ஆயுதம் ஏந்திய பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் சம்பவ இடத்திற்கு சீல் வைக்கப்பட்டு, அந்தப் பகுதியை பயன்படுத்த தடையும் விதித்துள்ளனர்.

கார் குண்டுவெடிப்பே இடம்பெற்றுள்ளது என்று சவூதி அரேபிய செய்தி நிறுவனங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

குண்டுவெடிப்பு நடந்த இடத்தில் கார்கள் தீயில் கருகி, கடும் புகைமூட்டத்தை உருவாக்கியிருக்கும் புகைப்படங்கள் சமூக வலைத்தளங்களில் பகிரப்பட்டு வருகின்றன.

ஐ.எஸ். அமைப்பின் சன்னி தீவிரவாத அமைப்பினர் இந்தத் தாக்குதலை நடத்தியுள்ளனர் என்றும் கூறப்படுகிறது.

கடந்த 2014 ஆம் ஆண்டு இந்த அமைப்பு நடத்திய தாக்குதலில் 40 இற்கும் மேற்பட்ட ஷியைட்டுகள் பலியாகியிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (க)

## ஜோ ரூட்டின் அபார துடுப்பாட்டத்தால்

# பங்களாதேஷ் அணியை வீழ்த்தியது இங்கிலாந்து!

லண்டன், ஜூன் 03

பங்களாதேஷ் மற்றும் இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான ஐ.சி.சி. சம்பியன்ஸ் கிண்ணத்திற்கான முதலாவது போட்டியில், ஜோ ரூட் மற்றும் அணித் தலைவர் இயன் மோர்கனின் அதிரடித் துடுப்பாட்டத்தின் மூலம் 16 பந்துகள் எஞ்சிய நிலையில் எட்டு விக்கெட்டுகளால் பங்களாதேஷ் அணியை இலகுவாக வெற்றியீட்டி தொடரில் தமது முதல் வெற்றியை இங்கிலாந்து அணி பதிவு செய்துள்ளது.

லண்டன் ஓவல் மைதானத்தில் ஆரம்பித்த 2017ஆம் ஆண்டுக்கான சம்பியன்ஸ் கிண்ணத்தின் முதலாவது போட்டி இங்கிலாந்து மற்றும் பங்களாதேஷ் அணிகளுக்கு இடையில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணித் தலைவர் இயன் மோர்கன் முதலில் பந்து வீச்சைத் தெரிவு செய்தார்.

அதனை தொடர்ந்து பங்களாதேஷ் அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக களமிறங்கிய தமீம் இக்பால் மற்றும் சௌம்யா சர்க்கார் ஆகியோர் இணைந்து முதல் விக்கெட்டுக்காக 56 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்று சிறந்த ஒரு ஆரம்பத்தை பங்களாதேஷ் அணி சார்பாகப் பெற்றுக் கொடுத்தனர்.

சௌம்யா சர்க்கார் 28 ஓட்டங்களை பெற்றிருந்த போது, சகலதுறை ஆட்டக்காரர் பென் ஸ்டோக்ஸின் அதிரடிப் பந்து வீச்சில் ஜொனி பெயார்ஸ்டோவிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார். அதனையடுத்து களமிறங்கிய இம்ருல் கைஸ் சற்று நேரம் தாக்குப் பிடித்தாலும் 19 ஓட்டங்களுடன் லியாம் பிளங்கெட்டின் பந்து வீச்சில் மார்க் வூட்டிடம் பிடி கொடுத்து வெளியேறினார்.



அவரைத் தொடர்ந்து தமீம் இக்பாலுடன் இணைந்து கொண்ட முஷ்பிகுர் ரஹீம் 166 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பதிவு செய்ததோடு, இந்த இணைப்பாட்டமானது பங்களாதேஷ் அணி வெளிநாட்டு மண்ணில் மூன்றாவது விக்கெட்டுக்காக பெற்றுக்கொண்ட அதிகூடிய இணைப்பாட்டமாகப் பதிவானது.

அதிரடியாகத் துடுப்பாடிய முஷ்பிகுர் ரஹீம் 72 பந்து, களை எதிர்கொண்டு 8 பவுண்டரிகள் உள்ளடங்கலாக 79 ஓட்டங்களை விளாசிய நிலையில், துரதிஷ்டவசமாக லியாம் பிளன்கெட்டின் பந்து வீச்சில் அலெக்ஸ் ஹேல்ஸிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார்.

அதேநேரம் நிதானமாக துடுப்பாடிய தமீம் இக்பால் 142 பந்துகளை எதிர்கொண்டு 12 பவுண்டரிகள் மற்றும் 3 சிக்ஸர்கள் அடங்கலாக 128 ஓட்டங்களைப் பதிவு செய்த அதேவேளை இங்கிலாந்து அணிக்கு எதிராக தனது இரண்டாவது சதத்தைப் பதிவு செய்தார்.

இறுதி ஓவர்களில் சபீர் ரஹ்மான் வேகமாக ஓட்டங்களைக் குவிக்க முயன்ற போதிலும் இங்கிலாந்து அணி அடுத்தடுத்து பங்களாதேஷ் அணியின் விக்கெட்டுகளை தொடர்ச்சியாக வீழ்த்தி பங்களாதேஷ் அணியை 50 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுகள் இழப்பிற்கு 305 ஓட்டங்களுக்குள் மட்டுப்படுத்தியது.

இங்கிலாந்து அணியின் சிறப்பான பந்துவீச்சு காரணமாக பங்களாதேஷ் அணியால் கடைசி 5.2 ஓவர்களில் 44 ஓட்டங்களை மட்டுமே பெறமுடிந்தது குறிப்பிடத்தக்கது.

பந்து வீச்சில் இங்கிலாந்து அணி சார்பாக லியாம் பிளங்கெட் 59 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுகளையும் ஜேக் போல் மற்றும் பென் ஸ்டோக்ஸ் ஆகியோர் தலா 1 விக்கெட்டையும் கைப்பற்றினர்.

அதனைத் தொடர்ந்து, கடின வெற்றி இலக்கை நோக்கி துடுப்பாடக் களமிறங்கிய இங்கிலாந்து அணியின் முதல் விக்கெட்டை வெறும் 6 ஓட்டங்களுக்கு வீழ்த்திய பங்களாதேஷ் அணி, இங்கிலாந்தைச் சற்று நிலைகுலையச் செய்தது.

எனினும், அதனை தொடர்ந்து மற்ற ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் அலெக்ஸ் ஹேல்ஸுடன் இணைந்து கொண்ட ஜோ ரூட் இரண்டாம் விக்கெட்டுக்காக 159 ஓட்டங்களை குவித்து அணியை வலுவான நிலைக்குக் கொண்டு சென்றார். அலெக்ஸ் ஹேல்ஸ் 86 பந்துகளை எதிர்கொண்டு 11 பவுண்டரிகள் மற்றும் 2 சிக்ஸர்கள் அடங்கலாக 95 ஓட்டங்களைப் பெற்றிருந்த வேளை சபீர் ரஹ்மானின் பந்து வீச்சில் சன்சமுள் இஸ்லாமிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அவரைத் தொடர்ந்து களமிறங்கிய இங்கிலாந்து அணித் தலைவர் இயன் மோர்கன், ஜோ ரூட்டுடன் இணைந்து 143 ஓட்டங்களை இணைப்பாட்டமாக பெற்றுக்கொண்ட தோடு அணியை வெற்றிப் பாதைக்கு வழி நடத்தினர்.


இறுதியில் இங்கிலாந்து அணி 47.2 ஓவர்களில் 2 விக்கெட்டுகள் இழப்பிற்கு 308 ஓட்டங்களைப் பெற்று 8 விக்கெட்டுகளால் பங்களாதேஷ் அணியை வெற்றி கொண்டது.

இங்கிலாந்து அணி சார்பாக துடுப்பாட்டத்தில் ஜோ ரூட் 129 பந்துகளில் 11 பவுண்டரிகள் மற்றும் 1 சிக்ஸர் அடங்கலாக ஆட்டமிழக்காமல் 133 ஓட்டங்களையும், அலெக்ஸ் ஹேல்ஸ் 95 ஓட்டங்களையும் அணித் தலைவர் இயன் மோர்கன் ஆட்டமிழக்காமல் 75 ஓட்டங்களையும் பெற்றனர்.

இந்த போட்டியில் ஆட்ட நாயகனாக தெரிவு செய்யப்பட்ட ஜோ ரூட் தனது ஒரு நாள் சர்வதேசப் போட்டிகளில் ஆட்டமிழக்காமல் பெற்றுக் கொண்ட அதிகூடிய ஒட்ட எண்ணிக்கையாக 133 ஓட்டங்களைப் பதிவு செய்தார்.

சம்பியன்ஸ் கிண்ணத்துக்கான மற்றுமொரு போட்டி ஆஸ்திரேலியா மற்றும் நியூஸிலாந்து அணிகளுக்கு இடையில் பர்மிங்ஹாமில் இலங்கை நேரப்படி நேற்று மாலை 3.00 மணிக்கு ஆரம்பமானது.

# கும்ளேயின் பயிற்சியை புறக்கணித்தார் கோஹ்லி!



லண்டன், ஜூன் 03

இந்தியா - பாகிஸ்தான் இடையேயான போட்டிக்கு இந்திய அணி பயிற்சியில் ஈடுபட்டு வருகிறது. இந்த நிலையில், அனில் கும்ளே பயிற்சியளிக்க வந்ததும் வீராட் கோஹ்லி வெளியேறியுள்ளார் என்று தகவல் வெளியாகி உள்ளது.

இந்திய கிரிக்கெட் அணி தலைவர் வீராட் கோஹ்லி, பயிற்சியாளர் அனில் கும்ளே இடையே கருத்து வேறுபாடு நிலவி வருகிறது.

இதையடுத்து இருவரையும் சமாதானப்படுத்த இந்திய கிரிக்கெட் நிர்வாகிகள் முயற்சி செய்து வருகிறார்கள்.

இங்கிலாந்தில் இடம் பெறும் சம்பியன்ஸ் கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் இந்திய அணி நாளைய தினம் பாகிஸ்தானுடன் மோதுகிறது.

முக்கியமான இந்தப் போட்டிக்கு இந்திய கிரிக்கெட் தீவிர பயிற்சியில் ஈடுபட்டு வருகிறார்கள். இந்த நிலையில் துடுப்பாட்டப் பயிற்சியில் ஈடுபட்டு கொண்டிருந்த வீராட் கோஹ்லி, அங்கு வந்த பயிற்சியாளர் அனில் கும்ளே சில கருவிகளை கொண்டு வரும் படி கூறியவுடன் பயிற்சியில் இருந்து வெளியேறியுள்ளார் என்றும் தகவல் வெளிவந்துள்ளது. இதனால், இருவரும் இடையே மோதல் போக்கு தொடர்ந்தும் அதிகரித்து வருகிறது எனக் கூறப்படுகிறது.

**பயிற்சிக்கான இடம் பொருத்தமற்றது!**

இதேவேளை, சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் இந்தியா பயிற்சி எடுப்பதற்காக ஒதுக்கப்பட்டுள்ள இடம் வசதியில்லாமல் இருக்கிறது என்று கோஹ்லி மற்றும் அனில் கும்ளே ஆகியோர் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

சம்பியன்ஸ் கிண்ண லீக் ஆட்டத்தில் இந்தியா தனது முதல் ஆட்டத்தில் பாகிஸ்தானை பர்மிங்ஹாமில் உள்ள எட்ஜ்பாஸ்டன் மைதானத்தில் எதிர்கொள்கிறது.

இதற்காக இந்திய அணி பர்மிங்ஹாமில் தனது பயிற்சியைத் தொடங்கியுள்ளது. எட்ஜ்பாஸ்டனில் நேற்று நியூஸிலாந்து - ஆஸ்திரேலியா இடையிலான போட்டி நடைபெற்றது. இதனால், இந்தியாவிற்கு எட்ஜ்பாஸ்டனில் உள்ள முதன்மையான பயிற்சி இடம் வழங்கப்படவில்லை. அதற்கு பதிலாக அருகில் உள்ள ஒரு மைதானம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த மைதானம் வேகப்பந்து வீச்சாளர்களுக்கு வசதியாக இல்லை என விராட் கோஹ்லி மற்றும் பயிற்சியாளர் கும்ளே ஆகியோர் தங்களது அதிருப்தியைத் தெரிவித்துள்ளனர்.

புவனேஸ்வர் குமார், மொகமது ஷமி ஆகியோர் சுமார் 30 யார் தூரம் ஓடிவந்து பந்து வீசுவார்கள். அங்கு 30 யார் ஓடுவதற்கு வசதியில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதுகுறித்து, கோஹ்லி மற்றும் அனில் கும்ளே ஆகியோர் அணியின் முகாமையாளர் கபில் மல்கோத்ராவிடம் புகார் அளித்துள்ளனர். அவர் வார்ஷைர் அதிகாரிகளுடன் இது குறித்துத் தெரிவித்துள்ளார். நேற்றைய போட்டி முடிந்துள்ளதால்,இன்றைய தினம் எட்ஜ்பாஸ்டன் மைதானம் இந்திய அணியின் பயிற்சிக்கு வழங்கப்படும் எனஎதிர்பார்க்கப்படுகிறது.

ஆனால், பாகிஸ்தான் அணி கடந்த ஒரு வாரமாக எட்ஜ்பாஸ்டனில் பயிற்சி மேற்கொண்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

# பயிற்சியாளராக சேவாக்?

டில்லி, ஜூன் 03

இந்திய கிரிக்கெட் அணியின் தலைமைப் பயிற்சியாளர் பொறுப்பிற்கு சேவாக் விண்ணப்பித்துள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

அத்துடன், ஆஸ்திரேலியாவின் டொம் மூடி, இங்கிலாந்தின் ரிச்சர்ட் பைபஸ், இந்தியாவிலிருந்து முன்னாள் இந்திய வேகப்பந்து வீச்சாளர் டொட்ட கனேஷ், முன்னாள் இந்தியா 'ஏ' பயிற்சியாளர் லால்சந்த் ராஜ்புத் ஆகியோரும் இந்திய அணியின் தலைமைப் பயிற்சியாளராக விண்ணப்பித்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.




# புதிய வியூகங்களுடன் சம்பியன்ஸ் கிண்ணத்தில் களமிறங்குகிறது இலங்கை அணி!

லண்டன், ஜூன் 03

மிகவும் எதிர்பார்க்கப்பட்ட விறுவிறுப்பான சம்பியன்ஸ் கிண்ணத் தொடர் ஆரம்பமாகியுள்ளது. இந்த நிலையில், கோடான கோடி கிரிக்கெட் ரசிகர்களின் அவாவைப் பூர்த்தி செய்யும் நோக்கில் சகல அணிகளும் பல்வேறுப்பட்ட வியூகங்களுடன் கிண்ணத்தைக் கைப்பற்றும் நோக்கில் களம் இறங்கியுள்ளன.

அந்த வகையில் 'பி' குழுவில் இடம்பிடித்திருக்கும் இலங்கை அணி, சிறந்த திறமைகளை வெளிப்படுத்தினாலும், குழுமட்டப் போட்டிகளுடன் வெளியேறிவிடும் என்று பல்வேறுப்பட்ட கிரிக்கெட் நிபுணர்களினால் தெரிவிக்கப்பட்டு வந்தது.

அண்மைய காலங்களில் அணி வெளிப்படுத்திய திறமைகளின் அடிப்படையில் இந்த எதிர்வுகூறல்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. எனினும், இதுவரை நடைபெற்றுள்ள பயிற்சிப் போட்டிகளில் இலங்கை அணி தோல்வியைத் தழுவியிருந்தாலும் இந்தப் போட்டிகளில் 300 இற்கும் அதிகமான ஓட்டங்களைக் குவித்திருந்தது.

இலங்கை அணியினர் ஐ.சி.சியால் கடந்த காலங்களில் ஒழுங்கு செய்யப்பட்ட சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் சிறந்த முறையில் திறமைகளை வெளிப்படுத்தியிருந்தனர்.

2007, 2009, 2011, 2012 ஆம் ஆண்டுகளில் உலக இருபதுக்கு 20 தொடர்களில் எதிரணிகளுடன் கடுமையாகப் போராடியது. இந்த நிலையில் இறுதியாக, 2014 ஆம் ஆண்டு பங்களாதேஷில் நடைபெற்ற இருபதுக்கு 20 இறுதிப் போட்டியில் இந்திய அணியை வீழ்த்தி சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்திருந்தது.

### சம்பியன்ஸ் கிண்ணத்தில் இலங்கையின் வரலாறு

2002 ஆம் ஆண்டு நடைபெற்ற சம்பியன்ஸ் கிண்ண இறுதிப் போட்டியில் மழை குறுக்கீட்டின் காரணமாக தொடரின் சம்பியன் கிண்ணத்தை இந்திய அணியுடன் பகிர்ந்து கொண்டது இலங்கை அணி.

எனினும் இலங்கை 2004, 2006 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற சம்பியன்ஸ் கிண்ணத் தொடர்களிலிருந்து குழு மட்டப் போட்டிகளுடன் இலங்கை அணி வெளியேறியிருந்தது.

இறுதியாக 2013 ஆம் ஆண்டு நடைபெற்ற சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் வலிமை மிக்க ஆஸ்திரேலியா மற்றும் போட்டி இடம்பெற்ற இங்கிலாந்து அணிகளையும் வெற்றியீட்டி அரையிறுதி போட்டிக்கு தகுதி பெற்றிருந்தது. எனினும் அரையிறுதிப் போட்டியில் சம்பியன் கிண்ணத்தை கைப்பற்றிய இந்திய அணியிடம் தோல்வியுற்றது.

### இலங்கை அணியின் பந்து வீச்சு

இலங்கை அணியின் பந்து வீச்சைப் பொறுத்த வரை கடந்த ஸ்கொட்லாந்து, ஆஸ்திரேலிய மற்றும் நியூஸிலாந்து அணிகளுக்கு எதிரான நான்கு பயிற்சிப் போட்டிகளில் இலங்கை அணி சராசரியாக 45.4 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட் என்ற வீதத்திலேயே விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளது.

இலங்கை அணி மொத்தமாக 1,135 ஓட்டங்களை வழங்கியுள்ள அதேநேரம், 25 விக்கெட்டுகளை கைப்பற்றியுள்ளது. இந்தப் போட்டிகளின்போது இலங்கை அணி தமது பந்து வீச்சாளர்களைப் பரிச்சார்த்தமாக முயற்சித்துப் பார்த்தது.

கடந்த 2015 ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஒருநாள் போட்டிகளுக்கு லசித் மாலிங்கவின் மீள் வருகை இலங்கை அணியின் பந்து வீச்சைப் பலப்படுத்தியிருக்கும் என்பதில் எவ்விதமான சந்தேகமும் இல்லை. அந்த வகையில் ஆஸ்திரேலிய அணிக்கு எதிரான போட்டியில் எட்டு ஓவர்கள் பந்து வீசி வெறும் 32 ஓட்டங்களை மட்டும் வழங்கி தனது அனுபவம் மற்றும் உடல் தகுதியை அவர் வெளிப்படுத்தியிருந்தார்.

மேலும் தனது நான்காவது சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் பங்குபற்றும் லசித் மாலிங்க அனுபவம் மிக்க நுவன் குலசேகரவுடன் இணைந்து பந்து வீச்சைப் பலப்படுத்தவுள்ளார். 2015 ஆம் ஆண்டு முதல் இலங்கை அணி சார்பில் ஒருநாள் போட்டிகளில் கூடிய விக்கெட்டுகளைக் கைப்பற்றியுள்ள சுரங்க லக்மால், இம்முறை எவ்வாறு பந்து வீச்சினை மேற்கொள்வார் என்பதனை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். அதேநேரம், இளம் பந்து வீச்சாளர் நுவன் பிரதீப் ஆஸ்திரேலிய அணிக்கு எதிரான போட்டியில் சிறப்பாக பந்து வீசியிருந்தார். அந்த வகையில் போட்டியின் இடை ஓவர்களை அஞ்சலோ மத்தியூஸ் மற்றும் அசேல குணரத்ன ஆகியோர் இணைந்து பலப்படுத்தக்கூடிய வாய்ப்புக்கள் காணப்படுகின்றன.

எனினும் மீண்டும் காயத்துக்கு உள்ளாகியுள்ள மத்தியூஸ் தென்னாபிரிக்காவுடனான முதலாவது போட்டியில் விளையாடுவது சந்தேகத்திற்கிடமாகியுள்ளது. அவர் அணியில் இணைய வேண்டும் என்பதே அனைவரதும் எதிர்பார்ப்பாகும்.

சண்டகன் மற்றும் சீகுகே பிரசன்ன போன்ற சகல துறை ஆட்டக்காரர்களை அணிக்குள் உள்வாங்க முன்னர், இரண்டு தடவைகள் யோசிக்க வேண்டிய கட்டாயத்தில் இலங்கை கிரிக்கெட் தரப்பினர் உள்ளனர்.

முக்கியமாக பலமான காற்று மற்றும் குளிர் போன்ற நிலைமைகளைக் கருத்தில்கொள்ள வேண்டும். எனினும், எதிரணிக்கு இவர்கள் இருவரும் அச்சுறுத்தல் விடுக்கக்கூடியவர்களே.

### துடுப்பாட்ட பலம் மற்றும் பலவீனம்

அண்மைய காலமாக இருந்து வரும், நிலையில்லாத துடுப்பாட்டம் காரணமாக அனுபவம்மிக்க அஞ்சலோ மத்தியூஸ், தினேஷ் சந்திமல் மற்றும் உபுல் தரங்க ஆகியோரின் மீது அதிக அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுகின்றன.

அந்த வகையில், முதன் முதலாக சர்வதேச கிரிக்கெட் தொடர் ஒன்றில் பங்குபற்றும் குசல் மெண்டிஸ் மற்றும் நிரோஷன் டிக்வெல்ல போன்ற இளம் வீரர்களுடன் இணைந்து அதிரடித் துடுப்பாட்டத்தினை தொடர் முழுவதும் வெளிப்படுத்தியாக வேண்டும் என்ற கட்டாயத்தில் சிரேஷ்ட வீரர்கள் உள்ளனர்.

கடந்த போட்டிகளின் போது சிறந்த ஆரம்பத்தை பெற்றுக்கொடுத்த உபுல் தரங்க மற்றும் நிரோஷன் டிக்வெல்ல ஆகியோர், தம்மை ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக நிலைப்படுத்திக் கொண்டுள்ளனர்.

அவர்களைத் தொடர்ந்து குசல் மெண்டிஸ், தினேஷ் சந்திமல் மற்றும் அணித் தலைவர் அஞ்சலோ மத்தியூஸ் ஆகியோர் களமிறங்கவுள்ளனர்.

அதிரடி வீரர்களான அசேல குணரத்ன மற்றும் சாமர கபுகெதர ஆகியோரின் பங்களிப்பும் அணியின் வெற்றிப்பாதைக்கு வழிவகுக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மேலும், அசேல குணரத்ன கடந்த ஆஸ்திரேலிய இருபதுக்கு 20 போட்டிகளின்போது அதிரடித் துடுப்பாட்டத்தை வெளிப்படுத்தி தொடரை வெற்றி கொள்வதற்கு பங்களிப்பு செய்திருந்தார் என்பது யாவரும் அறிந்ததே.

அதேநேரம், இறுதி 11 பேர் கொண்ட அணிக்கு சீகுகே பிரசன்ன மற்றும் திசர பெரேரா ஆகியோர் தெரிவாகும் பட்சத்தில் பந்து வீச்சு மற்றும் துடுப்பாட்டத்தில் முக்கிய வீரர்களாக அவர்கள் கணிக்கப்படுவர்.

### களத் தடுப்பு

கடந்த காலங்களில் சிறந்த களத்தடுப்பு அணியாக இலங்கை அணி கணிக்கப்பட்டிருந்தது. எனினும், அண்மைய காலங்களில் இலங்கை அணியின் களத்தடுப்புத் தரம் குறித்து அதிகம் விமர்சிக்கப்பட்டது.

எவ்வாறெனினும், தலைமை பயிற்றுவிப்பாளர் கிராம் போர்ட் மற்றும் அணி மேலாளர் அசங்க குருசிங்க ஆகியோர் இங்கிலாந்து மற்றும் வேல்சில் நடைபெறவுள்ள போட்டிகளின் போது சிறந்த களத்தடுப்பை இலங்கை அணி வெளிப்படுத்தும் என உறுதி கூறியுள்ளனர்.

அதேநேரம், சிறந்த களத்தடுப்பு வெற்றிக்கு முக்கிய பங்காற்றும் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இம்முறை சம்பியன்ஸ் கிண்ணப் போட்டிகளில் இலங்கை அணி மீதான எதிர்பார்ப்புகள் குறைந்திருந்தாலும், இலங்கை அணி ஆக்ரோஷ ஆட்டத்தை வெளிப்படுத்தி எதிரணிகளை வெற்றிக் கொள்ளும் என்பது இலங்கை கிரிக்கெட்டை நேசிக்கும் ரசிகர்களின் எதிர்பார்ப்பாகும்.

வலுவற்ற அணியாக கருதப்பட்டாலும், இலங்கை அணியானது எதிரணிகளுக்கு அச்சுறுத்தல் மற்றும் சவால் விடுக்கக்கூடிய அணியாகத் திகழ்கின்றது என்பதில் ஐயமில்லை. இதுவே இலங்கை கிரிக்கெட் அணியின் ரசிகர்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.

---

# ஆசிய மெய்வல்லுநர் திறன்காண் போட்டியில் அனித்தா புதிய சாதனை!

கொழும்பு, ஜூன் 03

இலங்கையில் நடைபெற்று வரும் தடகளப் போட்டியில் கோலூன்றிப் பாய்தலில் அனித்தா ஜெகதீஸ்வரன் புதிய சாதனை படைத்துள்ளார்.

ஆசிய மெய்வல்லுநர் போட்டிக்கான இரண்டாவது திறன்காண் போட்டி தியகம மஹிந்த ராஜபக்ஷ மைதானத்தில் நடைபெற்று வருகிறது

இதில் பெண்களுக்கான



கோலூன்றிப் பாய்தலில் கலந்துக்கொண்ட அனித்தா ஜெகதீஸ்வரன், 3.46 மீற்றர் உயரம் பாய்ந்து இலங்கைக்கான புதிய தேசிய சாதனையை நிலை நாட்டியுள்ளார்.

இதே மைதானத்தில் கடந்த மாதம் நடைபெற்ற முதலாவது திறன்காண் போட்டியில் 3.45 மீற்றர் உயரம் பாய்ந்து நிலை நாட்டிய தனது சொந்த சாதனையை அனித்தா முறியடித்துள்ளார்.

காலைக்கதிர்



## கோட்டாபய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
காயப்படுத்தியமை ஆகிய சம்பவங்கள் தொடர்பில் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜ பக்ஷ விரைவில் கைது செய்யப்படலாம் என ஓர் ஊடகம் தகவல் வெளியிட்டுள்ளது.

ரத்துபஸ்வெல படுகொலைகள் தொடர்பாக அந்தத் துப்பாக்கிச் சூட்டுக்கு உத்தரவிட்ட கட்டளை அதிகாரியான பிரிகேடியர் தேசப்பிரிய குணவர்த்தன கடந்த மாதம் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டார். அவரிடம் விசாரணைகள் நடந்தன. அவர் கொடுத்த தகவலின் பேரில், முன்னர் அவரது உடனடிப் பிரதானியாகப் பணியாற்றிய பிரிகேடியர் ஷாந்த திஸநாயக்கா என்பவர் கடந்த 29 ஆம் திகதி குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு அழைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டார். அந்த விசாரணையில் அவருக்கு ஒரு முக்கியஸ்தரிடமிருந்து உத்தரவு கிடைத்துள்ளது என்பது தற்போது தெரிய வந்துள்ளதாம்.

அதனடிப்படையிலேயே விடயம் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிராகத் திரும்பியிருக்கின்றது என அந்த ஊடகம் மேலும் தெரிவித்துள்ளது.

வெலிக்கடைச் சிறைச்சாலைப் படுகொலைகள் தொடர்பிலும் முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அநுர சேனநாயக்கா ஊடாக, பொலிஸ் போதைப் பொருள் தடுப்பு பிரிவின் இன்ஸ்பெக்டர் நியோமல் ரங்கவேக்கு வழங்கப்பட்ட 'துண்டு' ஒன்று கிடைத்துள்ளதாக குற்ற விசாரணைத் திணைக்களத்தின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதன் மூலம், வெலிக்கடை விவகாரத்துக்கு நேரடியாக ஆலோசனை வழங்கியவர் யார் என்பது தொடர்பில் சாட்சியம் கிடைத்துள்ளது எனக் குற்ற விசாரணைத் திணைக்களம் கருதுகின்றது.

வெலிக்கடைக் கொலைச் சம்பவத்துடன் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ நேரடியாகத் தொடர்புபட்டுள்ளார் எனவும், அது தொடர்பான உறுதியான ஆதாரங்கள் கிடைத்துள்ளன எனவும் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் அண்மையில் நீதிமன்றில் தெரிவித்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

## எதிரணிக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நாடுகளும் அந்த ஆலோசனையை வழங்கின.

எனினும், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அதற்கு இணங்கவில்லை என்ற தகவலை அமைச்சர் டிலான் பெரேரா வெளியிட்டிருக்கின்றார்.

அவசரகால நிலைமை நடைமுறைப்படுத்தப்பட்டிருக்குமானால் கூட்டு எதிரணியினர் அரசுக்கு எதிரான தங்களின் பிரசார நோக்கத்துக்கு அதனைப் பலமாகப் பயன்படுத்துவார்கள் என்று அரசுத் தலைமை கருதியதாம். அதனால்தான் அவசர கால நிலைமை அறிவிப்பை அரசுத் தலைமை தவிர்த்தது என்று கூறப்பட்டது. (உ)

## திருச்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கைது செய்யப்பட்ட அருளின்ப தேவன், குணசீலன், யோகரூபன் ஆகியோரே இந்த உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். (உ)

## ஈழத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
யையும் அங்கீகரித்துள்ளது.

அங்கு நடைபெறவுள்ள பொதுத் தேர்தலை ஒட்டி அக்கட்சியின் தலைவர் ஜெரமி கோர்பின் சார்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விவரம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள சில அம்சங்கள் வருமாறு :-

இலங்கையில் நடைபெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பில் ஐ. நா. மனித உரிமைக் கவுன்ஸிலின் தீர்மானம் முழுமையாக நிறைவேற்றப்படுவதற்கும் சர்வதேச சுயாதீன விசாரணை நடத்தப்படுவதற்கும் தனது முழுமையான ஆதரவைத் தொழிற் கட்சி வலியுறுத்துகிறது.

மனித உரிமை மீறல்களில் ஈடுபடும் பட்சத்தில் இலங்கைக்கான ஆயுத விற்பனை நிறுத்தப்படும்.

1983 ஆம் ஆண்டு நாடாளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்ட நாள் முதல் இலங்கையில் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்காகவும் அவர்களுக்கு எதிரான மனித உரிமை மீறல்களுக்கு எதிராகவும் தொடர்ச்சியாகக் குரல்கொடுத்து, தமிழ் மக்களுடன் இணைந்து போராடி வரும் ஜெரமி கோர்பின் தலைமையிலான தொழிற் கட்சியை வெற்றிபெற செய்வதன் மூலம் அரசியல், சமூக மற்றும் பொருளாதார ரீதியாகத் தமிழ் மக்கள் பெரும் நன்மைகளைப் பெற முடியும்.

தனது 34 வருட அரசியல் பயணத்தில் எப்போதுமே சரியான பக்கம் நின்று வருபவர், உலகெங்கும் ஒடுக்கப்படும் மக்களுக்காக குரல் கொடுத்து வருபவர் ஜெரமி கோர்பின்.

தமிழர்களுக்கு ஜெரமி கோர்பினை அறிமுகப்படுத்த வேண்டிய அவசியமில்லை. லண்டனில் நடைபெற்ற தமிழரின் அத்தனை போராட்டங்களிலும் அவரை நீங்கள் கண்டிருப்பீர்கள், உங்களில் பலர் அவருடன் உரையாடியிருப்பீர்கள். உங்கள் புகலிட விண்ணப்பம் தொடர்பில் அவரது உதவியைப் பெற்றிருப்பீர்கள். உதவி கோரிய போதெல்லாம் மறுக்காது உதவிய ஒரு தோழனை பிரதமராகக் கொண்ட அரசாங்கம் உருவாகும் தருணம் இப்போது வாய்த்திருக்கிறது. அதனை சாத்தியமாக்குவது உங்களுடைய வாக்குகளிலும் தங்கியிருக்கிறது. இதுவரை காலமும் எங்களின் பக்கமிருந்த அவருடைய பக்கத்தில், இப்போது நாம் நிற்போம். அவரது தலைமையிலான தொழிற்கட்சி வேட்பாளர்களுக்கு வாக்களிப்போம். - என்று உள்ளது. (உ)

## வெள்ள...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இதனைத் தெரிவித்தார்.

காணாமல் போனோர்கள் என்று கருதப்படும் சுமார் 95 பேரில் பெரும்பான்மையானோரை உயிருடன் மீட்பதற்கான சாத்தியங்கள் குறைந்து இருப்பதால் அவர்களையும் இறந்தவர்களாக அரசாங்கம் அறிவிக்க உள்ளதாக நேற்று இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் அவர் குறிப்பிட்டார்.

இந்த அனர்த்தத்தில் இதுவரை 208 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும் 92 பேர் காணாமல் போயுள்ளனர் எனவும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்திருந்தது.

வெள்ளம் பாதிக்கப்பட்ட 15 மாவட்டங்களிலும் 1 லட்சத்து 75 ஆயிரத்து 516 குடும்பங்களைச் சேர்ந்த 6 லட்சத்து 77 ஆயிரத்து 241 பேர் பாதிப்புற்றிருக்கின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (உ)

## மண்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த மாவட்டங்களின் மலைப்பாங்கான பகுதிகள் மற்றும் சரிவுகளில் வாழும் மக்கள் மண்சரிவு மற்றும் மண்மேடு சரிந்து விழும் அபாயம் குறித்து விழிப்புடன் இருக்க வேண்டும் என தேசிய கட்ட ஆய்வு நிறுவகம் குறிப்பிட்டுள்ளது.

## ஞானசாரருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தேரரைக் கைது செய்யவிடாமல் இப்போது தடுக்கும் முக்கியஸ்தர் வேறு யாருமல்லர், நீதி, பௌத்த சாசன அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷவேதான்!

- இவ்வாறு குற்றம் சுமத்தியிருக்கின்றார் கொழும்பு மாநகர முன்னாள் பிரதி மேயர் அஸாத் சாலி.

ஏழு நாடுகளின் தூதுவர்கள் நேற்று முன்தினம் கொழும்பு தெவட்டகஹ பள்ளிவாசலில் முஸ்லிம் தலைவர்களைச் சந்தித்து அண்மைக் காலமாக சிறுபான்மை இனத்தவர்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும் வன்முறைப் போக்குக் குறித்துக் கலந்துரையாடினர்.

அந்தச் சந்திப்பில் கலந்து கொண்ட அஸாத் சாலி பின்னர் அது குறித்து ஊடகங்களுக்குத் தகவல் வெளியிட்டபோதே மேற்கண்ட குற்றச்சாட்டை முன்வைத்தார்.

முன்னர் அப்போது ஜனாதிபதியாக இருந்த மஹிந்த ராஜபக்ஷ அணியினரே பலம் பொருந்திய சக்தியாக இருந்து ஞானசார தேரர் குழுவை இயக்கினர்.

ஆனால், இப்போது நீதி அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷவே ஞானசார தேரரைக் கைது செய்யவிடாமல் பாதுகாத்து வருகின்றார்.

ஜனாதிபதியுடனான சந்திப்புகளுக்கு ஞானசார தேரரை அழைத்துச்செல்பவர் அமைச்சர் விஜேதாஸதான்.

கடந்த ஆட்சியின்போது கட்டவிழ்த்து விடப்பட்ட இனவாத அடக்குமுறைகள் காரணமாகவே நாட்டின் அனைத்துத் தரப்பினரும் இணைந்து இந்த ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தியிருந்தனர்.

ஆனால் தற்போதைய மைத்திரி - ரணில் அரசும் முஸ்லிம் மக்களை ஏமாற்றியுள்ளது. அது சிங்கள இனவாதிகளுக்கு மீண்டும் களம் அமைத்துக் கொடுத்து வேடிக்கை பார்க்கின்றது. - இவ்வாறு அஸாத் சாலி மேலும் குற்றம் சுமத்தினார். (உ)

## சு.க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தாக்கல் செய்யப்பட்ட மனுவை விசாரணை செய்வதா என்பது குறித்து கொழும்பு மாவட்ட நீதிமன்றம் எதிர்வரும் ஜுலை 7 ஆம் திகதி முடிவு செய்யும் என நேற்று முன்தினம் நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

பொரலஸ்கமுவ நகர சபையின் முன்னாள் தலைவர் அநுர பிரியதர்ஷன என்பவரும் மற்றொருவரும் தாங்கள் செய்திருந்த இந்த மனுவைப் பரிசீலித்த பின்னர் அது தொடர்பான உத்தரவை ஜுலை 7 ஆம் திகதி வழங்க நீதிமன்றம் முடிவு செய்துள்ளது.

சுதந்திரக் கட்சியின் சார்பில் தேர்தலில் போட்டியிட்டு ஜனாதிபதியாக வென்றால் மட்டுமே கட்சியின் தலைமைப்பதவியை அதனைக் காட்டிப் பெறுவதற்கு ஒருவர் உரித்துடையவராகின்றார். ஆனால் மைத்திரிபால சிறிசேன சு.க. வேட்பாளராக நின்று ஜனாதிபதியாகத் தெரிவானவரல்லர். அவர் பிறிதொரு கட்சியின் சார்பில் தேர்தலில் போட்டியிட்டு வென்றவர்.

இன்னொரு கட்சியில் தேர்தலில் போட்டியிட்டு வென்றவர், தாம் சு.க. உறுப்பினராகவும் அதேவேளை ஜனாதிபதியாகவும் இருக்கின்றார் என்ற காரணத்தைக் காட்டி கட்சித் தலைமையைப் பிடுங்க முடியாது. - இப்படி மனுவில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த மனுவை மேற்கொண்டு விசாரணைக்கு எடுப்பதா என்ற தனது முடிவை எதிர்வரும் ஜுலை 7 ஆம் திகதி நீதிமன்றம் வழங்கும் எனக் கூறப்பட்டது. (உ)

## ஒருவரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கேரள மாநிலத்தை சேர்ந்த 45 வயது நிரம்பிய ஒருவருக்கு இருதய கோளாறு ஏற்பட்டது. அவரை கோவையில் உள்ள தனியார் ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக சேர்த்தனர்.

அவருடைய இதயம் மிக மோசமான நிலையில் செயல்பட்டு வதந்து. எனவே, வேறு இதயம் பொருத்தினால்தான் அவரால் உயிர் பிழைக்க முடியும் என்ற நிலை இருந்தது.

இந்த நிலையில் அந்த ஆஸ்பத்திரியில் மூளை சாவு அடைந்த பெண் ஒருவரின் இதயத்தை தானம் பெற்று அதை அவருக்கு பொருத்த முடிவு செய்தனர்.

ஆனால், அவரது உடலில் இருந்த இதயம் 10 சதவீதம் அளவுக்கு இயங்கி வந்தது. எனவே அந்த இதயத்தை அகற்றாமலேயே புதிய இதயத்தை அதன் பக்கத்தில் பொருத்தி வேலையை இரு இதயத்துக்கும் பகிர்ந்து அளிப்பது என்று வைத்தியர்கள் முடிவு செய்தனர்.

அதன்படி புதிய இதயம் மார்பின் வலது பக்கத்தில் பொருத்தப்பட்டு ஏற்கனவே இருந்த இதயத்தோடு இணைப்புக் கொடுக்கப்பட்டது.

இந்த சத்திர சிகிச்சை மூன்றரை மணிநேரம் தொடர்ந்து நடந்தது. அது வெற்றிகரமாக அமைந்தது. தற்போது அவரது உடலில் 2 இதயங்கள் உள்ளன. அவை இரண்டுமே செயல்பட்டு வருகின்றன. இதயம் செய்ய வேண்டிய அனைத்து பணிகளையும் இரு இதயமும் சேர்ந்து செய்கின்றன. எனவே, உடலில் 2 இடங்களில் இதய துடிப்பு கேட்ட வண்ணம் உள்ளது.

இது, மிக நவீன சத்திர சிகிச்சை. இந்தியாவில் இப்போது தான் முதல் முறையாக இந்த சத்திரசிகிச்சை செய்துள்ளனர். இதனால் இந்தியாவில் 2 இதயம் உள்ள முதல் நபராக இவர் இருக்கிறார்.

டாக்டர் பிரசாந்த் விஜயன் தலைமையிலான வைத்தியர்கள் இந்த சத்திரசிகிச்சை செய்தார்கள். சத்திரசிகிச்சை பற்றி வைத்தியர் பிரசாந்த் கூறியவை வருமாறு :-

அவர் உடலில் இருந்த இதயம் செயல்பாடு மிக குறைவாக இருந்தது. நுரையீரலின் அழுத்தத்தை ஏற்று செயல்படும் அளவுக்கு இதயம் இல்லை.

எனவே, அவருக்கு செயற்கை இதயம் மற்றும் நுரையீரல் பொருத்த வேண்டிய நிலை இருந்தது.

இதனால் ஏற்கனவே இருக்கும் இதயத்தை அப்படியே வைத்து விட்டு அந்த இதயத்துக்கு உதவி செய்யும் வகையில் வேறு இதயத்தை பொருத்தி இருக்கிறோம். இரு இதயங்களுக்கும் இடையே 5 இடங்களில் இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது. அவை தற்போது சிறப்பாக செயல்படுகின்றன. - என்றார். (உ)

## நமது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மறியலில் வைத்தமையை ஆட்சேபித்து, அம்பாந்தோட்டை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தாக்கல் செய்திருந்த வழக்கை கொழும்பு மேலதிக மாவட்ட நீதிமன்றம் விசாரணைக்கு ஏற்றுக் கொண்டது.

இந்த விடயம் தொடர்பில் பொலிஸ் நிதி மோசடி விசாரணைப் பிரிவின் இரண்டு அதிகாரிகளிடம் 20 கோடி ரூபா இழப்பீடு கோரி இந்த வழக்கை நாமல் ராஜபக்ஷ தாக்கல் செய்துள்ளார்.

இந்த வழக்குக்கு எதிராக சட்டமா அதிபர் தாக்கல் செய்திருந்த அடிப்படை ஆட்சேபனையை நேற்று நிராகரித்த கொழும்பு மேலதிக நீதிபதி சமத் மதநாயக்க வழக்கை எதிர்வரும் ஜுலை மாதம் 12 ஆம் திகதி விசாரணைக்கு எடுக்க உத்தரவிட்டார்.

ஊழல் எதிர்ப்பு முன்னணியின் ஒருங்கிணைப்பாளர் வசந்த சமரசிங்க செய்திருந்த அடிப்படையற்ற முறைப்பாட்டுக்கு அமைய பொலிஸ் நிதி மோசடி விசாரணைப் பிரிவு தன்னைக் கைது செய்ததாக நாமல் ராஜபக்ஷ தனது மனுவில் சுட்டிக் காட்டியுள்ளார்.

தன்னைக் கைது செய்து தடுத்துவைத்ததன் மூலம் தனது நற்பெயருக்குக் களங்கம் ஏற்பட்டதாகவும் இதற்கு இழப்பீடாக 20 கோடி ரூபா வழங்க வேண்டும் எனவும் நாமல் இந்த வழக்கில் கோரிக்கை விடுத்துள்ளார்.

பொலிஸ் நிதி மோசடி விசாரணைப் பிரிவைச் சேர்ந்த சிரேஷ்ட இன்ஸ்பெக்டர் ஆர்.ஏ.கே.ரணவக்க, சப்-இன்ஸ்பெக்டர் ஷாந்த லால் ஆகியோருக்கு எதிராகவே இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (உ)

## உத்தேச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கான பணிப்புரையை வழிகாட்டல் குழுவின் தலைவரான பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விடுத்திருக்கின்றார் என்றும் தெரிகின்றது.

இப்படி அனைத்துத் தரப்பினரதும் கருத்துகளையும் உள்ளடக்கிய உயர் கலப்புப் பொறிமுறையிலான அரசமைப்பு நகல் ஒன்றைத் தயாரித்தால் அதனை நாடாளுமன்றத்திலும், மக்கள் முன்னிலையிலும் பிய்ச்சல், பிடுங்கல், தடங்கலின்றி போதிய ஆதரவைப் பெற்று நிறைவேற்றலாம் எனப் பிரதமர் கருதுகின்றார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

அரசுத் தலைமை தற்போது எடுத்துள்ள முடிவுகளின் அடிப்படை அம்சங்கள் வருமாறு:-

### ஆட்சி முறைமை

நாட்டின் ஆட்சி முறைமை ஒற்றையாட்சியாகவும் இருக்காது. சமஷ்டி ஆட்சியாகவும் இருக்காது. இரண்டும் கலந்து உயர் பொறிமுறையில் அது அமையும்.

அதை விவரிக்கும் வாசகங்களும் இரண்டு அடிப்படைகளினதும் கலப்பாக இருக்கும்.

எனினும் -

வழிகாட்டல் குழுவின் உத்தேச இடைக்கால அறிக்கையில் இந்தக் கலப்பு முறைமைக்கு மாறாக சில தரப்புகள் ஒற்றையாட்சியை வலியுறுத்துகின்றமையும் தமிழர் தரப்பு சமஷ்டி முறைமையைக் கோருகின்றமையும் கூட இடம்பெற்றிருக்கும்.

எனினும் இறுதி அரசமைப்பு நகல் வடிவத்தில் கலப்பு முறைமை பற்றிய தீர்மானமே இடம்பெறும் என நம்பப்படுகின்றது.

### ஜனாதிபதியின் அதிகாரம்

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறைமை ஒழிக்கப்பட வேண்டும் என சில தரப்புகள் வலியுறுத்தினாலும், சிறிலங்கா சுதந்திரக்கட்சியினர் அதை ஒரேயடியாக எதிர்க்கின்றனர். அவர்கள் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறை நீடிக்கப்பட வேண்டும் என வலியுறுத்துகின்றனர். ஆனால் ஐ.தே.கட்சியினரோ அந்த முறைமை நீக்கப்பட வேண்டும் என்கின்றனர். அந்த முறைமை நீக்கப்படும் அரசமைப்பு மாற்றத்துக்கு மட்டுமே தமது ஆதரவு உண்டு என ஜே.வி.பியும் வலியுறுத்துகின்றது. அந்த முறைமை நீக்கப்படுவதே கடந்த ஜனாதிபதித் தேர்தலில் பொதுக் கொள்கையாக தமது பக்கக் கூட்டணியினால் வலியுறுத்தப்பட்டமையால் அது நீக்கப்படுவதையே தமிழ்க் கூட்டமைப்பும் வற்புறுத்துகின்றது.

இந்தப் பின்புலத்தில் இந்த இரண்டு எதிரெதிர் துருவ நிலைப்பாடுகளுக்கு நடுவில் ஒரு கலப்பு ஏற்பாட்டைச் செய்யும் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

புதிய, உத்தேச அரசமைப்

(03 ஆம் பக்கம் பார்க்க)

## சிறுவர், முதியோர் பராமரிப்பு பயிற்சி; விண்ணப்பிக்கலாம்

தேசிய பயிலுநர் தொழிற் பயிற்சி அதிகாரசபை மற்றும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை என்பன இணைந்து நடத்தும் சிறுவர் பொதுப் பராமரிப்பு மற்றும் முதியோர் பொதுப்பராமரிப்பு பயிற்சிகளுக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

இந்தப்பயிற்சி இலவசமாக நடத்தப்பட உள்ளன.

இந்தப் பயிற்சி நெறிக்கு 16 வயதுக்கு மேற்பட்ட க.பொ.த. சாதாரணதரம் வரை கல்வித் தகைமை உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம். 25 மாவட்டங்களைச் சேர்ந்தோரும் இந்தப் பயிற்சி நெறியில் இணைந்து கொள்ளமுடியும். யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த விண்ணப்பதாரிகள் சுயவிவரங்கள் அடங்கிய சுயமாகத்தயாரித்த விண்ணப்பத்தை இல.44, சோமசுந்தரம் வீதி, சுண்டுக்குளி யாழ்ப்பாணம் என்றமுகவரிக்கு அனுப்புமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# காணாமற்போனோர் விவரங்களை 'கோட்டா'வாலேயே வழங்க முடியும்!

## முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா கூறுகிறார்



கொழும்பு, ஜூன் 03

காணாமல்போனோர் தொடர்பான விவரங்களை வழங்க, தற்போதைய அரசால் முடியாது. ஆனால், பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷவால், அவர்கள் தொடர்பான விவரங்களை வழங்க முடியும். எனவே, காணாமற் போனோர் தொடர்பான அலுவலகம் ஒன்றை அமைத்து, கோட்டாபய ஊடாக, காணாமற்போனோர் தொடர்பில் ஆராய முடியும் என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

காணாமற்போனோர் விடயங்கள் தொடர்பில், சர்வதேச ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அதில் அவர், தொடர்ந்து கூறியுள்ளவை வருமாறு:-

தமிழர் தாயகப் பகுதியில், இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட பிள்ளைகள், இரகசிய முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று குற்றஞ்சாட்டுகின்ற பெற்றோர், அந்த இரகசிய இடம் தொடர்பிலான தகவலை ஜனாதிபதிக்கு வழங்கினால், அந்தவிடத்துக்கு அவர்களை அழைத்துச்செல்ல அரசு நடவடிக்கை எடுக்கும்.

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் உண்மையிலேயே உயிருடன் இருக்கின்றார்களா அல்லது உயிரிழந்து விட்டார்களா என்பது தொடர்பில், தேடிப்பார்க்க வேண்டும். எனக்குத் தெரிந்தமட்டில், அவ்வாறான வர்கள் எவரும், முகாம்களில் மறைத்துவைக்கப்படவில்லை.

ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தின் போது, அவர்கள் அழைத்துச் செல்லப்பட்டு கொலை செய்யப்பட்டிருக்கலாம். அது பற்றி எனக்குத் தெரியாது. ஆனால், அப்போது அவர்களைப் பொறுப்பேற்றிருந்தால், அப்போதே அவர்களைக் கொன்றிருப்பார்களே தவிர, இவ்வளவு வருடங்களாகத் தடுத்து வைத்திருக்க மாட்டார்கள்.

காணாமற்போனவர்கள் உள்ளனர் என்று, பட்டியலிட்டுக் கூறுவதற்கு, இந்த அரசால் முடியாது. இராணுவமே இந்த விவரங்களை அறிவிக்க வேண்டும். அவர்களே இல்லை என்று கூறும் நிலையில், காணாமற்போனோர் தொடர்பில், அரசு எங்குபோய் தேடியறிவது?

ஆனால், கோட்டாபய ராஜபக்ஷவால், இது தொடர்பில் தெரிவிக்கமுடியும். எனவே, காணாமற்போனோர் தொடர்பான அலுவலகம் ஒன்றை அமைத்து, அதன் ஊடாக யார் காணாமல் போனவர்கள் என்பதை ஆராய வேண்டும்.- என்றார். (எ)

## நாளை மின் தடை

உயர்அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்புவேலைகளுக்காக நாளை ஞாயிற்றுக்கிழமை-

காலை 8 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை யாழ்.பிரதேசத்தில் சட்டநாதர் வீதி, பருத்தித்துறை வீதியில் கல்வியங்காட்டு சந்தையிலிருந்து நல்லூர் கோவில் வரை, நல்லூர் குறுக்கு வீதி, செம்மணி வீதி, கச்சேரி நல்லூர் வீதி, கனகரட்ணம் வீதி, திருமகள் வீதி, மலர்மகள் வீதி, கலைமகள் வீதி, பூமகள் வீதி, சாஸ்திரியார் வீதி, நடுத்தெருலேன், நாவலர் வீதி, நொத்தாரிஸ் லேன், வேலப்பர் வீதி, புவனேஸ்வரி அம்மாள் வீதி, புறூடி லேன், ஸ்ரான்லி கல்லூரி வீதி, சுப்பிரமணியம் வீதி, முதலியார் வீதி, பாரதி லேன், புங்கன்குளம் வீதி ரயில்வேக் கடவை வரை, நாயன்மார் வீதி, குகன் வீதி, பொன்னம்பலம் வீதி, நாவலர் வீதியில் மாம்பழம் சந்தியிலிருந்து நல்லூர் குறுக்கு வீதி வரை, A9 வீதியில் பாரதி வீதியிலிருந்து செம்மணி வளைவு வரை,

நெடுங்குளம் வீதி ரயில்வேக் கடவை வரை, முள்ளி, நாவலடி, பூம்புகார், அரியாலை கிழக்கு, இராமநாதன் வீதி, அரசடி வீதி, வைமன் வீதி, கோவில் வீதி, மாட்டின் வீதி சந்தியிலிருந்து A9 வீதி வரை, நல்லூர் கோவிலடி, நக்கா வீதி, மருதடி வீதி, வலந்தலைச் சந்தி, சிவகாமி அம்மன் கோவிலடி, மருதபுரம், வியாவில், கருங்காலி, காரைநகர் சிவன் கோவிலடி, பொன்னாலை கிருஷ்ணன் கோவிலடி, பொன்னாலை வீட்டுத் திட்டம், யாழ்.பல்கலைக் கழக விஞ்ஞான பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இயற்கை விஞ்ஞான பீடம், பிரிட்டிஸ் கவுன்சில், நாவலர் வீதி தியாகி அறக்கொடை நிலையம், Cey-Nor பவுண்டேஷன் லிமிற்ரெட், மாவட்ட கடற்றொழில் கூட்டுறவுச் சங்கம், கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம், SOS சிறுவர் பூங்கா, அரியாலை ஈசல் அன்ட் மோட்டார் என்ஜினியறிங் பி.எல்.சி, நாயன்மார்கட்டு Carlton Sports Network (CSN), சங்கன் கொங்கிறீட் மிக்ஸர் பிளான்ட் ஆகிய இடங்களிலும்

வவுனியா பிரதேசத்தில் கந்தசுவாமி கோவில் வீதி, மில் வீதி, 1ம் குறுக்குத்தெரு, 2ம் குறுக்குத்தெரு, சூசைப் பிள்ளையார்குளம், பஜார் வீதி, ஓவியா விடுதி. இராணி அரிசி ஆலை, லங்கா அரிசி ஆலை, S.V.R. அரிசி ஆலை ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில் விடத்தல்தீவு கிராமம், தேவன்பிட்டி, வெள்ளாங்குளம், கள்ளியடி, இலுப்பைக்கடவை, மூன்றாம்பிட்டி, கணேசபுரம், வெள்ளாங்குளம் நீர்ப்பாசனத் திணைக்களம், விடத்தற்தீவு வைத்தியசாலை, கணேசபுரம் இராணுவ முகாம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும் என்று மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (இ)

## மூதூர் சம்பவத்தை இனவாதமாக்காதீர் குற்றவாளிகள் தப்பித்துவிட முடியாது!

### தேசிய சகவாழ்வு அமைச்சர் மனோகணேசன் கூறுகிறார்

திருகோணமலை, மூதூர் பிரதேசத்தில் மூன்று சிறுமிகள் துஷ்பிரயோகப்படுத்தப்பட்டமை தொடர்பில் மேற்கொள்ளப்படும் விசாரணைகள் தொடர்பாக எவரும் மனக்கிலேசம் அடையத்தேவையில்லை. அதேபோல் எந்த ஒரு காரணத்துக்காகவும் குற்றம் இழைத்தவர்கள் தப்பிவிட முடியாது. இதனைக் கொண்டு இனங்களுக்கு இடையில் பதற்றத்தைத் தோற்றுவிக்க வேண்டாம் என்று தேசிய சகவாழ்வு கலந்துரையாடல் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சர் மனோகணேசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இவை தொடர்பில், உரிய பொலிஸ் அதிகாரிகளுக்கு உரிய பணிப்புரைகள் வழங்கப்பட்டுள்ளன. இந்தத் துர்ப்பாக்கிய சம்பவம் தொடர்பிலான விசாரணை நடவடிக்கைகளை முதல்நாளில் இருந்து அவதானித்துடன் கண்காணித்து வருகின்றேன். குறிப்பாக பிராந்தியத்துக்குப் பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபர் நிமல் பெரேரா, பொலிஸ் அத்தியட்சகர் ஜகத்சந்திர குமார மற்றும் மூதூர் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆகியோருக்கு உரிய அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.-என்றார். (எ)

## ஜப்பானின் நிவாரணம் அரசிடம் ஒப்படைப்பு




ஜப்பானிலிருந்து அனுப்பப்பட்ட நிவாரணப் பொருள்கள் நேற்றுமுன்தினம் அரசிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இடர் முகாமைத்துவ அமைச்சில் நேற்று முன்தினம் இடம் பெற்ற இந்த நிகழ்வில், ஜப்பானுக்கான இலங்கைத் தூதுவர் கெனிச்சி சுகனுமா மற்றும் இடர் முகாமைத்துவ அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பா, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் ரவி கருணாநாயக்க ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதில் கூடாரத்துக்கான உபகரணங்கள், படுக்கை விரிப்புக்கள், நீர் சுத்திகரிப்பு இயந்திரங்கள், மின் பிறப்பாக்கி, மெத்தை மற்றும் நீர்த்தாங்கிகள் உள்ளடங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ)

## நீர்வேலி சி.சி.த.க. பாடசாலையில் முத்தமிழ் விழா

நீர்வேலி சி.சி.த.க. பாடசாலையின் முத்தமிழ் விழா எதிர்வரும் 6ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் தி.இரவீந்திரன் தலைமையில் இடம்பெறும்.

இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக சிவன் அறக்கட்டளை நிலைய ஸ்தாபகர் கணேஸ்வரன் வேலாயுதமும், சிறப்பு விருந்தினர்களாக யாழ். கிறீன்கிறாஸ் ஹோட்டல் முகாமைத்துவப் பணிப்பாளர் தியாகராஜா ஜெகசீலன், வலி. கிழக்குப் பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் கந்தையா நாகரத்தினம் ஆகியோரும் கலந்து கொள்வர். (ச)

## காணாமற்போனவர்களையும் வாக்காளராக பதிவுசெய்யலாம்!

காணாமல் ஆக்கப்பட்டவர்கள், அரசியல் கைதிகள் ஆகியோரையும் வாக்காளர் பெயர்ப் பட்டியலில் சேர்த்துக் கொள்ள முடியும் என்று தேர்தல்கள் திணைக்கள உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அவர்களது பெயர்கள் இதுவரை காலமும் பதிவு செய்யப்படாது இருந்திருந்தால், அவர்கள் இறுதியாகப் பதிவு செய்யப்பட்ட முகவரி தொடர்பான விவரங்களை வழங்கிப் பதிவு செய்ய முடியும் என்று அவர் சுட்டிக் காட்டினார்.


இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

2017ஆம் ஆண்டுக்குரிய வாக்காளர் பெயர்ப் பட்டியல் பதிவு தற்போது நடைபெற்று வருகின்றது. கடந்த மாதம் 15 ஆம் திகதி வீடு வீடாகப் பிசி படிவங்கள் விநியோகிக்கப் பட்டிருந்தன. நேற்று முன்தினம் தொடக்கம் அதனை மீளப்பெறும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

காணாமல் ஆக்கப்பட்டவர்கள், அரசியல் கைதிகளாக உள்ளவர்களையும் வாக்காளர் பெயர்ப்பட்டியலில் இணைத்துக் கொள்ள முடியும். அவர்களது விவரங்கள் கடந்த ஆண்டுகளில் அவர்களது குடும்பத்தவர்களால் வாக்காளர் பெயர்ப்பட்டியலில் பதிவு செய்யப்பட்டிருந்தால், இந்த ஆண்டும் அதேபோன்று பதிவு செய்ய முடியும்.

இதுவரை காலமும் பதிவு செய்யப்படாமல் இந்த ஆண்டு முதல் முறையாகப் பதிவு செய்வதற்கு விண்ணப்பித்தால், காணாமல் ஆக்கப்படுவதற்கு முன்னர் இறுதியாக வாக்காளர் பெயர்ப் பட்டியலில் எந்த முகவரியில் பதிவு செய்யப்பட்டிருந்தாரோ, அந்த முகவரி மற்றும் அவரது தேசிய அடையாள அட்டை இலக்கம் என்பவற்றை வழங்கிப் பதிவு செய்ய முடியும்.

அதேபோன்று தண்டனை விதிக்கப்பட்டோ அரசியல் கைதிகளும் தமது பெயர்களை வாக்காளர் பெயர்ப் பட்டியலில் பதிவு செய்ய முடியும். -என்றார். (எ)



வெப்பத்தினால் முல்லைத்தீவு நந்திக் கடலின் நீர்மட்டம் குறைய, வட்டுவாகல் பகுதியில் பல்லாயிரக் கணக்கில் மீன்கள் இறந்து மிதக்கின்ற காட்சி. (விரிவான செய்தி 5ஆம் பக்கத்தில்)




50 வருடங்களில் யாழ்ப்பாணம் பாலைவனமாகும் ஆபத்து; அதனால்

# நில உரிமைப் போராட்டங்களை விடுத்து நிலத்தைக் காப்பாற்றப் போராடுங்கள்!

## வடக்கு மக்களுக்கு அமைச்சர் சம்பிக்க ரணவக்க அழைப்பு



இன்னும் 50 வருடங்களில் யாழ்ப்பாணம் அரைப் பாலை வனமாக மாறும் அபாயம் சூழ்ந்து வருவதாக பெரு நகரங்கள் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க எச்சரித்துள்ளார்.

நேற்று கொழும்பில் நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பொன்றிலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

உலக வெப்ப மயமாதலின் கீழே இந்த அபாயம் காணப்படுகிறது. இதன்படி எதிர்காலத்தில் வடக்கு மாகாணம் கடுமையான வறட்சியை எதிர்கொள்ளுமென ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

இதனால் நில உரிமைகளுக்காக போராடிக் கொண்டிருப்பதை விடுத்து நிலத்தைப் பாதுகாக்க போராடுவோம் என வடபகுதி மக்களுக்கு அமைச்சர் ரணவக்க அழைப்பு விடுத்துள்ளார்.

யாழ்ப்பாணத்தின் சில முக்கிய மூலோபாய பகுதிகளை அபிவிருத்தி செய்யும் அதேசமயத்தில், சூழவுள்ள பிரதேசங்களின் சூழலியலையும் பேணும் திட்டத்தை அரசு முன்னெடுக்கின்றது என்றும் அவர் சொன்னார். (உ)

# யாழில் இருந்து தெற்கிற்கு 10 லொறிகளில் பொருள்கள்

## வடக்கு ஆளுநர் ஏற்பாட்டில் அனுப்பப்பட்டது





(எஸ்.நிதர்ஷன்)

தெற்கே இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வடக்கே யாழ்ப்பாணத்தில் இருந்து பத்துக்கு மேற்பட்ட லொறிகளில் நேற்று பொருள்கள் அனுப்பிவைக்கப்பட்டன.

யாழ்.மாவட்டத்திலுள்ள அரச அலுவலகங்கள் மற்றும் ஏனையவர்களால் சேகரிக்கப்பட்ட பொருள்கள் வடக்கு மாகாண ஆளுநரிடம் கையளிக்கப்பட்டு அவர் மூலம் நேற்று அனுப்பி வைக்கப்பட்டன.

வடக்கே யாழ்ப்பாணத்தில், யாழ்.மாவட்டச் செயலகம், பிரதேச செயலகங்கள், வர்த்தக நிலையங்கள், பொது அமைப்புக்கள் போன்றவற்றாலும் பொலிஸார் மற்றும் அரசியல் கட்சிகளாலும் சேகரிக்கப்பட்ட பொருள்கள் நேற்று வடக்கு மாகாண ஆளுநரிடம் கையளிக்கப்பட்டு அவை கொழும்புக்கு எடுத்துச் செல்லப்பட்டன.

யாழ்ப்பாணத்தில் மட்டும் பத்துக்கும் அதிகமான லொறிகளில் பொருள்கள் அனுப்பப்பட்டன. மேலும், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்களில் இருந்தும் நேற்றைய தினம் பொருள்கள் அனுப்பிவைக்கப்பட்டன.

யாழ்ப்பாணத்தில் இருந்து தெற்கிற்கு பொருள்களை அனுப்பிய நேற்றைய நிகழ்வில் யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் மற்றும் மாவட்டச் செயலக அதிகாரிகளும் கலந்துகொண்டனர். (ம)

# அரச ஊழியர்களுக்கு லீவு வழங்க ஏற்பாடு

கொழும்பு, ஜூன் 03

நாட்டின் பல பாகங்களிலும் ஏற்பட்ட வெள்ளப் பெருக்குக் காரணமாக, தமது வேலைத் தளங்களுக்குச் சென்று பணியாற்ற முடியாது இருக்கும் அரச ஊழியர்களுக்கு லீவு வழங்கப்படும்.

பொது நிர்வாக அமைச்சர் ரஞ்சித் மத்துமபண்டார இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

பல இடங்களில் வசிக்கும் அரச ஊழியர்கள் தமது பணி நிலையங்களுக்குச் சமுகம் அளிக்க இயலாத நிலையே தொடர்கிறது.

மழை இன்னமும் பெய்யக் கூடும் என்பதால், தமது இருப்பிடங்களில் இருந்து தத்தமது வேலைத் தளங்களுக்கு உடனடியாகப் பயணம் செய்ய இயலாதவர்களாக இருப்பதால், அவர்களுக்கு லீவு வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அவர்களுக்குப் பணி லீவு வழங்கி, நிலைமை சீரடைந்த பின்னர் சமுகம் அளிக்க ஏற்பாடு செய்யப்படும் என்று அமைச்சர் விவரித்துள்ளார். (அ)

## வெடிப் பொருள்களுடன் சிலாவத்துறையில் இருவர் சிக்கினர்

கொழும்பு, ஜூன் 03

திருகோணமலையில் இருந்து முல்லைத்தீவுக்குச் சென்ற பஸ்ஸை சிலாவத்துறையில் வழிமறித்து சோதனையிட்ட பொலிஸார், 8 டைனமைட்டுகள், வெடிமருந்துகள், 5 டைனமைட் குச்சிகளுடன் இருவரைக் கைது செய்துள்ளனர்.

புல்மோட்டையைச் சேர்ந்தவர்களான அப்துல் அசீப் ஹலென், ரகுமான் மஹ்துல்லா கிரிஸ்வி ஆகியோரே கைது செய்யப்பட்டவர்களாவர். (உ)

# மூடப்பட்ட பாடசாலைகள் திங்கள் முதல் மீண்டும்

வெள்ள அனர்த்தம் ஏற்பட்ட மாவட்டங்களில் கடந்த செவ்வாய்க்கிழமை முதல் மூடப்பட்ட பாடசாலைகள் நாளை மறுதினம் திங்கட்கிழமை முதல் மீண்டும் திறக்கப்படவுள்ளன.

பாதிக்கப்பட்ட மக்கள் தங்கும் முகாம்களாக பயன்படும் பாடசாலைகள் மற்றும் சேதமடைந்த பாடசாலைகள் தவிர்ந்த அனைத்து பாடசாலைகளும் திங்கள் முதல் கல்வி நடவடிக்கைகளுக்காக மீண்டும் திறக்கப்படுமென கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

சப்ரகமுவ, மேல் மற்றும் தென் மாகாணங்களில் உள்ள சகல பாடசாலைகளுக்கும் கடந்த செவ்வாய்க்கிழமை முதல் விடுமுறை வழங்கப்பட்டிருந்தமை தெரிந்ததே (உ)

## ஊடக அமைச்சுக்கு புதிய செயலாளர்

கொழும்பு, ஜூன் 03

நிதி அமைச்சின் செயலாளராகப் பணியாற்றிய பேராசிரியர் ஆர்.எச்.எஸ்.சமரதுங்க தற்போதைய அமைச்சரவை மாற்றத்திற்கு அமைய ஊடக அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஊடகத்துறை அமைச்சின் முன்னாள் செயலாளர் நிமல் போபகே இது தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையில், தமது பதவிக்கு புதியவர் ஒருவர் நியமிக்கப்பட்டமை தொடர்பாகத் தமக்கு அறிவிக்கப்படவில்லை எனக் கூறினார்.

எனினும், பேராசிரியர் ஆர்.எச். எஸ். சமரதுங்க புதிய ஊடக அமைச்சரான மங்கள சமரவீரவுடன் புதிய ஊடக செயலாளராகச் செயற்பட்டுவருகின்றார் எனவும் நிமல் போபகே தெரிவித்தார்.

எதிர்காலத்தில் தமக்கு புதிய நியமனம் கிடைக்கலாம் என அவர் நம்பிக்கை வெளியிட்டார். (ம)

## நீதியரசர் திடீர் மரணம்

மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசராகக் கடமையாற்றிய எச்.சீ.ஜே. மடவல திடீர் சுகவீனமுற்று நேற்று உயிரிழந்துள்ளார்.

நேற்று காலை நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு சமுகமளித்து விட்டு வீடு திரும்பும் போது இவர் திடீர் சுகவீனமுற்றுள்ளார். தனியார் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட போது சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.70 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.06.2017 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.